
ஏப்ரல் 16 - 22, 2006 April 16 - 22, 2006 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி வார மலர்

புத்தாண்டு வாழ்த்துகள்





## இலங்கையில் ஒரு காஷ்மீர்

## ஜெனிவாப் பேச்சுக்கு சவால்விடும் திருமலைத் தாக்குதல்

# மஹிந்தவின் உத்தரவாதம் நடைமுறையில் சாத்தியமா?

தென்னிலங்கை அரசியலில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் நேரடியாகத் தலையிடத் தொடங்கியுள்ளமையை அவற்றின் அண்மைக்கால அரசியல் நகர்வுகள் புடம் போட்டுக் காட்டுகின்றன. இந்த இரு நாடுகளும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் போட்டி போட்டு செயற்படுவதை பார்க்கும் போது இலங்கை ஒரு காஷ்மீரா என்றே எண்ணத்தோன்றுகின்றது.

### எந்தப் பேயுடனும் கூட்டு

ஜனாதிபதியாகப்பதவியேற்றதும் முதன்முறையாக இந்தியா சென்று திரும்பிய மஹிந்த இப்போது பாகிஸ்தானுக்குச் சென்று வந்திருக்கிறார். இதேபோன்று இவர் சீனாவுடனும் மிக நெருங்கிய வர்த்தக பாதுகாப்பு உறவுகளை உருவாக்கி வருகிறார்.

தமிழீழ மக்களின் தாயகப் போராட்டத்தை முறியடித்து சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறைப்பிடியை அவர்கள் மீது மேலும் வலுப்படுத்துவதற்கு ஜே.ஆரைப் போல் எந்தப் பேயுடனும் கூட்டுச் சேர்வதற்கு மஹிந்தவும் தயாராக இருப்பதையே அவரது அரசியல் நகர்வுகள் பறைசாற்றி அறிவிக்கின்றன.

அதுபோல இலங்கை அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இலங்கை அரசின் பலவீனமான நிலையைப் புரிந்துவைத்துள்ள இந்த அயல் நாடுகள் தமது அரசியல் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு இனப்பிரச்சினையில் மூக்கை நுளைத்து தமது புவிசார் அரசியல் நலன்களைப் பாதுகாக்க முயன்றுவருகின்றன.

தொடர்ந்து பாகிஸ்தான் பயங்கரவாதத்தை முற்றாக எதிர்க்கிறது என்று தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ், பயங்கரவாதத்துக்கு எதிராக தீவிர போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். பாகிஸ்தான் ஜனாதிபதி முஷரப்பும் இதே கருத்தையே வெளியிட்டுள்ளார்.

காஷ்மீர் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்பதே பாகிஸ்தானின் எதிர்பார்ப்பாகும். இதே பாகிஸ்தான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு இப்போது பயங்கரவாத முத்திரை குத்தி இருக்கிறது. தவிர, தமிழ் மக்களின் தாயகப் போராட்டத்தை முறியடிப்பதற்கு இராணுவ ரீதியான ஒத்துழைப்பு வழங்கவும் அது இணங்கியுள்ளது.

1971ஆம் ஆண்டு ஜே.வி.பியினரின் கிளர்ச்சியின் போது பாகிஸ்தான் துருப்பினர் ஜே.வி.பி கிளர்ச்சிக்காரர்களை கொன்று குவிக்க உதவி இருக்கிறார்கள். இதைப் போலவே தமிழ் மக்களின் போராட்டத்தை முறியடிக்கவும் ஆவன செய்வதாக பாகிஸ்தான் ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதிக்கு வாக்குறுதி அளித்துள்ளார் எனத் தெரிகிறது.

இலங்கைப் படையினருக்கு பயிற்சி தருவது, நவீன ஆயுதங்களைக் கையாளும் முறைகளைச் சொல்லிக் கொடுப்பது, ஆயுதங்களை வழங்குவது - இப்படி இலங்கையுடன் பாகிஸ்தான் செய்து கொண்ட பாதுகாப்பு ஏற்பாடுகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

வழமையான நல்லெண்ண விஜயமென்றும் கூறி அங்கு செய்யப்பட்ட உடன்பாடுகள் பற்றி மௌனமாய் இருப்பினும், ஜனாதிபதியின் இந்த விஜயமும் சீனாவுடனான அவரது நெருக்கமும் இந்தியாவை சீண்டி விட்டுள்ளன.

பாகிஸ்தான் சீனா விஷயத்தில் இந்தியா இலங்கையின் நகர்வுகளைக் கவனமாகவே அவதானித்து வருகிறது. எல்லா விவகாரங்களையும் அது தூர நோக்கோடுதான் பார்த்துக் கொண்டு இருக்கிறது.

இலங்கைக்கு பாதுகாப்பு உதவிகள் வழங்குவது குறித்து இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அடுத்தே சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளிலிருந்து அதிகளவு ஆயுத உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் இலங்கை அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருவது மறைக்க முடியாத உண்மையாகும்.

பாகிஸ்தானுக்கு இலங்கை ஜனாதிபதி மேற்கொண்ட விஜயமானது இந்தியாவுக்கு சில முக்கிய செய்திகளை விடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

### வாக்குறுதி என்னவாயிற்று

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றி பெறுமிடத்து இலங்கை விவகாரத்தில் இந்தியா அதிகளவு அக்கறை எடுக்கும் என்ற செய்தியை தனது தூதரகத்தினூடாக மஹிந்தவிடம் தெரிவித்திருந்தது.

ஒப்பந்தத்தினூடாக வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்ட போது புது டில்லியின் பூகோள அரசியல் நலன்களுக்கு ஏற்பவே அவ்வாறு இணைக்கப்பட்டது.

இவற்றையும், தனது பாகிஸ்தான் விஜயம் இந்தியாவில் ஏற்படுத்தியுள்ள முறுகல் நிலையையும் தெரிந்து வைத்துள்ள இலங்கை ஜனாதிபதி, இந்தியாவை தடவிக் கொடுத்து ஆசுவாசப்படுத்துவதற்காக தமது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை புதுடில்லிக்கு அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கிணங்க அமைச்சர் மங்கள சமரவீர விரைவில் புதுடில்லி சென்று அரச முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடாகி உள்ளது.

இதே வேளை வெளியுறவுத் துறை செயலாளர் தலைமையிலான குழுவொன்றும் இந்தியா சென்று வெளியுறவுத்துறை முக்கியஸ்தர்களைச் சந்திக்க சென்றுள்ளது. பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி மேற்கொண்ட விஜயம் குறித்து வெளியுறவுத் துறைக்கு விளக்கம் அளிக்கவே இந்தக் குழுவும் சென்றுள்ளது என ஊர்ஜிதப் படுத்தப் படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

### ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம்

தவிர எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அண்மையில் இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் சென்று திரும்பி இருக்கிறார்.

# இலங்கையில் ஒரு காஷ்மீர்

### தொண்டமான் + ரவூப் ஹக்கீம்

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் சந்தித்து புலிகளுடனான இ.தொ.காவின் உறவை வலுப்படுத்திக் கொள்வது சம்பந்தமான பேச்சுவார்த்தை நடத்தியதை இந்தியா விரும்பவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இ.தொ.க. தலைவர் தொண்டமானுடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர்

**நேதாஜி**

நிருபமாராவ் பேச்சுவார்த்தை நடத்தினார். இராஜதந்திர மரபுகளுக்கு அப்பால் சென்று இடம்பெற்ற இச்சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். இதைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இலங்கை அரசாங்கத்துக்கான ஆதரவு உறுதி செய்யப்பட்டது.

இதே போல அண்மையில் பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார். முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினையில் பிரதி அமைச்சர்களான ரிசாட் பதியுதீன், அமீர் அலி, எம். நஜீப் ஆகியோரை ஜனாதிபதி மஹிந்த ஆதரித்து வருவதும் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளின் பின்னணியில் அரசாங்கம் இருப்பதும் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தலையிடி கொடுத்து வரும் பிரச்சினைகளாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பான வழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட்டால் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக பாகிஸ்தான் தூதரிடம் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தார். இதை அடுத்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக பாகிஸ்தான் தூதுவர் ஹக்கீமுக்கு வாக்குறுதி அளித்ததுடன் ஜனாதிபதிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் இடம்பெற்றது.

### பாகிஸ்தான் பயங்கரவாதத்தை எதிர்க்கிறதாம்

அது மட்டுமல்ல, அண்மையில் ஜனாதிபதி மஹிந்த பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது அவருக்கு மகத்தான வரவேற்பளித்து கௌரவிக்கவும் அந்நாடு தவறவில்லையாம். இந்த விஜயத்தின் போது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டம் எனவும் பாகிஸ்தான் பகிரங்கமாக வர்ணித்துள்ளது.

பாகிஸ்தான் தலைவர்களுடன் மஹிந்த நடத்திய பேச்சுவார்த்தைகளைத்

### பெனாசிர் பூட்டோ

இங்கே ஒரு விடயத்தைப் பாகிஸ்தான் தலைவர்கள் நினைவில் கொள்வது நல்லது.

எண்பதில் பிற்பகுதியில் இஸ்லாமாபாத்தில் சார்க் உச்சி மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கையின் அந்நாள் ஜனாதிபதி ஜே. ஆர். இலங்கையில்



பயங்கரவாதப் பிரச்சினைக்குச் சாவு மணி அடிக்க ஒத்துழைப்புத் தருமாறு தெற்காசிய நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அப்போது சார்க் நாடுகளின் தலைவியாக இருந்த பாகிஸ்தான் ஜனாதிபதி பெனாசிர் பூட்டோ ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் வேண்டுகோளுக்குப் பதிலளித்துப் பேசினார். அப்போது பயங்கரவாதம் ஒரு பெரிய பிரச்சினை என்பதைதான் ஏற்றுக் கொள்வதாகக் கூறிய பெனாசிர் பூட்டோ, ஒரு நாணயத்துக்கு இரு பக்கங்கள் இருப்பதைப் போல அரச பயங்கரவாதம் என்று ஒன்று இருப்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னார். இதை பாகிஸ்தான் தலைவர்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்வது நல்லது என்றே இலங்கை வாழ் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

### இந்தியாவின் நகர்வுகள்

இலங்கை ஜனாதிபதியும் அரசாங்கமும் ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயம்

இந்தியா மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்த மஹிந்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிராந்திய வல்லரசுகளின் துணையுடனேயே

*இந்திய அரசாங்கத்தின் இலங்கை தொடர்பான கொள்கை அதன் பூகோள அரசியல் நலன்களை மையப்படுத்தி அமைகின்ற அதே வேளை தமிழ் நாட்டில் உள்ள 6 கோடி தமிழர்களின் விருப்பங்களை அந்நியப்படுத்தாத வகையிலும் அமைந்திருக்கும்.*

*இதைப் புரிந்து கொண்டுதான் நோர்வே கூட அடிக்கொரு தடவை இந்தியாவுடன் தொடர்பு கொண்டு சமாதான முன்னெடுப்பில் சாதக பாதகங்களை அதற்கு விளக்கி வருகிறது.*

முன்னெடுக்கப்படும் என அறிவித்தார்.

ஆனால் தமிழ் நாட்டில் இலங்கை தமிழ் சகோதரர்களுக்குச் சார்பான ஆதரவுப் பேரலை மீண்டும் வேகமாக எழுந்து வீசத் தொடங்கியிருப்பதை அடுத்து இந்தியா மஹிந்தருக்குத் தெரிவித்த நல்லெண்ண சமிக்ஞையை வாபஸ் பெற வேண்டியதாயிற்று.

### தென்னாசிய பொலீஸ்காரன்

இலங்கையின் பிரச்சினைகளில் இருந்து சிறிது விலகியிருக்கும் அதே நேரம் தென்னாசியாவுக்குதானே பொலீஸ்காரன் என்ற நிலைப்பாட்டில் இருந்து இந்தியா விலகப் போவதில்லை. அதனால்தான் இங்கு நடப்பவற்றை வெகு நுட்பமாக அவதானித்து வருகிறது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையை இரு பிரதான காரணிகள் தீர்மானிக்கின்றன.

1.இந்தியாவின் பூகோள அரசியல் நலன்கள்.

2.தமிழ் நாடு.

1987 ஜுலையில் இலங்கை இந்திய

எதிர்க் கட்சித் தலைவரும் இந்நாட்டின் இரு பிரதான கட்சிகளில் ஒன்றான ஐ.தே.கட்சியின் தலைவருமான ரணிலை அழைத்து இந்திய அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது எமது பிரச்சினையில் தனது நலன் சார்ந்த விடயங்களில் இந்தியா எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளது என்பதை புலப்படுத்தத்தக்க சான்றாக அமைகிறது.

ரணிலின் இந்திய விஜயத்தின் போது இலங்கையின் தென்பகுதியில் அரசியல் கட்சிகள் மத்தியில் இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமாக இணக்கப்பாடு உருவாக வேண்டியதன் அவசியம் பற்றி ரணில்விக்கிரமசிங்காவிடம் வலியுறுத்திக் கூறிய இந்தியத் தலைவர்கள், ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை அவரிடம் வலியுறுத்திக் கூறி உள்ளனர்.

சுருங்கக் கூறுவதானால் இந்திய அரசாங்கத்தின் இலங்கை தொடர்பான கொள்கை அதன் பூகோள அரசியல் நலன்களை மையப்படுத்தி அமைகின்ற அதே வேளை தமிழ் நாட்டில் உள்ள 6 கோடி தமிழர்களின் விருப்பங்களை அந்நியப்படுத்தாத வகையிலும் அமைந்திருக்கும்.

இதைப் புரிந்து கொண்டுதான் நோர்வே கூட அடிக்கொரு தடவை இந்தியாவுடன் தொடர்பு கொண்டு சமாதான முன்னெடுப்பில் சாதக பாதகங்களை அதற்கு விளக்கிவருகிறது.

இறுதியாக ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூறலாம். முன்பெல்லாம் இனப் பிரச்சினை பற்றி உலக நாடுகளில் ஏதாவதொன்று கதைத்தாலே அது உள்நாட்டு விடயம் என்று குரல் கொடுக்கும் அரசாங்கம், இன்று அயல் நாடுகளின் ராஜதந்திர பிடியில் சிக்கித் தவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பின்விளைவுகளைப் பற்றி சிந்திக்காது குறுகிய பேரினவாத சிந்தனைகளையும் அரசியல் இலாபங்களையும் முன்வைத்து சிந்தித்தன் விளைவே இது. தினை விதைத்தவன் தினையை அறுத்துத் தானே ஆக வேண்டும்.

# மஹிந்தரின் உத்தரவாதம் நடைமுறையில் சாத்தியமா?

இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறுமா?

ஒட்டுக் குழுக்களை ஒடுக்க அரசால் முடியுமா?

தளபதிகளின் போக்குவரத்து இடம்பெறுமா?

இத்தகைய கேள்விகள் எழுந்த நிலையில், ஜெனிவா இணக்கப் பாட்டை நடைமுறைப்படுத்துவேன் என ஜனாதிபதி மஹிந்தர் வழங்கியுள்ள உத்தரவாதம் சாத்தியமாகுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

**ஜெனிவா இணக்கப்பாடு**

ஜெனிவாவில் கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் 23ஆம் திகதிகளில் இடம்பெற்ற பேச்சுகளின் போது அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருந்தது.

அந்த இணக்கப்பாட்டின் பிரகாரம்-

*யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக அமுலாக்கம் செய்திருக்க வேண்டும்.

* ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும்.

* விடுதலைப் புலிகளின் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் பணியை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், பேச்சுகள் இடம்பெற்று, வழங்கப்பட்ட கால அவகாசம் முடிய இன்னமும் சில தினங்கள் இருக்கும் போதே இணக்கப்பாடு நடைமுறைக்கு வரவில்லை.

இந்த இணக்கப்பாட்டுக்கு மாறாக வடக்கு - கிழக்கில் நெருக்கடி நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைகளில் ஈடுபடுவதில்லை என இரு தரப்பினரும் ஜெனிவாவில் கண்ட இணக்கப்பாட்டின் படி விடுதலைப் புலிகள் பற்றுறுதியுடன் அதைக் கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால், அதற்கு மாறாக அரசுத் தரப்பு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு, விடுதலைப் புலிகளை யுத்தத்துக்கு சீண்டி அழைக்கும் வகையிலான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது.

**விக்னேஸ்வரன் படுகொலை**

கொலைகள், ஆள்கடத்தல், தேடுதல்கள், இராணுவ நெருக்குவாரங்கள் என அரசுத் தரப்பு கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளின் உச்சக் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையில் தேசப்பற்றாளர் மாமனிதர் வி.விக்னேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ள யுத்த நிறுத்த சூழலைத் தக்க வைக்கவேண்டுமானால், உடன் அரசு செயலில் இறங்க வேண்டும் என நோர்வேத்தரப்பு ஊடாக விடுதலைப் புலிகள் செய்தி ஒன்றை அரசுக்கு கடந்த வாரம், அதாவது கடந்த 5ஆம் திகதி விடுத்திருந்தனர்.

வன்னிவந்த நோர்வேயின் விசேட தூதர் ஜோன் ஹன்சன் போவர் விடுதலைப் புலிகளின் குழுவுடன் நடத்திய பேச்சின் போது இச்செய்தியை புலிகளின் தலைமைப்பீடம் விடுத்திருந்தது.

'ஜெனிவாவில் காணப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த கால அவகாசம் உள்ளது.'

'அந்த இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தி அரசு நல்லெண்ணச்



சமிக்ஞையை வெளிக்காட்ட வேண்டும்.'

'அப்போது தான் ஜெனிவாவில் அடுத்த கட்டப் பேச்சுகளுக்கு வாய்ப்பு இருக்கின்றது' என்ற செய்தியையே விடுதலைப் புலிகள் அரசுக்கு விடுத்தனர்.

மறுநாள் இச்செய்தியுடன் விசேட தூதர் ஜோன் ஹன்சன் போவர் அனுசரணைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் சகிதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். சுமார் இருமணி நேரம் நடந்த இச்சந்திப்பின் போது ஜெனிவா உடன்பாட்டை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டினார்.

இச்சந்திப்பின் விவரங்களை விசேட தூதர் போவர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் மதியுரைஞருமான அன்டன் பாலசிங்கத்திடம் எடுத்து விளக்கியுள்ளார்.

**ஜனாதிபதியின் உறுதிமொழி**

ஜெனிவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு தம்மால் இயன்ற அனைத்தையும் தாம் செய்வார் என்ற ஜனாதிபதியின் உறுதிமொழி நோர்வே விசேட தூதர் மூலம் பாலசிங்கத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இவ்விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் எழுப்பியுள்ள அம்சங்கள் குறித்து



திட்டவட்டமான - தீர்க்கமான - உறுதியான நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுப்பாராக இருந்தால் அடுத்த சுற்றுப் பேச்சில் நிச்சயம் பங்குபற்றுவர் என விடுதலைப் புலிகள் நோர்வேத் தரப்புக்குக் கூறியுள்ளனர்.

ஒட்டுக்குழு விவகாரம், போராளிகளின் நடமாட்டம், அரசியல்பணி போன்ற முக்கிய விவகாரங்களை உடன் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி படை அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார் எனச் செய்திகள் வெளியான போதும் - களத்தில் எந்தவித மாற்றங்களையும் காணவில்லை.

குடாநாட்டில் பகலிலும் இரவிலும் கூடுதலான படையினர் வீதிகளில் இறக்கப்பட்டுள்ளனர். வீதியில் செல்பவர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

**படையினரின் நடமாட்டம் குடாநாட்டில் அதிகரிப்பு**

இரவு நேரங்களில் வீதிகளில், பற்றைகளுக்குள் பதுங்கிக் கிடக்கும் படையினர் அவசர வேலைக்காக பயணிப்போரை கடும் சோதனைக்கும் விசாரணைக்கும் உட்படுத்துகின்றனர்.

இரவு நேரங்களில் அவசர தேவைக்குக் கூட வீதியில் இறக்கமுடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் அச்ச நிலை மீண்டும் உருவாகியுள்ளது.

ஒட்டுக் குழுக்களை கட்டுப்படுத்துவதாக - ஒடுக்குவதாக - ஜனாதிபதி உறுதிமொழியை நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்கு வழங்கியபோதும் - ஒட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் பகிரங்கமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவது, ஆட்களைக் கடத்துவது போன்ற செயற்பாடுகளை ஒட்டுக்குழுக்கள் மேலும் தீவிரமாக்கியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள அச்ச நிலை மேலும் மேலும் அதிகரிக்கின்றதே தவிர குறைவடைந்ததாக இல்லை.

அடுத்த கட்டப் பேச்சுகள் சுமுகமாக நடைபெறக் கூடிய புறச்சூழல் விரைவாக உருவாக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசு விரைந்து செயற்பட வேண்டும்.

வெறுமனே உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்குவதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது.

**- யாழவன் -**

ஜெனிவா பேச்சு இடம்பெற்று இணக்கப்பாடு கண்டவுடனேயே களத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்குமானால், இன்று உருவாகியுள்ள நெருக்கடி நிலை தவிர்க்கப்பட்டிருக்கும்.

பேச்சில் காணப்பட்ட இணக்கப்பாட்டைக் கிடப்பில் போட்டுவிட்டு, பாகிஸ்தான், இந்தியா எனப் பயணம் மேற்கொண்டு யுத்தத்துக்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு -பேச்சுக்குச் சில நாள்கள் இருக்கும் போது அதைச் செய்வேன் இதைச் செய்வேன் என மார்தட்டுவதில் பயன் கிட்டப் போவதில்லை.

பேச்சுகளில் பங்குபற்ற விடுதலைப் புலிகள் முன்னிறுத்தியுள்ள விடயங்களுக்கு அரசுத்தரப்பு அதிரடி நடவடிக்கைகள் மூலம் காய்நகர்த்தினால் மட்டுமே பேச்சுகள் சாத்தியமாகும் சூழல் காணப்படும்.

ஜனாதிபதி வழங்கியுள்ள உறுதிமொழியை - உத்தரவாதத்தை - விரைந்து செயற்படுத்தும் சாத்தியங்கள் காணப்படவில்லை என்று கூறப்படுகின்றது. அவ்வாறு அரசின் நிலைப்பாடு இருக்குமானால் பேச்சுகள் போச்சு என்ற நிலைதான் உருவாகும்.

தற்போதுள்ள அவசர - அவசிய - நிலையைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி தெற்கில் உருவாகியுள்ள சூழலைப் பயன்படுத்தி - படைத்தரப்பை தன்வசம் எடுத்து உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும். அவரால் உடனடி நடவடிக்கையை எடுக்க முடியுமா? இல்லையா? என்பதை அடுத்து வரும் நாள்கள் உணர்த்தும்.

இந்நிலையில் -

**கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்து**

கிழக்குத் தளபதிகள் வன்னி வந்து தலைமைப் பீடத்துடன் கலந்துரையாட போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பான விவகாரமும் சூடு பிடித்துள்ளது.

கடந்த அரசுடன் நடத்திய பேச்சுகளின் போது, கிழக்குத் தளபதிகள், பொறுப்பாளர்கள் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாட ஹெலி வசதிகளை அந்த அரசு வழங்கியிருந்தது.

அத்துடன்

அவர்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டுடன் - வழித்துணையுடன் - ஹெலிமூலமாகவும் - தரைவழி ஊடாகவும் - கடல்வழி ஊடாகவும் - வன்னிக்கு வந்து திரும்பக் கூடிய வசதி இருந்தது. யுத்த நிறுத்த உடன்பாட்டில் உள்ள சரத்தின் கீழ் இந்த வசதி செய்யப்பட்டிருந்தது.

தற்சமயம், கிழக்கில் ஒட்டுக்குழுக்கள் பகிரங்கமாகச் செயற்படுவதால், தளபதிகள், போராளிகள் தரைமார்க்கமாக வரக்கூடிய சூழல் இல்லை. தரைவழியாக பயணித்து பொறுப்பாளர்களை, போராளிகளை இழந்த பழைய நிலையை விடுதலைப் புலிகள் இன்னமும் மறக்கவில்லை.

ஜெனிவாவில் அடுத்த கட்டப் பேச்சுக்கு முன்னர் தளபதிகள், பொறுப்பாளர்களை தலைமை சந்திக்கும் நிகழ்வுக்கு அவர்கள் வருவதற்கு ஹெலி வசதி வழங்க அரசு மறுத்தால், கடல் வழியான போக்குவரத்தை ஏற்பாடு செய்யுமாறு விடுதலைப் புலிகள் நோர்வேயைக் கேட்டனர்.

வழமைபோன்று தமது கலங்களில் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் தளபதிகள், பொறுப்பாளர்கள் வன்னிவந்து திரும்ப ஏற்பாடு செய்யும் படியே விடுதலைப் புலிகள் கோரினர்.

ஆனால், அரசு தனது கடற்படையின் கலங்கள் மூலம் செல்லுமாறு கண்காணிப்புக் குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்த யோசனையை அடியோடு நிராகரித்துள்ள விடுதலைப் புலிகள் தமது கலங்கள் மூலம் வழமையாக - ஏற்கனவே இணக்கப்பாடு கண்டபடி - பயணிக்கும் நிலை ஏற்படும் என்றும் -

அவ்வாறு பயணிக்கும் போது ஸ்ரீலங்கா கடற்படை இடைமறிக்குமாயின் அது பாரிய யுத்தநிறுத்த மீறலாக அமையும் என்றும் - யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமது சொந்தக் கலங்களில் வன்னிக்கு பயணிக்கும் போது கடற்படை மறித்து சோதனை செய்ய முயன்றால் மோதல் வெடிக்கும். அதன் மூலம் யுத்த நிறுத்த சூழல் முடிவுக்கு வரும்.

இந்நிலையை கவனத்தில் எடுத்து ஜனாதிபதி மஹிந்தர் எடுக்கப்போகும் செயற்பாடுகள் தான் சமாதான சூழலைத் தக்கவைக்கும். அவரும் படைத்தரப்பின் செயற்பாடுகளுக்கு ஒத்துப்பாடுவாரேயானால், நாலாம் கட்ட ஈழப் போர் வெடிப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அடுத்துவரும் நாள்களில் நோர்வே மூலம் வழங்கிய உத்தரவாதங்களை எவ்வாறு ஜனாதிபதி கையாளப் போகின்றார் என்பதிலேயே நாட்டின் தலைவிதி தங்கியுள்ளது. இதுவே இன்றைய யதார்த்தநிலையாகும்.✱

# திருமலைப்படுகொலை: அடுத்தகட்டப்பேச்சின் நிலை?

**ஷோபா**

திருகோணமலையில் தமிழ்மக்களுக்காக ஒலித்துக்கொண்டிருந்த தமிழ்த்தேசியக்குரல் ஒன்றை எதிரி தனது துப்பாக்கிக் குண்டுகளால் நிறுத்திவிட்டான். எதிரியின் செயல்பாட்டுக்கு சவால் விட்டு முட்டுக்கட்டைபோட்ட தமிழ்த் தேசியவாதி ஒருவர் கொல்லப்பட்டுவிட்டார்.அவர்தான் கடந்த வெள்ளிக்கிழமை (07.04.2006) சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் விக்னேஸ்வரன்.

தமிழர் தலைநகர் திருமலையில் தமிழ்த் தேசியத்துக்கு குரல் கொடுத்தவர் எதிரியின் துப்பாக்கிக்கு பலியாகிவிட்டார். திருகோணமலை எப்பொழுதும் பதற்றமான சூழ்நிலையிலேயே காணப்படும் தமிழர் தாயகப்பகுதியாகும்.அங்கு சிங்களப்பேரினவாதிகளினது பார்வை எப்போதும் இருந்துவருகிறது.காரணம் தமிழர் தாயகமான வடக்குக்கிழக்கை பிரிக்கும் தந்திரோபாயமாக திருகோணமலையில் சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தி காலங்காலமாக நடத்தி வரும் திட்டத்தின் ஒரு பகுதியாக அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தினை கடுமையாக எதிர்த்து வந்ததுடன் பேரினவாதிகளின் செயல்பாடுகளுக்கு தடையாகவும் இருந்து வந்தார் விக்கினேஸ்வரன் அவர்கள்.

கடந்த ஆண்டு திருகோணமலையின் மையப்பகுதியில் சிங்களப்பேரினவாதிகள் இரவோடுஇரவாக புத்தர்சிலையை நிறுவி தமிழர் பகுதிக்குள்ளும் சிங்களக்குடியேற்றங்களை நிறுவும் ஆரம்பக்கட்டத்துக்கு நுழைந்த போதே கடும் எதிர்ப்பைக்காட்டி அதனை முறியடிப்பதில் வெற்றிகண்டவர் மாமனிதர் விக்கினேஸ்வரன். புத்தர்சிலை நிறுவிய காலகட்டத்தில் தமிழர் தலைநகரத்தில் தமிழ்மக்களின் நலன்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவராகவும் அவர் கடைசிவரை செயற்பட்டார். அத்துடன் எதிரிகளால் கடந்த டிசெம்பரில் சுட்டுக்கொல்லப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நாடாளுமன்ற வெற்றிடத்துக்கு நியமிக்கப்படவிருந்தவர்.

தமிழ்த் தேசியவாதிகளை கொன்றொழிப்பதன் மூலம் தமிழ்த் தேசிய எழுச்சியை அடக்கிவிட முடியுமென எதிரி நம்புகிறான். எனினும் அது பலிக்கப்போவதில்லை என்பதுடன் இன்னும் வீறுடன் விடுதலைப்பயணத்தைத் தொடருவது



உறுதி என்பதை கொலையாளிகள் புரிந்துகொள்ளுவார்கள். விக்கினேஸ்வரன் அவர்களின் படுகொலையானது நடந்துள்ள காலகட்டம் மிகவும் பாரதூரமானதாகும்.கடந்த ஜெனிவாப்பேச்சுகளின் போது அரசு இணங்கிய ஒட்டுப்படைகளின் ஆயுதக்களைவு நடைபெறாதிருப்பதுடன் தமிழ்த் தேசியப்பற்றாளர்கள் மற்றும் தமிழ் வர்த்தகர்கள் படுகொலை செய்யப்பட்டும் வருகின்றமை அரசின் இரட்டைவேடத்தையே அம்பலப்படுத்தி நிற்கிறது.

உண்மையில் சமாதானத்தின்மீது தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பற்றுறுதியுடன் இல்லை என்பதும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. விக்னேஸ்வரன் அவர்களின் படுகொலை அடுத்த சுற்றுப்பேச்சுகள் நடக்கவுள்ள நிலையில் புலிகளை சமாதானத் தடத்திலிருந்து விலகச் செய்யும் நோக்குடன் புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் வகையிலும் இராணுவப் புலனாய்வாளர்கள் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதனை இராணுவப் புலனாய்வுத் துறையின் செயற்பாடு என்று மட்டும் கருதமுடியாது.சிங்கள பேரினவாதத்தின் திட்ட மிட்ட சதி வேலைகளையே புலனாய்வுத் துறை செயற்படுத்திவருகிறது. திருகோணமலையை விழுங்குவதற்காகப் பேரின வாதிகள் பல்வேறு வடிவங்களில் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றன. நில ஆக்கிரமிப்பு, மொழித்திணிப்பு, வேலைவாய்ப்புப் பறிப்பு,மூலவளச் சுரண்டல் எனப்பல்வேறு வடிவங்களில் வருகின்ற அனைத்துச் செயற்பாடுகளையும் துணிச்சலோடும் புள்ளிவிவரங்களோடும் சர்வ தேசத்துக்கு எடுத்து விளக்கிவந்தார் விக்கினேஸ்வரன் அவர்கள்.இதனால் பேரினவாதிகளின் கழுகுப்பார்வைக்குள் அவர்விழுந்தார். விரைவாகவே அவரின் வாழ்வு முடியவும் இவை காரணமாகின.

உரிமைக்கான போர் வேள்வியில் உயர் தற்கொடையாகத் தம்முயிரையே வழங்கி விடுதலை வேட்கைக்கு உரமும் உயிரும் ஊட்டியிருக்கிறார் விக்கி அவர்கள்.

திருகோணமலையை தனது கொடூரப்பிடிக்குள் கொண்டுவரத் துடிக்கும் பேரினவாதிகளுக்கு, அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல் கள் பலத்த அடியாக அமைந்துவிட்டன.திருமலை நகரசபைக்கான தேர்தலில் பேரினவாதி ஒருவர் கூட உறுப்பினராகத் தெரிவு செய்யப்படாமல் அதற்கு இடமளிக்காமல் தமிழ்த் தேசியக்கட்சி வெற்றியீட்டியது.இது பேரினவாதிகளுக்கு பேரிடியாக அமைந்தது. அத்துடன் எதிரியின் திட்டங்களுக்கு விழுந்தஅடியாகவும் அது இருந்தது. இதனால் கடும் சீற்றமுற்றது சிங்களம். தற்போது திருமலையில் எழுச்சி பெற்ற தமிழ்த் தேசியத்துக்கு அண்மைக் காலங்களில் தீவிரபங்காற்றியவர் விக்னேஸ்வரன் ஆவார்.

விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்த் தேசியப் போராட்டத்துக்கு ஆற்றிய பங்கைக் கௌரவிக்கும் முகமாக விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மாமனிதர் என்ற உயர் விருதைவழங்கி மதிப்பளித்துள்ளார். இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''தமிழ்மக்களால் பெரிதும் போற்றப்பட்ட ஒரு தேசப்பற்றாளர்

(16ஆம் பக்கம் பார்க்க)




# வன்னி ரெக்

(வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம்) வழங்கும்

## கணினி அறிவூட்டல் ஆக்கங்கள்

* பெரும்பாலும் 9ஆம், 10ஆம் ஆண்டு மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப பாடவிதானத்தின் அடிப்படையில் வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகத்தின் மூன்றாம் தொகுதி மாணவர்களினால் தயாரிக்கப்பட்டது.

* மாணவர்கள் தங்களின் வீடுகளில் இருந்தவாறு இலத்திரனியல், வலையமைப்பு, மென்பொருள் துறைகளில் தொழில்நுட்ப அறிவியலை விருத்தி செய்ய அரியசந்தர்ப்பம்.

மிக விரைவில் எதிர்பாருங்கள்

Vanni Tech
Vanni Institute of Technology

சுடர் ஒளி வார இதழில் வாரா வாரம் வெளிவரும்

# முஸ்லிம் தனித்தரப்பு வழங்கப்படாவிட்டால் அரச தரப்பில் முஸ்லிம் பிரதிநிதி வேண்டாம்!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்குமிடையில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சிற்கு இன்னும் ஒரு வாரமே உள்ளது. இந்தப் பேச்சிலும் முஸ்லிம்களின் தனித்தரப்பு மறுக்கப்பட்டுவிட்டது.



பேரியல் அஷ்ரப்

வழமைபோல் முஸ்லிம் தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விட்டுக்கொண்டிருக்கும் முஸ்லிம் தலைவர்கள் இம்முறையும் அதனையே செய்கின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினரைச் சந்தித்துப் பேசுவதற்கான எந்தவொரு சாத்தியமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

கடந்த மாதம் இடம்பெற்ற முதலாம் கட்டப்பேச்சைக் காட்டிலும் இந்தப் பேச்சின் போதே தனித்தரப்பு வழங்கப்படவேண்டிய தேவை எழுந்துள்ளது. ஜிஹாத் எனும் முஸ்லிம் ஆயுதக்குழு மற்றும் தனி முஸ்லிம் படையணி ஆகிய இரண்டு பாரிய பிரச்சினைகள் முதலாம் கட்டப்பேச்சின் பின் தோன்றியுள்ளன.

முதலாம் கட்டப்பேச்சில் தனித்தரப்பு மறுக்கப்பட்டமையை ஏற்றுக்கொண்டாலும் இரண்டாம் கட்டப்பேச்சில் மறுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இரண்டு பாரிய பிரச்சினைகள் முஸ்லிம்கள் மத்தியில் தோன்றியுள்ள நிலையில் அவைபற்றிப்பேச இப்பேச்சுதான் முஸ்லிம்களுக்கு மிக முக்கியமான ஒன்றாகத் தெரிகிறது. அதுதான் உண்மையும்கூட.

இவற்றுள் ஜிஹாத் குழு இயங்குவதாக சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் புலிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்தை நிராகரிக்க வேண்டும் என்றால் தேசிய மட்டத்தைவிட சர்வதேச மட்டத்தில் எதாவது சமாதானப் பேச்சின் போது நிராகரிப்பதே பயன்தரும்.

அடுத்த பிரச்சினை "தனி முஸ்லிம் படையணி" இது தொடர்பாகவும் கருத்துத் தெரிவிக்க சமாதானப்பேச்சே சிறந்த தருணம்.

உண்மையில், இந்த இரண்டு பாரிய பிரச்சினைகளுக்கு முஸ்லிம் சமூகம் புதிதாக முகம்கொடுக்க நேர்ந்துள்ளது. இந்தப் பிரச்சினைகள் தக்க சமயத்தில் தீர்த்து வைக்கப்படாவிட்டால் முஸ்லிம்கள் நீண்ட காலப் பிரச்சினைகளை அதன் பக்க விளைவுகளாக எதிர்கொள்ளவேண்டி வரும்.

முதலாம் கட்டப்பேச்சில் தனித்தரப்பு மறுக்கப்பட்டமையை ஏற்றுக்கொண்டாலும் இரண்டாம் கட்டப்பேச்சில் மறுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இரண்டு பாரிய பிரச்சினைகள் முஸ்லிம்கள் மத்தியில் தோன்றியுள்ள நிலையில் அவைபற்றிப்பேச இப்பேச்சுதான் முஸ்லிம்களுக்கு மிக முக்கியமான ஒன்றாகத் தெரிகிறது. அதுதான் உண்மையும் கூட.

முதலாம் கட்டப்பேச்சில் முஸ்லிம் தனித்தரப்பைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட சிறு முயற்சிகள் கூட இம்முறை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும் என மேடைகளிலும் ஊடகங்களினூடாகவும் முஸ்லிம் தலைவர்கள் கூறிவருகின்றார்களே தவிர எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கைகளை எடுத்தபின்பும் தனித்தரப்பு மறுக்கப்பட்டால் அதை ஏற்றுக்கொள்ளாலாம். மற்றது நடவடிக்கைகள் எடுப்பது பற்றி யோசிக்கலாம்.

முதல் கட்டப்பேச்சுகளுக்கு முன் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தனித்தரப்புக் கோரிக்கையை முன்னெடுக்கப் போகின்றனர் என்ற அறிவிப்பு வெளியானது. அமைச்சர் பௌஸியின் தலைமையில் இவர்களிடையே சந்திப்பொன்றும் இடம்பெற்றது.

அச்சந்திப்பின் ஆரம்பத்திலேயே அது கருத்து முரண்பாடுகளால் குழப்பப்பட்டு தீர்மானம் ஏதும் எட்டப்படாமல் உடனே கலைந்தது. மீண்டும் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடி அதன் பிறகு ஜனாதிபதியைச் சந்திப்பதெனக் கூறப்பட்டது. அது எதுவும் நடக்கவில்லை.

ஆனால், இதன் பிறகு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸினர் மாத்திரம் தனியே சென்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர். அப்பேச்சின் போதுதான் தனித்தரப்பு இல்லை அரசகுழுவில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரைத் தருகிறோம் என்றார் ஜனாதிபதி. அதை அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸினர் அப்படியே ஏற்றுக் கொண்டனர்.

இவ்வாறுதான் முதல்கட்டப் பேச்சில் தனித்தரப்பு இல்லாமல்போனது. இரண்டாம் கட்டப் பேச்சிலும் இதுவேதான் நடந்துள்ளது.

முதல் கட்டப்பேச்சில் அரச குழுவில் முஸ்லிம் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் பேரியல் அஷ்ரப் அங்கு புலிகளைச் சந்தித்துப் பேசினார். தனித்தரப்பு தொடர்பாக முஸ்லிம் தலைவர்களை கிளிநொச்சியில் சந்தித்துப் பேச புலிகள் விரும்புகின்றனர் என்ற ஒரு விடயத்தைப் புலிகள் அவரிடம் கூறினர்.

அச்சந்திப்பின் விவரங்களை முஸ்லிம் தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக முஸ்லிம் கவுன்ஸிலின் ஏற்பாட்டில் கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிந்தது.

அங்கு முஸ்லிம் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தலைவர்களும் கலந்துகொண்டனர். அடுத்த கட்டப் பேச்சில் தனித்தரப்பைப் பெறுவதற்குப் புலிகளுடன் சந்திப்பை ஏற்படுத்த அனைவரும் இணக்கம் தெரிவித்தனர்; அதைத் தீர்மானமாகக் கொண்டனர்.

ஆனால், அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதைத் தவிர அத்தீர்மானத்தின்படி எதுவும் நடைபெறவில்லை. தனித்தரப்புப்பெற செய்யவேண்டிய முதல் வேலை புலிகளைச் சந்தித்துப் பேசுவதுதான். புலிகளே அதற்கு இணக்கம் தெரிவித்தும் முஸ்லிம் தலைவர்கள் அதைச் செய்யத் தவறிவிட்டனர்.

ஆனால், புலிகள் தம்மை அழைக்கவேண்டும் என இவர்கள் எதிர்பார்த்து நிற்கின்றமையை உணர முடிகிறது. தேவை முஸ்லிம்களுக்கா, புலிகளுக்கா?


எடுக்க வேண்டிய முயற்சிகளை எடுத்துத் தோற்றுப்போனால் கதைவேறு. முயற்சிகளே எடுக்காமல் தனித்தரப்பைத் தரவில்லையென்று புலிகள் மீதும் அரசு மீதும் குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை. இவ்விரண்டு தரப்பினரையும் இணங்க வைப்பதற்கான முயற்சியே ஆக்கபூர்வமான திட்டம்.

இனி நாட்களும் இல்லை. பேச்சைத் தொடங்க ஒரு வாரந்தான் உள்ளது. இந்த நிலையில் இரண்டாம் கட்டப் பேச்சில் முஸ்லிம் தனித்தரப்பு நிராகரிக்கப்படுவது உறுதியாகிவிட்டது. அது என்ன தானாக தட்டில் வைத்துக்கொண்டு தரும் விடயமா? வருந்திப் பெறும்விடயம்.

இதே வேளை, தனித்தரப்பு மறுக்கப்பட்டால் அரச குழுவில் முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் இடம்பெறக்கூடாது என்றொரு கருத்து இப்போது முஸ்லிம்கள் மத்தியில் நிலவி வருகிறது.

தனித்தரப்பு தொடர்பாக முஸ்லிம்கள் கொண்டிருக்கும் நிலைப்பாடு என்னவென்று அறிய ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் ஏற்பாட்டில் அட்டாளைச் சேனையில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

அக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட அனைவரும் முஸ்லிம் தனித்தரப்பு தேவை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தனர். கலந்துரையாடலின் இறுதியில் முஸ்லிம் தனித்தரப்பு வழங்கப்படாவிட்டால் முதல் கட்டப் பேச்சில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அரசகுழுவில் முஸ்லிம் பிரதிநிதியாகக் கலந்த கொள்ளக்கூடாது என அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற ஏகோபித்த தீர்மானத்தை எடுத்தனர்.



ஹக்கீம்

கேட்டது கிடைக்காவிட்டால் கிடைத்ததை ஏற்றுக்கொள்பவர்கள் முஸ்லிம்கள் என்ற அவப்பெயரை இல்லாதொழிக்க இத்தீர்மானம் வழிவகுக்கும்.

**எம்.ஐ.முபாறக்**


## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத் திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு விணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

2006 ஏப்ரல் 21 - 26 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - I/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

2006 ஏப்ரல் 02 - 03
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

2006 ஏப்ரல் 4 -10
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர்ஒளி

ஏப்ரல் 16 - 22, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## பொறுமை காக்கும் காலம் கடக்கிறது

ஒட்டுக் குழுக்களின் ஆயுதக்களைவு தொடர்பாக நோர்வே அரசும், கண்காணிப்புக் குழுவும் மஹிந்த அரசை எவ்வளவோ வலியுறுத்தியும் இதுவரை எந்தப் பலனும் ஏற்படவில்லை. ஒட்டுக் குழுக்களின் நாசகார வேலைகள் அதிகரித்து வருகின்றனவே தவிர குறைவதாகத் தெரியவில்லை.

ஒட்டுக் குழுக்கள் தற்போது திருகோணமலையில் மீண்டும் தமது கைவரிசையைக் காட்டியுள்ளன.

திருகோணமலையில் தமிழ் மக்களுக்காகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் துணிச்சலோடு குரல் எழுப்பிவந்த திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும் வங்கி அதிகாரியுமான வன்னியசிங்கம் விக்னேஸ்வரன், திருகோணமலை உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் உள்ள தமது வங்கி அலுவலக வாசலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பேரதிர்ச்சி ஏற்படுத்தி உள்ள விக்னேஸ்வரனின் மறைவு தமிழ்த் தேசியத்துக்கு ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

விக்னேஸ்வரனுக்கு மாமனிதர் விருது வழங்கப்படுவது தொடர்பாக தேசியத் தலைவர் விடுத்த அறிக்கையில், ''தாயக விடுதலையைத் தனது வாழ்வின் அதி உயர் இலட்சியமாக வரிந்து அந்த உயரிய இலட்சியத்துக்காக அயராது உழைத்த உன்னத மனிதரை தமிழீழத் தேசம் இன்று இழந்து விட்டது. எமது தாயகத்தின் தலைநகரில் விடுதலைக்காக ஒளிர்ந்த ஒரு சுதந்திரச் சுடர் அணைந்துவிட்டது. தமிழர் தேசியத்தின் ஒற்றுமைக்காகவும் ஒருமைப்பாட்டுக்காகவும் ஓயாது ஒலித்த ஒரு பெருங்குரல் இன்று ஒடுங்கிவிட்டது. தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் முதுகெலும்பாக நின்று முனைப்புடன் செயற்பட்ட ஒரு தமிழினப் பற்றாளர், எதிரியின் கோரமான தாக்குதலுக்குப் பலியாகி விட்டார்'' என்று தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்தவர்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம், மாணவர் கொலை, ஊடகவியலாளர் சுகிர்தராஜன் கொலை ஆகியவற்றை நீதிமன்றம், பேச்சுவார்த்தை என்ற ரீதியில் பொறுமை இழக்காது நிதானமாக அணுகிவந்தவர்; சகலரினதும் நன்மதிப்பைப் பெற்றவர்.

இப்படியாக சாத்வீக முறையில் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக குரல்கொடுத்தவருக்கு கிடைத்த பரிசுதான் துப்பாக்கி வேட்டுக்கள்.

சமாதானப் பேச்சுக்களைக் குழப்பி விடுதலைப் புலிகளை எப்படியாவது போருக்குள் இழுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படும் நாசகாரச் சக்திகளுக்கு விக்னேஸ்வரன் பலியாகி விட்டார்.

அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியில், பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ள இடத்தில் அமைந்த வங்கி ஒன்றில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. அதுவும் இப்படியான இடத்தில் பட்டப்பகலில் ஒரு கொலை நடப்பதென்றால் அதற்கு நிச்சயமாக அரசே பொறுப்பேற்க வேண்டும். தாம் பொறுப்பு அல்ல என்று பாதுகாப்புப் படையினர் கூறித் தப்பிவிட முடியாது.

ஒட்டுக் குழுக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்குகின்றன என திரும்பத் திரும்பக் கூறப்பட்டு சகல ஆதாரங்களுடனும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவும் பல தடவைகள் ஒட்டுக் குழுக்களின் செயற்பாட்டை உறுதிப்படுத்தி உள்ளது.

இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் கொலைகளில் ஒன்றையாவது அரச குற்றப் புலனாய்வுத் துறை கண்டுபிடித்துள்ளதா? கண்டுபிடிக்க முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இப்படியான தமிழர் ஒழிப்பு நாசகாரச் 'சக்திகளை அரச இயந்திரம் ஊக்குவிக்கிறதா?

பொறுமையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் தமிழர் தரப்பு ஏற்கனவே பல தலைமைகளை இழந்துவிட்டது. இன்னும் இழந்து போகும் பெரும் ஆபத்தை எதிர்நோக்கி வருகிறது.

பொறுமைக்கான காலம் கடந்து சென்று கொண்டிருப்பதையே சமீப நாட்களாக நிகழ்ந்து வரும் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

# சமாதானப் பேச்சு இறுதிப் போச்சு!

''மனித மனங்களிலேயே யுத்தங்கள் உருவாகின்றன. சமாதானத்துக்கான பாதுகாப்பும் அதே மனங்களிலேயே உருவாக வேண்டும்.''

-யுனெஸ்கோ அரசமைப்பு-

ஜெனிவாவில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கான ஆயத்த வேலைகளில் அரசதரப்பும் நோர்வேயும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியுள்ள இந்த நேரத்தில் யுனெஸ்கோ அரசமைப்பில் காணப்படும் மேற்கண்ட வாசகங்களை எடுத்துக் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகின்றோம்.

**சமாதான தங்குமிடம்**

நீண்டதூர கால் நடைப் பயணிகள் இளைப்பாறுவதற்கான தங்குமடங்கள் போல இரு தசாப்த காலமாகத் தொடரும் யுத்த நெருக்கடிக்குள் இடைக்கிடை தலைகாட்டி ஆறுதல் கொடுக்கும் தங்குமடமாகவே இலங்கையில் சமாதானமும் இருந்து வருகின்றது.

பேரினவாத அரசுகள் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உள்ளத் தூய்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படாமையே இதற்கான காரணமாகும்.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் சமாதான முன்னெடுப்பில் முக்கிய பங்கு வகிப்பவருமான எரிக் சொல்ஹெய்ம் கடந்த வாரம் இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தால் துன்புறுத்தப்படுவதாகத் தெரிவித்திருந்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. புதிய சமாதான அனுசரணையாளர் ஜோன் ஹன்சன் போவர் சகிதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுடன் கருத்துப் பரிமாறிய போது இன்னொரு விடயத்தையும் அவர் சுட்டிக் காட்டி இருந்தார். முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களை அமுல்படுத்த அரசாங்கம் தவறும் பட்சத்தில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள், முறிந்து போகும் அபாயம் இருப்பதாக அவர் கூறியிருப்பதே அந்த விடயம்.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களையாவிட்டால் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அதிகரிக்கும் என்று அவர் அபாயச் சங்கு ஊதியுள்ளார்.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களையாவிட்டால் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கும் என்று அவர் அபாயச் சங்கு ஊதியுள்ளார்.

**காரசாரமான கடிதப்பரிமாற்றம்**

இது விடயமாக இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹொக்லண்ட்டுக்கும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் அண்மையில் காரசாரமான கடிதப்பரிமாற்றம் இடம்பெற்றதாக அறியப்படுகிறது.

ஹக்ருப் ஹொக்லண்ட் தமது கடிதத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒட்டுக் குழுக்கள் உலாவருவதை உறுதி செய்துள்ளார். இதற்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் தனது பதில் கடிதத்தில் அரசாங்கத்திற்கு கரி பூசும் வகையில் ஒட்டுக்குழுக்கள் சம்பந்தமான விடயங்களை ஹொக்லண்ட் கூறி உள்ளதாகவும் அவர் கூறியுள்ளதற்கு கரி பூசும் வகையில் ஒட்டுக்குழுக்கள் சம்பந்தமான விடயங்களைக் கூறி உள்ளதாகவும் ஆதாரங்கள் எதுவும் கிடையாது எனவும் கூறி ஹொக்லண்டின் குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

அண்மையில் அலரிமாளிகையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அரச தூதுக்குழு அங்கத்தவர்களும் ஆலோசகர்களும் கலந்து கொண்ட சந்திப்பில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர்-யுத்தநிறுத்த ஒப்பந்தம் எவ்வகையிலும் அரசுக்குச் சாதகமாக இல்லை என்று கூறியிருப்பதுடன் தொடர்ந்தும் இவ்வொப்பந்தத்தை அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமா?

> தற்போதைய அரசாங்கத்தின் பேரினவாத சிந்தனைகளுக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தம் வளைந்து கொடுக்காது இருப்பதால் அதை அரசாங்கம் பயனற்றதென்று கூறி நிராகரிக்க முடியாது.

நடவடிக்கை எடுக்கப்படும் என பேசியும் இருக்கிறார் அவர்.

நிலைமை இவ்வாறு இருக்க இராணுவத் தரப்பும் அரசாங்கத்தின் மேல்மட்டத்திலுள்ளவர்களும் ஒட்டுக் குழுக்கள் இல்லை என எப்படிச் சாதிக்க முனைகின்றனர் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

இவர்கள் இவ்வாறான நிலைப்பாட்டில் இருக்க கிழக்கிலும் வவுனியாவிலும் ஒட்டுப்படைகள் செயற்படுவதை உறுதிப்படுத்தியுள்ள ஹொக்லண்ட் அக்குழுவினரை கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் பல தடவைகள் சந்தித்துப் பேசிய விடயத்தையும்



எனவும் கேள்வி எழுப்பி இருந்தார்.

ஆனால், இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் 2002ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டபோது நன்கு பரிசீலிக்கப்பட்டு பல தடவைகள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுலுக்கு வந்தது.

**தடம் புரளும் அரசாங்கம்**

தற்போதைய அரசாங்கத்தின் பேரினவாத சிந்தனைகளுக்கு ஒப்பந்தம் வளைந்து கொடுக்காது இருப்பதால் அதை அரசாங்கம் பயனற்றதென்று கூறி நிராகரிக்க முடியாது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ள விதிகளுக்கு ஏற்ப ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களை களைவதற்கு ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் இணங்கிய அரசதரப்பினர் இங்கு திரும்பி வந்ததும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒட்டுக்குழுக்கள் செயற்படவில்லை என்று எப்படிக் கூறமுடியும்.

ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய அரசதரப்பு இணங்கியதென்றால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒட்டுக்குழுக்கள் செயற்படவில்லை என்று எப்படிக் கூறமுடியும்.

ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் இணங்கிய அரசதரப்பினர் இங்கு திரும்பி வந்ததும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒட்டுக்குழுக்கள் செயற்படவில்லை என்று எப்படிக் கூறமுடியும்.

ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய அரசதரப்பு இணங்கியதென்றால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒட்டுக் குழுக்கள் இயங்குகின்றன என்பதை அரச ஏற்றுக் கொள்கின்றது. என்பதுதானே அர்த்தம். ஒட்டுக் குழுக்கள் இல்லை என்று கூறும் அரசாங்கத்தினால் ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக்களையும் விடயத்தில் எப்படி இணக்கப்பாட்டுக்கு வர முடிந்தது என்ற கேள்வி இயற்கையாகவே எழுகின்றதல்லவா?

ஜனாதிபதி மஹிந்தவும் வடக்கு-கிழக்கில் ஒட்டுக்குழுக்கள் இயங்குவதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு புட்டுக்காட்டியுள்ளார். அது மட்டுமன்றி வாழைச்சேனைப் பகுதியில் சாதாரண உடையில் செயற்படும் இந்தக் குழுவினரை பல தடவைகள் கண்காணிப்புக் குழுவினர் அடையாளம் கண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஒட்டுக்குழுக்களை இலங்கை அரசு ஊக்குவித்து ஆதரவு கொடுத்துவருகின்றது என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**பேச்சுவார்த்தை நடக்குமா?**

அதனால்தான் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கமும் ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களையும் விடயத்தில் அரசு கண் மூடிக்கொண்டு இருப்பதை பலமாகக் கண்டித்துள்ளார். இவ்விடயத்தில் அரசாங்கம் கைகட்டி இருக்குமானால் இரண்டாவது சுற்று ஜெனிவாப் பேச்சுகள் இடம்பெறுமா என்பது சந்தேகத்துக்குரியதே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதற்கு இன்னும் சொற்ப நாட்களே உள்ளன. இந்தக் காலத்தில் அரசாங்கம் ஒட்டுக்குழுகள் தொடர்பாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகளே அமைதிப் பேச்சு திட்டமிட்டபடி நடக்குமா என்பதைத் தீர்மானிக்கப் போகின்றன.


"அரசு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு சிறிய கால அவகாசமே உள்ளது. இந்த குறுகிய காலத்தில் அது தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். தெற்கில் இனவாதம் பேசிய கட்சிகளை மக்கள் நிராகரித்துள்ளதுடன். சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு தெளிவான ஆணையையும் வழங்கியுள்ளனர்.

இனிமேலும் சாக்குப் போக்கு சொல்லி இழுத்தடிக்காமல் தீர்க்கமான முடிவுகளுடன் சமாதானப்பேச்சுக்களை அவர் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்." இப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சமாதான முன்னெடுப்பில்

(16ஆம் பக்கம் பார்க்க)

# மலையகம் விழித்து எழுகிறது


சந்திர சேகரன்

காலாகாலம் மாறி மாறி வருகின்ற அரசுகளிடம் மண்டியிட்டு மடிப்பிச்சை கேட்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்று சேவை செய்கின்றோம் என்ற போர்வையில் ஊழல் செய்து வந்த மலையகத் தலைவர்களை இளைஞர்கள் உன்னிப்பாக அவதானித்து, அவர்களின் போலி நாடகங்களை இனம் கண்டுவிட்டனர். இதனால் இத்தலைமைகளை நம்பி நாம் இருப்பதை விட தனித்த இளைஞர் கூட்டமாக களமிறங்குவோம் என்ற முடிவுக்கு இளைஞர்கள் வந்து விட்டனர். இதில் முதல்கட்ட நகர்வையும் நகர்த்திவிட்டனர். பொகவந்தலாவையில் நடைபெற்ற உண்ணாவிரதம் இதனையே காட்டுகிறது.

கடந்த காலங்களிலே சந்திரிக்கா அம்மையாரின் அரசுடன் இ.தொ.கா.செய்துகொண்ட 14அம்ச உடன்படிக்கை என்ன ஆனது? அரச சேவை நியமனம், ஆசிரியர் நியமனம் என எண்ணாயிரம் நியமனங்கள் எங்கே? மலையக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்ற உறுதி மொழிகள் எங்கே? எத்தனை பேருக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன? - இப்படி மலையக இளைஞர்கள் கேள்வி கேட்கிறார்கள். இதற்கு பதில் என்ன?

தொடர்ந்தும் நாம் ஏமாற்றப்பட்ட இனமாக அல்லது ஏமாறும் இனமாக இருக்கப்போவதில்லை. எமது தலைவிதியை நாமே தீர்மானிப்போம். பொறுத்தது போதும் பொங்கி எழப் போகின்றோம் என்று புறப்பட்டு விட்டனர் மலையக இளைஞர்கள்.

மலையகத் தலைமைகள் தமது சுயநல நோக்கத்திற்காக நேரத்துக்கு நேரம் தம்மையும் தமது கொள்கையையும் மாற்றிக் கொண்டு அடிக்கும் கூத்துக்கு இனியும் மலையக இளைஞர்கள் ஆடத் தயாரில்லை. எந்தத் தலைவரும் எதைப்பற்றி வேண்டுமானாலும் முடிவெடுக்கட்டும் அதைப்பற்றி எமக்கு கவலையில்லை என மலையக இளைஞர்கள் புறப்பட்டுவிட்டனர். மலையக இளைஞர்மன்றம் என்று தன்னைக் காட்டிக் கொண்டு, தனித்து இயங்குகின்றோம் என்று கூறிவந்து ம.ம.மு.வுடன் இணைந்தவர்களுக்கு சாட்டையடி கொடுப்போம் என்று மலையக இளைஞர்கள் புறப்பட்டுவிட்டனர்.

மலையகத் தலைமைகள் தமது சுயநல நோக்கத்துக்காக மலையக மக்களை அடகுவைத்துவிடக் கூடாது, அரசுடன் இணைந்து மலையக மக்களை காட்டிக்கொடுக்கக் கூடாது என்று கூறி, மேல்கொத்மலைத் திட்டத்திற்காக உண்ணாவிரதம் இருந்து ஒரு நாடகத்தை அரங்கேற்றி, அதன் பின்னர் கொழும்பிற்கு வந்து மேல்கொத்மலை திட்டத்திற்கு பொறுப்பாக இருந்த சில அரசாங்கப் பிரதிநிதிகளுடன் திரைமறைவில் மந்திர ஆலோசனைகள் செய்து தமது நிலையை மாற்றிக் கொண்டு, பின்னர் மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து கொண்ட மலையக இளைஞர் மன்றம் அல்ல இது.

எதற்கும் அசைந்து கொடுக்காது, எந்த சக்திக்கும் துணைபோகாத அமைப்பாக செயற்பட்டால் புத்திஜீவிகளும் வரவேற்பர். அவ்வாறான ஒரு சக்தி மலையக படித்த இளைஞர் கூட்டத்திலிருந்து புறப்பட்டு விட்டது. அந்த சக்திதான் மலையக வேலையற்ற இளைஞர்,யுவதிகளுக்கான பேரவை.

இது கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி பொகவந்தலாவை ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் அருகே, மலையக இளைஞர் யுவதிகளுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை இந்தப் பேரவை நடத்தியது. இதில் பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு ஆதரவாக இவர்களின் பெற்றோரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

"அரசே வேலைவாய்ப்பு எமது அடிப்படை உரிமை,"

"அரசே நாம் பிச்சை கேட்கவில்லை, மலையக இளைஞர் யுவதிகளின் வயிற்றில் அடிக்காதே,"

"ஆசிரியர் நியமனத்திற்கு விண்ணப்பித்த 11 ஆயிரம் பேர்களும் ஏமாளிகளா?,"

"நாம் எத்தனை காலம் தான் பெற்றோருக்கு சுமையாக இருப்பது,"

"அரசியல் வாதிகளே ஏன் இந்த மௌனம்? "

என்று சுலோகங்களை ஏந்தியும் கோஷங்கள் இட்டும் தமது போராட்டத்தை இவர்கள் முன்னெடுத்துச் சென்றனர்.

இதன்போது பேரவையினால் ஒரு துண்டுப் பிரசுரமும் வெளியிடப்பட்டது. 'அரசே இலங்கையில் பின்தங்கிய சமூகமான மலையகப் பிரதேசத்திலே மிகவும் கஷ்டப்பட்ட - பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் க.பொ.த (உ/த) வரை படித்த - இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் தகுதிகளுக்கு ஏற்ப வேலைவாய்ப்புக் கிடைக்காமல் இருப்பது பெரும் அநீதி. மலையக இளைஞர் யுவதிகளுக்கு அரச துறை நியமனம் வழங்கப் போவதாகக் கடந்த இரண்டு வருடங்களாகக் கூறிக்கொண்டு வருகிறார்கள். ஏன் இந்த நியமனங்களை வழங்க முடியாது? இனியும் நாம் பொறுமையாக இருக்க முடியாது. எங்களின் உரிமைகளை வென்றெடுக்க முதற் கட்டமான அடையாள உண்ணாவிரதப் போராட்டமே இது. இதனையும் அரசு ஏற்காவிட்டால், மேலும் எங்கள் போராட்டம் மிக வலுவாகத் தொடரும்' -என்று அந்த துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது.

பொறுமையுடன் கேட்டும் கிடைக்காத இளைஞர்கள் தட்டிக் கேட்க முன்வந்ததைப் பாராட்ட வேண்டும். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இது புரியுமா மலையகத் தலைவர்களுக்கு. எந்த ஒரு நாட்டிலும் நடக்காத ஓர் அட்டூழியம் மலையக இளைஞர் யுவதிகளுக்கு நடந்திருக்கின்றது. அது தான் ஆசிரியர் நியமன விண்ணப்ப திரட்டல் கூத்து. 'படித்தஇளைஞர்கள் எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் என்ற ஒரு திரட்டையே மேற்கொண்டோம்.' என்று ஓர் அரசியல்வாதி கூறி அத்தனை இளைஞர்களையும் வாயடைக்க வைத்தார். இந்த இளைஞர்களின் வயிற்றெரிச்சல் சும்மா விடாது. ஊழல் செய்து உயர்ந்தவன் ஒரு நாள் தாழ்வான். அப்போது அவனைப் பார்த்து இந்த சமூகம் சிரிக்கும். செய்த அட்டூழியத்தை கண்டு தூற்றும்.

இளைஞர்களே! ஒருமித்து ஒன்றாக இணைந்து தட்டிக் கேட்போம். எமது பெற்றோர்களைத்தான் அடக்கி வைத்திருந்தார்கள். எம்மையும் அடக்கி ஒடுக்கவிடக்கூடாது. எம்மிடையே ஒற்றுமையை வளர்த்து ஒரு வலுவான அமைப்புடன் இணைந்து நாளைய மலையகத்தை நல்லதோர் புத்திஜீவிகள் உள்ள ஒரு கலையுகமாக மாற்றுவோம், சிந்திப்போம், செயற்படுவோம்.

மலையகத்தின் முதலாம் சக்தி என்று சொல்லுகின்ற இ.தொ.காவும் மலையக மக்கள் முன்னணியும் அரசுடன் இணைந்துகொண்டு பதவிகளைப் பெற்றுக் கொள்ள உள்ளனர் என்றும் ஏற்கனவே பல சந்திப்புகள் இடம் பெற்றுள்ளன என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இருப்பினும் மூன்றாம் சக்தியாக உருவெடுத்து இளைஞர் பட்டாளத்தைத் தன்னகத்தே இழுத்து வைத்திருக்கின்ற தொழிலாளர் விடுதலை முன்னணியின் போக்கு முதலாம், இரண்டாம் சக்திகளுக்கு பேரிடியாக அமைந்துள்ளது.

ஒழுங்கான அமைச்சு கிடைத்த காலத்திலேயே ஒன்றும் செய்யாத இவர்கள், இனி என்ன செய்யப் போகின்றார்கள்? சமூக சேவை அமைச்சராக இருந்த போதே, பல கோடி ருபாய்களை செலவு செய்யாது திறைசேரிக்கு திருப்பிக் கொடுத்த இவர்களுக்கு எதற்கு பதவி பட்டம்? மீண்டும் ஒரு முறை நம்பிக்கை நாணயமானவர்கள் என்று கூறி மக்களுக்கு சேவை செய்யாது பணத்தை திறைசேரிக்கு திருப்பிக் கொடுப்பதற்காகவா?

ஒட்டுமொத்த மக்களையும் அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்ற தலைமைகளே, உங்களுக்கு ஒரு நாள் மக்கள் பாடம் புகட்டுவர்.

## தலவாக்கலை தமிழர் வசம்

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையகத்தில் இ.தொ.கா., ம.ம.மு. ஆகிய இருகட்சிகளுக்கும் கணிசமான வெற்றி கிட்டவில்லை. இது அவர்களின் அரசியல் வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

பெரும்பான்மையினரின் ஆட்சியில் இருந்து வந்த தலவாக்கலை - லிந்துல நகரசபை இம்முறை தமிழர் வசம் கைமாறியுள்ளது. இதற்கு இங்குள்ள மக்கள் மிக தெளிவாக அறிந்து வாக்களித்ததே காரணமாகும். சின்னம் மாறிய தலைவர்கள் எண்ணம் மாறினார்கள். மலையக மக்களின் தோலை உரித்து தப்புக் கட்டி தண்டரா அடித்து ஆட்சிபீடமேறிக் கொண்டிருந்தவர்களுக்கு இம்முறை தக்க பாடம் புகட்டினார்கள் மலையக மக்கள். மலையகத்தில். இ.தொ.கா., ம.ம.முன்னணி இரண்டும் இம்முறை தோல்வியைத் தழுவிக் கொண்டதை வெளிக்காட்டாது, மக்களை மாற்று வழியில் இட்டுச் செல்ல நன்றி நவிலல் என்ற போர்வையில் தமது தோல்வியை பூசித் துடைத்து மெழுகி வருகின்றன.

ம.ம.முன்னணியையும், இதொ.காவையும் ஒப்பிடும் போது இ.தொ.காவிற்கே இம்முறை பாரிய இழப்பாக அமைந்திருக்கின்றது. இது இவ்வாறு இருக்க குறுகிய காலத்தில் கட்சி அமைத்து அரசியல் நீரோட்டத்தில் இறங்கியிருக்கும் தொழிலாளர் விடுதலை முன்னணியின் கரம் ஓங்கியிருக்கின்றது. இதற்குக் காரணம் உண்மையான வேலைத்திட்டமும் உண்மையான பிரசாரமுமே எனலாம். இந்தப் பிரசாரமும் வேலைத்திட்டமும் தொடர்ந்து நீடித்தால் வரவேற்கத்தக்கதே. காலத்திற்கு ஏற்ப அவர்கள் தம்மையும் மாற்ற நினைத்தால் அவர்களையும் மற்றக் கட்சிகளுடன் ஒப்பிடும் நிலைக்கு மலையக மக்கள் மாறிவிடுவர் என்பதை மறந்துவிட வேண்டாம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இணைந்த ம.ம.மு., இ.தொ.கா. ஆகிய இரண்டு கட்சிகளினதும் கூட்டு உடைபடும் தறுவாயில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதற்குக் காரணம் இ.தொ.காவை விட ம.ம.முன்னணி கூடிய ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளதே. இதனால்


ஆறுமுகன்

உள்ளூராட்சிச் சபைகளில் முக்கிய பொறுப்புகளை இரு கட்சிகளும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற போட்டா போட்டியில் ஈடுபட்டுள்ளன. நெடுங்காலமாக சேருவதும், பிரிவதுமே இவர்களின் நாடக பாணி என்பதை மலைய மக்கள் ஏற்கனவே உணர்ந்துள்ளனர்.

இதேவேளை முன்னொருபோதும் இல்லாதவாறு இம்முறை மலையகத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் மலையகத் தலைவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

எங்கே எமது அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமோ என்று தனது ஆதரவாளர்களைக் கூட்டி மந்திர ஆலோசனை செய்து வருகின்றனர். இது இனியும் பலிக்குமா மலையக மக்களிடம்?

அதேநேரம் வெற்றிக்களிப்பில் இளைஞர் கூட்டத்தினர் நகரப்பகுதியில் ஊலாவந்துகொண்டிருக்கின்றார்கள்.

உண்மை ஒருபோதும் சாகாது. தாழ்ந்த சமூகம் ஒரு நாள் உயரும். வீழ்ந்த சமூகம் ஒரு நாள் வளரும் என்பதை இவர்கள் மறந்துவிடக் கூடாது.

சொல்லுக்குச் சொல், வார்த்தைக்கு வார்த்தை, அடிக்கு அடி, மாற்றத்திற்கு மாற்றம் என்று விழித்தெழுந்து வீர நடைபோட முன்வந்த எம்மவர்களை நாமும் வரவேற்போம்.

**விஷாலி**

## தூக்கம் வர எளிய வழிகள்...

சரியாக தூக்கம் வராமல் தவிப்பவர்கள் தூக்கத்தை வலை வீசிப் பிடிக்க சில வழிகள் இருக்கின்றன...

தூங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்தால் சீக்கிரம் தூக்கம் வரும்.

ஏதாவது ஒரு கஷ்டமான புத்தகத்தைப் படித்துப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். மனம் ஆயாசமாகி, உடனே தூக்கம் வந்துவிடும்.

இரவில் புழுங்கல் அரிசிச் சாதம் சாப்பிடுங்கள். இதேபோல, சிக்கன் சூப், மட்டன் சூப் என ஏதாவது மாமிச சூப் சாப்பிட்டாலும் தூக்கம் வரும்.

தலையில் எண்ணெய் தேய்த்து சில நிமிடங்கள் ஊறவிட்டு, வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்து விட்டு வந்து, சூடாக எருமைப் பால் குடித்தால் போதும்... எந்த சூழ்நிலையிலும் சுகமான தூக்கம் வரும். காபி தூக்கத்தை விரட்டும் என்றால் பால் தூக்கத்தைக் கூப்பிடும்.

தயிர் சாப்பிட்டாலும் தூக்கம் வரும். பொதுவாக, ஆயுர்வேதம் 'தயிர் சாப்பிட வேண்டாம்' என்று வலியுறுத்துகிறது. அதிலும் இரவில் கண்டிப்பாக தயிர் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஆனால், தூக்கத்தை வரவழைக்கும் சிறந்த மருந்து தயிர்தான் எனும்போது என்ன செய்வது? எப்போதாவது, தூக்கம் வராத ராத்திரிகளில் மருந்து மாதிரி இதைச் சாப்பிட்டால் பாதகமில்லை.

கே: ஆண். வயது 45. சமீபத்தில்தான் திருமணமாகியது. மனைவிக்கு வயது 41. மனைவி கர்ப்பமாக இருக்கின்றார். குழந்தை எதுவித குறையுமில்லாமல் பிறக்குமா? கர்ப்ப காலத்தில் உடல் உறவு கொள்ளலாமா?

ப: குழந்தை குறையோடு பிறக்கும் என்றொரு சந்தேகம் இருந்ததாலேயே - இப்படி ஒரு வினாவை எழுப்பியிருக்கின்றீர்கள். மருத்துவர்களைப் பொறுத்தவரையில் 35 வயதுக்கு பின்னர் கருத்தரித்தலை (HIGH RISK PREGNANCY) பிரச்சினைக்குரிய கர்ப்பம் என்ற வகையில் சேர்த்துக் கொள்வார்கள். அதாவது 35 வயதுக்கு மேல் ஒரு பெண் கருத்தரித்தால் அவளது கர்ப்ப காலத்தின்போது - இரத்த அழுத்தம் அதிகரித்தல், நீரிழிவு நோய்க்குணம் தலைகாட்டல் பிரசவத்தின்போது சில பிரச்சினைகள் என்பன ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்கின்றார்கள்.



அதுபோல் இந்த வயது காலப் பகுதியில் - கருத்தரித்தலின் போது ஏற்படும் CHROMOSOME நிறமூர்த்த சேர்வையினால் ஒரு சில தாய்மாருக்கு மூளைவளர்ச்சி குன்றிய DOWN SYNDROME குழந்தைகள் பிறக்கலாம். அதைவிட - 41 வயதுக்கு பின்னர் இன்னொரு தரம் கருத்தரிக்க முடியுமோ என்பது சந்தேகமே. எனவே, இப்பொழுது கருத்தரித்துள்ள குழந்தை மிகமுக்கியமானது. எனவே இந்தக் குழந்தையை சாதாரண பிரசவிக்க முயலாமல் - மருத்துவர்கள் சிசெரியன் முறையில் அறுவை சிகிச்சை செய்து பிறப்பிக்க ஆலோசனை தருவார்கள்.

கர்ப்ப காலத்தில் சில பெண்களுக்கு பால் உணர்வுகள் அதிகரிக்கும். சிலருக்கு குறைவாக இருக்கும். பெண்கள் கருவுற்றிருக்கும் போது - ஏற்படும் உடல் மாற்றங்கள் சாதாரண முறையில் உடல் உறவு கொள்வதற்குத் தடையாக இருக்கலாம். ஆனால், கருவுற்ற சமயம் பெண்களோடு உடலுறவு கொள்ளக்கூடிய நிலைகளை உங்கள் குடும்ப வைத்தியர் மூலம் அறிந்து கொள்ளுங்கள். கர்ப்பகாலம் முழுவதும் உடல் உறவு கொள்ள தடை ஏதும் இல்லை. ஒரு சில மாதங்களில் - பிரசவ காலத்துக்கு கிட்டிய நாட்களில் உடலுறவு கொண்டால் சுகப்பிரசவம் நேரும் என்று நம்புகின்றார்கள். இந்த நம்பிக்கைக்கு சமீபத்தில் மருத்துவ ஆதாரங்கள் வலுவூட்டுகின்றன.

உடலுறவின்போது வெளியாகும் விந்தில் PROSTAGLANOIN என்ற சுரப்பு ஒன்று உண்டு. இந்தச் சுரப்புக்கு கருப்பை வாசலை - CERVIX ஐ - மென்மையாக்கி பிரசவ வலியை ஏற்படுத்தும் தன்மை உள்ளது என்று நிருபிக்கப்பட்டுள்ளது.

பெண் உறுப்புகளில் இரத்தக் கசிவு, வலி, கருப்பையில் பன்னீர் குடம் உடைந்து சிந்துதல், கருப்பை அதிக அசைவு (CONTRACTIONS) போன்றவை இருந்தால் - உடல் உறவு தவிர்க்கப்பட வேண்டும்.

கே: பெண். வயது 30. மார்பு முலைக் காம்பிலிருந்து நீர்போல் திரவம் சுரக்கின்றது. நசித்துப் பார்த்தால்தான் இப்படி ஏற்படுகிறது. இது நோயா? புற்று நோய்க்கு அறிகுறியா?

ப: நீங்கள் மணமானவரா, குழந்தை பெற்றவரா? கன்னிப் பெண்ணா என்று எது வித விவரமும் தரப்படவில்லை. இதனால் பொதுவாக முலைக்காம்பிலிருந்து ஏற்படும் சுரப்புகள் பற்றிய விவரங்களைத் தருகின்றேன்.

முலைக்காம்பிலிருந்து இரண்டு மார்பகங்களிலிருந்தும் அல்லது ஒரு மார்பகத்திலிருந்தும் நீர் போல் திரவம் சுரப்பதுண்டு. மார்பகத்தில் பால் சுரக்கும் சுரப்பிகள் நிறைந்துள்ளன. பால் சுரக்கப்படாத நேரத்திலும் இந்தச் சுரப்பிகள் நிறமற்ற திரவத்தை சுரப்பதுண்டு.

கன்னிப் பெண்கள் மார்பகக் காம்புகள் நசுக்கப்பட்டாலோ - மார்பகம் கசக்கப்பட்டாலோ - மார்புக் கச்சையினால் மார்பகக் காம்புகள் தூண்டப்பட்டாலோ கன்னிப் பெண்களுக்கு மெல்லியதான மங்கலான வெள்ளை நிறமுடைய அல்லது நீர்த்தன்மையான, பிசுபிசுக்காத, கையில் ஒட்டாத திரவம் சுரப்பதுண்டு. கர்ப்பகாலத்தில் சில வேளை பால் அல்லது பாலோடு கலந்த திரவம் சுரக்கும். கர்ப்பகாலத்தில் - பிரசவத்திற்கு அண்டிய காலப்பகுதியில் பால் கலந்த COLOSTRUM வகைத் திரவம் சுரக்கும். குழந்தைகள் பெற்ற பின்னரும் பல வருடங்களுக்கு திரவ சுரப்புகள் ஏற்படுவதுண்டு. ஆனால் - இரத்தம் - அல்லது இரத்தத்தோடு கலந்த சுரப்பு மார்பகப் புற்று நோய் காரணமாக ஏற்படலாம்.

FIBRUADENOMA என்ற புற்று சம்பந்தமில்லாத மார்பகக் கட்டிகள் பச்சை நிறமான சுரப்பைத்தரும். மார்பகத்தில் தொற்றுகள், சீழ்க்கட்டிகள் ஏற்பட்டால் துர்மணம் வீசும்; சீழ்த்தன்மையான திரவச்சுரப்பு ஏற்படும். அதுதவிர சில மருந்துகள் குறிப்பாக கருத்தடை மாத்திரைகள் உபயோகப்படுத்துபவர்களுக்கு நீர்த்தன்மையான சுரப்பு ஏற்படும். ஒழுங்கான மாதவிலக்கு வட்டம் நின்ற பின்னர் ஏற்படும் சுரப்புகள் - டாக்டரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டியவை. ஏனெனில் இவை அநேகமாக புற்றுநோயின் அறிகுறிகளாக இருக்கும்.

கே: ஆண். வயது 28. திருமணமாகவுள்ளேன். எனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணுடன் உடலுறவுகொள்ளும்போது விந்து நேரத்துடன் வெளியேறிவிடுகின்றது. அது மாத்திரமல்ல ஒரு நாளைக்கு இரு தடவைகளுக்கு மேல் உடலுறவுகொள்ள முடியாமலிருக்கின்றது. எமது நண்பர்கள் ஒரு நாளைக்கு ஐந்து தடவையாவது ஒரு பலசாலியான ஆண்மகன் உடலுறவு கொள்ள முடியும். அப்படி மனைவியைத் திருப்திப் படுத்தாவிடில் பாலியல் பலவீனம் என்று மனைவி நினைத்துவிடுவாள் என பயமுறுத்துகின்றார்கள். எனது இந்தப் பலவீனம் தீர பரிகாரம் கூறவும்.

ப: இன்று புனிதமாக கருதப்பட்ட தாம்பத்திய உறவு என்பது ஒரு ஜிம்னாஸ்டிக் விளையாட்டாகக் கருதப்படும் நிலைக்குச் சென்றுவிட்டது. உடலுறவின்போது உடலுறவு கொண்டாலும், மனமும் அதில் ஈடுபாடு கொள்ளவேண்டும். உணர்ச்சியின் வடிகாலாக உடலுறவின் பெறுபேறுகள் இருக்கலாம். ஆனால், இந்த உணர்ச்சி ஏற்படுவது மனதில். மனதானது உணர்ச்சிகளை உருவாக்கி - மூளையைத் தூண்டுவித்து - உடலுறவுக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கின்றது.

PELVIC PLEXUS எனப்படும் இடுப்புப் பகுதியில் உள்ள நரம்பு வலைப்பின்னலும் இரத்த ஓட்ட வலைப்பின்னலும் ஒழுங்காக இசைந்து இயங்கித்தான் - ஆண் பெண் உறுப்புகளைக் கிளர்ந்தெழச் செய்கின்றன. இந்தக் கிளர்ச்சியை ஒரு தரம் பெற்ற பின்னர் - நரம்பும் - இரத்தக் குழாய்களும் சோர்வடைந்துவிடும். ஆனால் திரும்பவும் மனமும், மூளையும் , நரம்பு மண்டலங்களும் தூண்டப்படின் - சோர்வடைந்த உறுப்புகள் உணர்ச்சி மேம்பட்டு புடைத்தெழலாம். ஆனால், அடுத்தடுத்து உணர்ச்சிகள் எழுந்து, அடங்கும்நிலை ஏற்படும் போது தசைகளைப்போல் அவையும் களைப்புறுவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே.

இந்நிலையில் ஜிம்னாஸ்டிக் முறையில் பலதடவை உறவுகொள்ள மனம் நினைத்தாலும் மனதின் விருப்பத்தை நிறைவேற்ற நரம்புகளும், இரத்தக் குழாய்களும் தயாரில்லை. இதனால் உறுப்பு சோர்ந்து விடலாம் அல்லது உடலுறவு கொள்ள முன்னரே விந்து வெளியாகிவிடலாம். எனவே, பலதடவை உறவுகொள்ளுவது என்பது உங்கள் மனோநிலை, உடல் நிலையைப் பொறுத்ததேயன்றி - அப்படி பல தடவை கொள்ளமுடியாமலிருப்பது ஒரு பாலியல் பலவீனம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

'இறைக்க இறைக்கத்தான் ஊறும்' என்ற கருத்து பாலியல் விஷயத்தில் தவறானது. பல தடவை உறவுகொள்வதுதான் வீரியம் என்ற கருத்தும் தவறானது. உறவின்போது தம்பதியர் இருவருக்கும் ஏகோபித்த நிலையில் - உச்சம் கிடைப்பதே எதிர் பார்க்க வேண்டிய விஷயம். இதுபற்றிப் பல நல்ல விஷயங்களை, இந்திய டாக்டர் ரெக்ஸ் தனது நூலில் விளக்கமாக எழுதியுள்ளார். வாங்கி படித்து புரிந்துகொள்ளவும்.

கே: எனது குழந்தைக்கு வயது 2 மாதம். திடீர் திடீரென்று வீரிட்டுக் கத்துகின்றாள். கத்தத் தொடங்கினால் தொடர்ந்து இருமணி நேரம் அல்லது கூடவோ கத்துகின்றாள். வயிற்று வலி, ஏதாவது பூச்சி - விஷ ஜந்து கடித்ததோ என்றெல்லாம் ஒவ்வொரு முறையும் நினைத்து டாக்டரிடம் தூக்கிச் செல்வோம். அந்த நேரத்துக்கு டாக்டர் தந்த மருந்துக்குக் குறையும். ஆனால் அடுத்த நாள் அதே நேரம் - அதிகமாக மாலைவேளையும் இந்தக் கத்தல் தொடர்கின்றது. இதனால் எமக்கு போதிய ஓய்வில்லை. நான் மனதாலும் உடலாலும் பலவீனமாகின்றேன். பசிக்குத்தான் கத்துகின்றாள் என்று பால் கொடுத்தாலும் ஒரு சொட்டுக் கூட குடிக்காமல் கத்துகின்றாள். எனது குறைதீர வழிசொல்லுங்கள்.

ப: பிறந்த குழந்தைகள் இப்படியாக குறிப்பாக - 3 மாதத்திற்கு முன்னர் காரணங்கள் எதுவுமில்லாமல் அழுவது வழக்கமாக உள்ளது. எதற்கு என்று இதுவரை மருத்துவ உலகம் ஒரு காரணத்தையும் கண்டறியவில்லை. உணவுக் குழாயில் நிறையக் காற்று இருப்பது (பால் குடித்தபின் குழந்தையைத் தோளில் சாத்தி ஏப்பம் வருவதற்கு அதன் முதுகில் மெதுவாகத் தட்டாமல் இருப்பதால் - பால் குடித்தபோது வயிற்றினுள் காற்றும் கூட சேர்ந்து செல்லலாம். ) காது, சிறுநீர் தொற்றுகள் ஏற்பட்டால் பால் அலர்ஜி , தலைமயிர் விரல்களில் சிக்கிக் கொள்ளல் போன்ற சில காரணங்களுக்கும் குழந்தைகள் அழலாம். இவை ஏதேனும் காரணமாக அறியப்பட்டால் - அவைகளுக்கு மருந்து செய்யவேண்டும்.

எது வித காரணமும் காணப்படாவிட்டால் இதனை டாக்டர் EVENING COLIC என்று சொல்வார்கள். இதற்கு எதுவித சிகிச்சையும் இல்லை. தாய்மார் சாப்பிடும் ஏதாவது உணவுகள் - இந்த அழுகைக்குக் காரணமாக இருக்கும். அந்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். அழும்போது குழந்தையைத் தூக்கிக்கொண்டு உலாத்துவது, தாலாட்டுவது அழுகையை நிறுத்தும். ஒலிக்கும் ரேடியோ, தொலைக் காட்சி, விசிறி என்பவற்றின் ஒலியைக் கேட்டு அழுகையை நிறுத்தும் குழந்தைகளும் உண்டு.

நீண்ட நேரம் அழும் குழந்தைகள் விரைவில் களைப்படைவார்கள். எனவே அழுகை முடிந்ததும் அவசரப்படாமல் மெதுவாகப் பாலூட்ட வேண்டும். எப்படியாகிலும் - 3 மாதம் கழிந்த பின்னர் இப்படிக் காரணமில்லாது அழுவதுதானாகவேமறைந்துவிடும். எனவே மனம் தளராதீர்கள்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
"சுடர் ஒளி"
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# திருமண வாழ்வும் பாலியல் பலவீனமும்!

# ஜீன் சிகிச்சை

மூன்றாம் உலகப் போர் மூண்டால் உலக நாடுகள் எந்த ஆயுதத்தை கையில் எடுக்கும்? யுரேனியக் குண்டுகள் என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆனால், துப்பாக்கிகள், குண்டுகள் போன்றவற்றையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னுக்கு நிற்பது 'ஜீன் தொரபி' தான். உயிரியல் விஞ்ஞானிகளின் இந்த நவீன மரபணுச் சிகிச்சை முறைதான் வரும் காலங்களில் போரையும், சமாதானத்தையும் தீர்மானிக்கப் போகின்றன.

'ஜீன் தொரபி' மூலம் எப்படிப்பட்ட நல்ல மனிதனையும் போராளியாக மாற்றிவிட முடியும். மனிதனின் மரபணுக்களின் அமைப்பை நாம் விரும்பும் படி சற்று மாற்றி அமைத்துவிட்டால் போதும். [illegible] நலன்கள் நிரம்பியவனாகவோ, [illegible] வாதியாகவோ [illegible] பமாக மாற்றிவிடலாம். [illegible] க்காவின் ஒத்துழைப்போடு இரவு, பகலாக இந்த 'ஜீன் தொரபி' யை உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள் உயிரியல் விஞ்ஞானிகள். அமெரிக்காவின் டெக்ஸாஸ் மகாணத்தில் அமைந்துள்ள 'சவுத்வெஸ்டர்ன்' மெடிக்கல் சென்டர் தனது 'ஜீன் தொரபி' ஆராய்ச்சியில் 75 சதவீத வெற்றியைப் பெற்றிருக்கிறது.

இந்த ஜீன் தொரபியை வைத்துக் கொண்டு என்னவெல்லாம் செய்யலாம் என்பதை ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளின் குழுத் தலைவர் ஆலிவியார் சொல்லும்போது "நமக்கு சந்தோசமும், நடுக்கமும் ஒருசேர உண்டாகின்றன. இந்த ஜீன் தொரபி முன்பே கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் ஹிட்டர், முசோலினி போன்ற பயங்கரவாதிகளை சாதுவாக மாற்றி காட்டுக்குள் தியானம் செய்ய அனுப்பியிருக்கலாம்" என்கிறார் அவர்.

அது எப்படி? ரொம்ப சிம்பிள். எப்படிப்பட்ட பயங்கரவாதியானாலும் அவனுடைய குணநலன்களைத் தீர்மானிப்பது ஜீன்கள் என்றழைக்கப்படும் மரபணுக்கள்தான். இந்த மரபணுக்கள்தான் மனிதனுடைய செயல்களைத் தீர்மானிக்கின்றன. மரபணுக்களின் அமைப்பை மாற்றியமைப்பதின் மூலம் அவனுடைய செயலையும் மாற்றியமைக்கலாம் என்கிறார் ஆலிவியார்.

இந்த நவீன 'ஜீன் தொரபி' மனித குலத்துக்கு ஒரு வகையில் வரப்பிரசாதம். மற்றொரு வகையில் மாபெரும் ஆபத்து.

கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றங்களில் ஈடுபட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களிடையே இந்த 'ஜீன் தொரபி' மேற்கொள்ளப்படுமானால் அவர்களின் மரபணுக்களில் பதிந்துள்ள ஆக்ரோஷமான எண்ணங்கள் மாற்றியமைக்கப்படும். இதனால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மட்டுமல்லாது அவர்களது சந்தேகங்களும் மோசமான பழக்க வழக்கங்கள் மரபு ரீதியாய் கடத்தப்படுவது தவிர்க்கப்படும்.

'ஜீன் தொரபி'க்கு ஆட்பட்டு சிறைச்சாலையை விட்டு வெளியேறுகையில் மனிதனின் பழைய



கொடூர சிந்தனைகள் மறக்கடிக்கப்பட்டு புதுவாழ்வைத் துவங்க ஏதுவாகும். அதேசமயம், நல்லவர்கள் மற்றும் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை 'ஜீன் தொரபி'க்கு உட்படுத்தினால் அவர்களுடைய குணநலன் அடியோடு மாறிப்போகும் அபாயம் உண்டு. ஜீன் தொரபி என்ற இந்த நவீன மரபணுச் சிகிச்சை முழுவதுமாக வெற்றியடையும் பட்சத்தில் வல்லரசுகள் இதை போர் ஆயுதமாக உபயோகிக்கக் கூடும்.

# பித்தன் பதில்கள்



இ.மலர், புளியங்குளம்.
கே: மை டியர் பித்து மாமா! ஆணும் பெண்ணும் ஒருத்தருக் கொருத்தர் உயிராக காதலிக்கிறார்கள். பின்பு ஜாதி, மதம் என்பவற்றால் விலகி விடுகிறார்களே! காதலிக்கும் முன்பு இவைகளை சிந்தித்தால் என்ன?
ப: அது கோழைகளின் காதல்... முதலிலே கண்டதும் காதலிப்பது.. பின்பு பிரச்சினை என்றுவரும் போது விலகிவிடுவது... இது கலியாணத்துக்கான காதல் அல்ல சும்மா Time pass.. என்பார்கள். பொழுது போக்குக்காக செய்யப்படுபவை... உண்மையான காதல் என்றால் 'மலையே வா தலையே சும' என்று இருக்க வேண்டும்.... அதுதான் காதல்.



து.தனீஸ், கிளிநொச்சி.
கே: அன்பின் பித்தா! விவேக் நடித்த 'சொல்லி அடிப்பேன்' திரைப்படம் எப்போது வெளிவரும்? அதில் நடிக்கும் கதாநாயகி யார்?
ப: சித்திரைப் புத்தாண்டு நேசியே! அஜித்தின் 'திருப்பதி' தனுஷின் 'புதுப்பேட்டை' எல்லாம் ஓடப்போவதால்... இவைகள் ஓடி களைத்ததும் மே மாதத்தில் சொல்லி அடிப்பேனை வெளிவிடுவோம் என்கிறது தயாரிப்பாளர் தரப்பு படத்தின் நாயகி மன்மதராசா புகழ் சாயாசிங்....

யோ.ஞானகுமார், கிளிநொச்சி.
கே: பித்தா! நீங்கள் இன்னொரு கல்யாணம் செய்து பார்க்கலாமே?
ப.என்ன.. மாபெரும் பிரச்சினை ஒன்றை சர்வ சாதாரணமாக ஏதோ... தோசை சாப்பிடுவது போல் சொல்றீர். ஏற்கனவே ஒன்றைச் செய்து நான் படும் லொள்ளு போதாதா... இன்னொன்று வேணுமா?

செ.மோகனதாஸ், முறிகண்டி.
கே: அன்பின் பித்தா! ஒரு பொண்டாட்டியைக் கட்டிக் கொண்டு அவளை பராமரிக்கவே பெரும் பாடாய் இருக்கிறது. இந்த லட்சணத்தில் முன்னைய காலத்தில் மன்னர்கள் எப்படி ஏராளமாய் ராணிமாரை வைத்துப் பராமரித்தார்கள்...?
ப: அதுதானே... உதாரணத்துக்கு தசரத மகாராஜாவுக்கு 64 ஆயிரம் மனைவிமாராம். எப்படி.... எப்படி ஐயா சமாளித்தார்... தேட வேண்டும் பிடிக்க வேண்டும், திருமணம் முடிக்க வேண்டும்... அதற்குப் பிறகு எவ்வளவு மினக்கெட வேண்டும். இத்தனைக்கும் இடையில் நாட்டையும் ஆட்சி செய்யவேண்டும்.
நமக்கென்றால் பெரிய வீட்டுடன்... ஒரு சின்ன வீடும் சேர்ந்துவிட்டால்... மற்ற அலுவல்கள் எதனையுமே கவனிக்க நேரம் கிடைக்க மாட்டேன் என்கிறது. ஆனால் அவரால் மட்டும் எப்படிச் சமாளிக்க முடிந்தது... இடையிலே ஒன்று இரண்டு விடுபட்டு போயிருக்காது. என்னத்தைத் தான் சொன்னாலும் .... நாமெல்லாம் உடம்புக்கு நடுவிலே எங்கோ ஓரிடத்தில் மச்சத்துடன் பிறந்தவர்கள். ஆனால் பழைய கால ராஜாக்களில் பலர்... மச்சங்களுக்கு நடுவில் எங்கோ ஓரிடத்தில் உடம்பை வைத்திருந்தவர்கள்.

நாகராஜா ஆனந்தி, ஊர்காவற்றுறை.
கே: பித்தா! நடிகர் விஜயகாந்த் இம்முறை தமிழ் நாட்டுத் தேர்தலில் வெற்றி பெற்றால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏதாவது நன்மை கிட்டுமா?
ப:விஜயகாந்த் இலங்கைத் தமிழர்களின் இன்னல் தீராத வரை தனது பிறந்த நாளை கொண்டாடுவது இல்லை என்று சபதம் எடுத்தவர், தலைவர் பிரபாகரன் மீது கொண்ட அபிமானத்தால் தனது மூத்த மகனுக்கு பிரபாகரன் என்று பெயர் வைத்தவர்... இது போல பல நடவடிக்கைகள் மூலம் இலங்கைத் தமிழர் மீது தனக்கு இருக்கும் ஆதரவை வெளிக்காட்டிவந்தவர்தான்... ஆனால் அரசியல், ஆட்சி, அதிகாரம் என்று வரும் போது எல்லோரினதும் நடவடிக்கைகளும் வேறு தான்.... கொஞ்சம் 'கம்' என்றுதான் இருக்கப் பார்ப்பார்கள்... ஏனென்றால் தமது கதிரையை, தமது பதவியை காப்பாற்றிக் கொள்ளவேண்டுமே அதற்காக...




வேலைய்யா அகிலன், தாவடி.
கே:பித்தா! எனக்கு எனது காதலியின் முகத்தை தவிர வேறு எந்த விடயமும் மனதில் நிற்குதில்லை என்ன செய்யலாம்?
ப:உடனடியாக கல்யாணம் செய்யலாம் அதற்குப் பின் உமக்கு மனைவியின் முகத்தை தவிர மற்றைய எல்லாம் விடயமும் மனதிலே நிற்கும்.

கி.சுதா, யாழ்.பல்கலைக்கழகம்.
கே: நண்பா பித்து! தன்னைத் தானே அழகாக வர்ணிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்? எனக்கு தெரிந்த ஒருவர் உமது மனைவியின் நண்பியாம்.... அவர் சொன்னார் செந்திலின் தொப்பையும், வடிவேலுவின் நிறமும், கவுண்டமணியின் குரலும், வையாபுரியின் உடலும், பாண்டிய ராஜனின் முழியும் சேர்த்துச் செய்த கலவைதான் பித்தன் என்று. அது மட்டுமல்ல உமது மனைவியை ஐஸ்வர்யா ராயின் தங்கை மாதிரி என்று கூறலாம் என்கிறார்... உண்மையா பித்து?
ப:கவுத்திட்டியேம்மா.. சுதா... கவுத்திட்டியே...! முன்பு நான் தமிழ் சினிமாவின் கதாநாயகர்களை வைத்து என்னை வர்ணித்ததை பொறுக்க முடியாமல், உள்ள கொமேடியன்மாரை வைச்சு என்னை கவுத்திட்டியேம்மா...! செந்தில போல தொப்புளான் என்டா சரி, வடிவேலைப் போல கருமாஞ்சி என்டா சரி, கவுண்டமணி போல சவுண்டு பாட்டி என்டா சரி, வையாபுரி போல ஒல்லிக்குச்சி என்டா சரி, பாண்டியராஜன் போல ஆந்தைக் கண்ணன் என்டா சரி எல்லாத்தையும் பொறுத்துக் கொண்டேன்... ஆனா எம் பொண்டாட்டியை மட்டும் ஐஸ்வர்யாவின் தங்கச்சி என்டு சொல்லிட்டியேம்மா... என்னால தாங்க முடியல்ல ஏன்னா... ஐஸ்வரியா ராய்க்கு... இப்படி ஒரு அசிங்கமான தங்கச்சி இருக்குமா என்ன?



ரி.சுபத்திரா, முல்லை.
கே: பித்தா! பணம் பேசும் போது சட்டம் மௌனம் சாதிக்கிறதே ஏன் பித்து?
ப:ஏனென்றால் சட்டத் தரணிகள் எல்லாம் பேசுவதற்கு பணம் வாங்குகிறார்களே...

எம்.வைலட் லக்சி, யாழ்ப்பாணம்.
கே: பித்தண்ணா! ஜெனிவாப் பேச்சில் எடுக்கப்பட்ட எந்த முடிவையும் அரசு அமுல் படுத்தவில்லையே.. இப்படியே போனால் இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறாது போலுள்ளதே...?
ப:எனக்கும் அப்படித்தான் படுகிறது... பொறுத்திருந்து பார்ப்போம்.



சி.ஸ்ரீநாத், கோணாவில்.
கே: ஹாய் பித்தா! காதல் என்பது காமனின் அம்பு அல்லது ஹோர்மோனின் வம்பு என்கிறார்களே சரியா?
ப:அம்பை பற்றி எனக்கு தெரியாது... ஆனால் நிச்சயமாக வம்புதான்..

சு.மதியழகன், தெஹிவளை.
கே:என்ன பித்தா! விஜய்யின் 'ஆதி' படு தோல்வியாகி விட்டதே ஏன்?
ப:அதற்கு பின்னால் ஒரு சிறிய கதை சொல்லிறேன் கேளும்... தொடர்ந்து விஜய்யின் படங்கள் எல்லாம் வெற்றி... அடுத்த சூப்பர் ஸ்ரார் அவர்தானே என்ற எதிர்பார்ப்புகள் வேறு.. ஏகப்பட்ட அழைப்புகள்... பல கோடிகளைத் தாண்டி ஏறிய சம்பளம்... அப்படி இருந்தும் பலர் விஜய்யின் கால் ஷீட்டுக்காக சூட்கேஸ்களுடன் காத்திருந்தனர். அவரும் கறுப்பாகவும் - வெள்ளையாகவும் வாங்கி குவித்து விட்டார் - இதனை எப்படியோ அறிந்து விட்டார்கள் வருமான வரி அதிகாரிகள். அடுத்தது விஜய்யின் வீட்டில் ரெய்டுகளை நடத்தி பல லட்சங்களை அள்ளிச் சென்றனர்.... இந்த நிலையில் தன்னிடமிருந்த கறுப்புக்களை எல்லாம் வெள்ளையாக்க வேண்டிய தேவை அவருக்கு. அதற்காக ஒரு தோல்விப்படம் தேவைப்பட்டது... அதனையும் தானே தயாரிக்க வேண்டியிருந்தது. அப்போதுதானே தோல்வியைக் காட்டி கறுப்பான பணத்தை எல்லாம் வெளுப்பாக்க முடியும்... அதற்காக எடுக்கப்பட்டது தான் 'ஆதி'. அடுத்து வரும் 'முரசு' ஓஹோ என்று இருக்கும் காத்திரும்.

கலைப்பிரியா, கிளிநொச்சி.
கே: கை குலுக்குதல் தமிழர் பண்பாட்டை சீரழிக்கும் செயல்பாடா பித்தா?
ப: அது மேல் நாட்டுக் காரனின் செயல்பாடுதான். ஆனால், இந்த வெக்கையான நாட்டிலே இருந்து கொண்டு- அவர்கள் குளிருக்காகப் போடும் கோர்ட், சூட், டை எல்லாவற்றையும் அணிந்து கொண்டு அல்லல்படுவதை விட - மேல் நாட்டுக்காரர் அதிகமான பனியால் உதடுகள் வெடிக்குமே என்று உதட்டுச் சாயம் பூச, அதனைப் பார்த்து நாமும் உதட்டிலே அள்ளி அப்பி அது வியர்வையிலே கரைந்து வழிய வழிய அலைவதை விட - வெளிநாட்டுக்காரர் இருவர் சந்தித்துக் கொண்டால்.. தனது கன்னத்துடன் மற்றவரின் உதட்டை முட்ட வைத்து அன்பை வெளிப்படுத்துவதைப் பார்த்து விட்டு நாமும் ஒருவரை சந்தித்து விட்டால் அதுவும் பெண்ணாக இருந்து விட்டால் இனி மேல் இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காது என்று நினைத்து இழுத்து அணைத்து முத்தமிடும் பழக்கத்தை விட, இது ஒன்றும் மோசமானதாக இல்லை... பிரியா....

இராமலிங்கம் வனஜா, கொழும்புத்துறை.
கே:பித்தா! நான் ஒரு ஓட்டோ சாரதியைக் காதலித்தேன். அவரின் பெயர், விலாசம் தெரியாது. ஆனால் ஓட்டோ நம்பர் தெரியும். ஆனால் நான் இப்போது பழைய முகவரியில் இல்லை. இருவரும் சேர வழி சொல்லுமேன்?
ப: நான் ஒருவரை காதலித்திருக்கிறேன் என்கிறீர். ஆனால் பெயர், விலாசம் தெரியாது.... என்கிறீர்.. ஓட்டோ நம்பர் மட்டும் தெரியும் என்கிறீர் ....இதென்னது நீர் காதலித்தது சாரதியையா அல்லது ஓட்டோவையா? காதல் என்பது பார்த்து, பழகி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வர வேண்டியது... பெயர் விலாசம் தெரியாத ஒருவர் மீது வருவது காதலல்ல.. இனப்பால் கவர்ச்சி அல்லது காமம்.. இது வாழ்க்கைக்கு உதவாது. பெயர், விலாசம் தெரியாத ஒருவரைக் காதலித்து.. அவர் உமது வயிற்றை நிரப்பிவிட்டு ஓடிவிட்டால் எங்கே போய் அவரைத் தேடுவீர்... சினிமாக்களிலே ஆளைப்பார்க்காத காதலர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உம்முடையது விநோதமானது. பெயர், முகவரி தெரியாதது. ஆனால் வேலைக்கு ஆகாதது...

அனித்தா, யாழ்ப்பாணம்.
கே: பித்தன் சேர்! விஜய் சேரினதும், விஜயகாந்த் சேரினதும் சரியான விலாசம் தருவீர்களா?
ப: ஓ... தாராளமாகத் தருகிறேன்... ஆனால் அதனை வைத்து என்ன செய்யப் போகிறீர்... கடிதம் போடவா... உமது கடிதத்தை விஜய் சேரினதும், விஜயகாந்த் சேரினதும் வேலைக்காரன் கூட பார்க்க மாட்டான்... எனவே உருப்படியாக ஏதாவது செய்யும்.

## அரிதாரம் பூசிய சுங்க அதிகாரி!

இந்தியில் தற்போது 'ஏக் தஸ் தாக்' என்ற படம் பரபரப்பாக தயாராகிக் கொண்டிருக்கிறது. இது ஏறக்குறைய நமது விஜயசாந்தி பாணி சாகசப் படம் ஆகும். பாங்கஜ் தாக்கூர் என்பவர் அதிரடி பொலிஸ் அதிகாரியாக நடித்து தூள் கிளப்பவிருக்கிறார்.

இதில் விசேஷம் என்னவென்றால், பங்கஜ் தாக்கூர் உண்மையிலேயே அரச அதிகாரி என்பது தான். ஆம்! இவர் பம்பாய் சத்திரபதி விமான நிலையத்தில் சுங்க இலாகா அதிகாரியாகப் பணியாற்றுகிறார். கண்டிப்பான அதிகாரி என்ற பெயர் இவருக்கு உண்டு. தற்செயலாக இவரை விமான நிலையத்தில் சந்தித்த இயக்குனர் சேகர் ஷா, இவரை சினிமாவுக்கு இழுத்து வந்து விட்டார்.

இது பற்றி சேகர் ஷா கூறும் போது, "பங்கஜ் தாக்கூரின் சுறுசுறுப்பும், வேகமும் என்னைக் கவர்ந்தன. நான் நினைத்து வைத்திருந்த கதைக்கு அவரே பொருத்தமானவர் என முடிவு செய்தேன். நான் கணித்தது போலவே அவர் சிறப்பாக நடித்திருக்கிறார்" என தெரிவித்துள்ளார்.

பங்கஜ் தாக்கூர் கூறும் போது, "சினிமா ஆசை எனக்குள் லேசாக இருந்தது. ஆனால் கமெரா முன் நடிக்க முதலில் பயந்தேன். பின்னர் பிச்சு உதறிவிட்டேன்" என்கிறார்.



# எனது அன்புக்குரிய சகோதரிகளே!

நாம் எல்லோரும் நிம்மதியான வாழ்க்கையையே விரும்புகின்றோம். அதை அடைவதற்கு நாம் எம்மையே அர்ப்பணிப்பதற்குத் தயாராகவும் இருக்கின்றோம். எமக்கு நிம்மதி கிடைக்கிறதா? இதை அடைவதற்கு எண்ணற்ற அறிஞர்கள் எத்தனையோ ஆலோசனைகளை நமக்கு வழங்கி மறைந்திருக்கிறார்கள். இப்போதும் வழங்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் நிம்மதியாக வாழ்வதற்குச் சொன்ன, எனது மனங்கவர்ந்த, சில எளிய வழிமுறைகளை இவ்வாரம் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

✦ நாம் இவ்வுலகில் எங்கே நிற்கிறோம் என்பதல்ல முக்கியம். எந்ததிசையில் நகர்கிறோம் என்பதுதான் முக்கியம்.

✦ நம்மை வெறுப்பவர்கள் நம்முடைய பகைவர்கள் அல்லர். நாம் யாரை வெறுக்கின்றோமோ அவர்களே நமக்கு பகைவர்களாகிறார்கள்.

✦ உனக்கென்று என்னென்ன உரிமைகள் வேண்டுமென்று நினைக்கிறாயோ அவைகளை பிறருக்கும் கொடுக்கவேண்டும் என்று நினைத்துச் செயல்படு.

✦ கோபத்தில் ஆரம்பமாகும் எல்லா செயல்களும் கடைசியில் ஆபத்தையும் வெட்கத்தையுமே கொண்டுவந்து சேர்க்கும். அதனால் கோபம் வேண்டவே வேண்டாம்.

✦ வெற்றிகரமான வாழ்க்கை என்பது பொருளாதாரத்தை மட்டும் அடிப்படையாக கொண்டது அல்ல. நல்ல மனிதனாக நீ அடையாளம் காட்டப்படும்போது தான் வாழ்க்கையில் வெற்றியடைந்தவளாகிறாய்.

✦ எதிலும் எப்போதும் தோல்வியே இல்லாமல் இருப்பதற்குப் பெயர் வெற்றியல்ல. மீண்டும் மீண்டும் விழுந்து எழுந்து செயற்பட்டுக் கொண்டிருப்பதுதான் வெற்றி.

✦ எந்தமனிதனுக்கும் ஒரு விடயத்தில் நியாயமானதை செய்வதற்கு மட்டுமே உரிமை உண்டு. அதைத் தன் விருப்பம் போல் செய்வதற்கு உரிமை வழங்கப்படவில்லை.

வாழ்த்துக்கள். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்...

ஞானம்

## பர்மா ஸ்பெஷல் சிபியா

**தேவையான பொருட்கள்:**

விளை அல்லது பாரை மீன் -1/2 கிலோ
பெரிய வெங்காயம் - 1
தக்காளி -1/2 கிலோ
காய்ந்த மிளகாய் - 8
பூண்டு - 3பல்
எண்ணெய் - ஒரு குழிக்கரண்டி
சீரகத்தூள் - 1 தேக்கரண்டி
பொடியாக நறுக்கிய கோத்தமல்லி இலை - 4 தேக்கரண்டி
உப்பு - ருசிக்கேற்ப.

**செய்முறை:** மீனை சுத்தமாகக் கழுவி தண்ணீரை வடிய வைக்கவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கவும். காய்ந்த மிளகாய், பூண்டு இரண்டையும் நன்றாக அரைத்துக் கொள்ளவும். தக்காளியை மிக்சியில் நன்றாக அரைத்து விழுதாக்கிக் கொள்ளவும்.

தாச்சியில் எண்ணெயை சூடாக்கி வெங்காயத்தை வதக்கிக் கொள்ளவும். கூடவே அரைத்து வைத்துள்ள மிளகாய், பூண்டு கலவையைச் சேர்த்து வதக்கவும். எண்ணெய் வெளியே கசியும் வரை வதக்க வேண்டும்.

இதோடு தக்காளியைப் போட்டு வதக்கவும். சீரகத்தூள், உப்பு போட்டு தக்காளியின் பச்சை வாசனை போகும் வரை வதக்கிக் கொள்ளவும். கலவை கெட்டிப்பதமாக வரும்போது கழுவிய மீன் துண்டுகளைப் போடவும். மீன் வெந்ததும் கொத்தமல்லி இலையைத் தூவி இறக்கிக் கொள்ளவும்.

இந்த ஸ்பெஷல் ரெசிபி பர்மாவில் மிகவும் பிரபலமானது.

## பெண்

**உயர்வைத்தரும்**

அருள் வாக்கு
ஒளியைத்தரும்.

இருள் வாக்கு
அழிவைத்தரும்.

நன்றி மறப்பது
இழிவைத் தரும்.

நாவடக்கம்
நன்மை தரும். - பெண்ணே.

நல்லதை தேர்ந்தெடு
நலமாய் வாழ்ந்திடு.

ஸ்ரீசுதா



## பியூட்டி உங்கள் சொய்ஸ்

### வரண்ட கேசம் நீங்க

வரண்ட கேசம் உடையவர்கள் முட்டையிலுள்ள மஞ்சள் கருவைச் சேகரித்து கூந்தலுக்குப் பூசி உலர விட்டுக் குளிக்கலாம். இவ்வாறு குளிப்பதால் கூந்தலின் வரட்சி நீங்குவதுடன் கூந்தலுக்கு பளபளப்பும் உண்டாகும்.

ஒரு கோப்பை சீயாக்காய் எடுத்து 6 கோப்பை நீர் விட்டுக் கரைத்து நன்கு கோதிக்கவிட்டு ஆற வைக்கவும். இக்கலவையை வரண்ட முடி மீது தேய்த்துக் குளிக்க முடி வரட்சி நீங்கும்.

*அன்புக்குரிய சகோதரிகளே!*

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். உங்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்து ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-**

பெண்
சுடர் ஒளி வார இதழ்
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# மார்பகங்கள் அழகாக...



பெண்மையின் இலக்கணமான இதில்தான் பெண்களுக்கு எத்தனை விதமான பிரச்சினைகள். பெரும்பாலான இது சம்பந்தமான பிரச்சினைகளுக்கு அழகுச் சிகிச்சையில் தீர்வுகள் வந்துவிட்டன இன்று. மார்பக அழகைப் பராமரிக்க சில யோசனைகள்...

**பொதுவான ஆலோசனைகள்:**

பரம்பரையாக சிறுத்த மார்பகங்களை உடையவர்களுக்கு இதைப் பெரிதாக்குவதென்பது கொஞ்சம் கஷ்டமான காரியம்தான்.

உடற்பயிற்சியின் மூலம் இவர்கள் ஓரளவு குணம் காணலாம். கைகளை முன் பின் பக்கமாக முடிந்த அளவுக்கு சுற்றுவது, இடது கையால் வலதுகால் கட்டை விரலையும் வலது கையால் இடதுகால் கட்டை விரலையும் தொடுவது, ஸ்கிப்பிங், நீச்சல் போன்ற பயிற்சிகளை செய்வதன் மூலம் மார்பகங்களை பெரிதாக்க முடியும்.

பியூட்டி பார்லர்களில் சக்ஷன் மசாஜ் என்று செய்கிறார்கள். ஒரு வகை மிஷினை மார்பகங்களின் மேல் வைத்தால், மார்பக வடிவிலேயே இருக்கும் அந்தக் கருவி அப்படியே மார்பக சதைகளை மேலே தூக்கி விடும். தொடர்ந்து இதைச் செய்து வர பலன் தெரியும்.

மார்பக வடிவிலேயே இப்போது சிலிக்கான் என்ஹேன்சர்கள் (Enhancers) விற்பனைக்கு வந்துள்ளன. அவற்றை உள்ளாடைகளுக்குள் பொருத்திக் கொண்டால் மார்பகங்கள் நல்ல எடுப்பாகத் தெரியும். தொட்டால் கூட வித்தியாசம் தெரியாது.

கர்ப்பமாக இருக்கும் போதும் தாய்ப்பாலூட்டும் காலத்திலும் பெண்களது மார்பகங்கள் பெரிதாகும். அதற்கேற்ப பெரிய சைஸ் பிராவை அணிய வேண்டும். படுத்த நிலையில் தாய்ப்பால் கொடுத்தால் மார்பகங்கள் அதிகமாகத் தொய்வடைந்து போகும். நேராக நிமிர்ந்து உட்கார்ந்த நிலையிலேயே குழந்தைக்கு பால் கொடுக்க வேண்டும்.

தாய்ப்பால் கொடுப்பதால் மார்பக அழகு கெட்டுப் போகாது. அதைத் தவிர்க்கும் பெண்களுக்குத்தான் பின்நாளில் மார்பகப் புற்றுநோய் வரும் வாய்ப்புகள் அதிகமுண்டு.

உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும் மட்டுமே பெருத்த மார்பகங்களைச் சிறியதாக்கும் வழிகள். கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளைத் தவிர்த்து விடுவது நல்லது.

ஆயுர்வேத மருந்துக் கடைகளில் மசாஜ் எண்ணெய்கள் கிடைக்கின்றன. அதை வாங்கி மார்பகங்களை மசாஜ் செய்யலாம். அதே மாதிரி வெண்ணெய், தேங்காய் எண்ணெய், நெய் போன்றவற்றில் ஒன்றைக் கொண்டு மார்பகங்களைக் கீழிருந்து மேலாக வட்ட வடிவத்தில் மசாஜ் செய்தால் மார்பகங்கள் பெருக்கும்.

மார்பகங்கள் பெருக்க வேண்டுமானால் உணவில் கொழுப்பு அதிகமுள்ள வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். பாதாம், முந்திரி, பால் போன்றவற்றை நிறைய சாப்பிட வேண்டும். உடல் பெருத்தால் மார்பகங்களும் பெருக்கும்.

வாரம் ஒரு முறை தலை முதல் பாதம் வரை எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்து குளிக்க வேண்டும். மார்பகங்களுக்கும் மசாஜ் செய்ய வேண்டும்.

மாதுளம் பழம் நிறைய சாப்பிடலாம்.

மாதுளம் பழத்தோலைக் காயவைத்து இடித்து அத்துடன் தேங்காய் எண்ணெய் சேர்த்துக் குழைத்து மார்பகங்களின் மேல் தடவி குளிக்கலாம். தொடர்ந்து செய்து வர சிறுத்த தளர்ந்து போன மார்பகங்களை ஓரளவுக்கு பெரிதாக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் குறிப்பிட்ட மாதத்திலிருந்தே வைட்டமின் ஈ எண்ணெயை மார்பகங்களில் தடவி வரலாம். இதனால் பிரசவத்திற்குப் பிறகு மார்பகங்களில் ஏற்படும் தழும்புகளும் வெள்ளைக் கோடுகளும் தவிர்க்கப்படும்.

# வாரம் ஒரு கேள்வி-பதில்

**கேள்வி:- எனது தோழிக்கு வயது 19. அவளது காதலனுக்கு வயது 22. தோழியின் பெற்றோருக்கு அவளது காதல் தெரிய வந்ததும் அவளை அவர்கள் எச்சரித்துள்ளனர். காதலனின் பெற்றோர் இக் காதலுக்கு சம்மதம் தெரிவித்து விட்டனர். ஆனால் அவனை தோழியின் பெற்றோர் தமது மகளுடன் கதைக்க கூடாது என்று எச்சரித்துள்ளனர். ஆனால் அவனோ தனது காதலை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டான். இதனால், எனது தோழி தனது பெற்றோருடைய சொல்லைத் தட்ட முடியாமலும் தனது காதலை விட்டுக்கொடுக்க முடியாமலும் குழம்பிப் போய் இருக்கிறாள். இவளது குழப்பத்துக்கு என்ன தான் தீர்வு?**

**எஸ்.கவி**
**கிளிநொச்சி.**

பதில்:- சகோதரியே, காதலிக்க தொடங்கிய உங்கள் தோழிக்கு சவால்களையும் எதிர்கொண்டு அவற்றை முறியடிப்பதற்கு தன்நம்பிக்கையும் மனோபலமும் இருக்க வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு குழம்பிப் போவதால் பயனேதும் ஏற்படப்போவதில்லை.

உங்கள் தோழியின் காதலனது உறுதியான முடிவைப் பார்த்தால் அவரது உண்மைக் காதல் சாகாவரம் பெற்றதுபோல் தெரிகிறது.

எந்த பெற்றோரும் தமது பிள்ளைகளின் காதலுக்கு ஆரம்பத்தில் தடைபோடாது இருந்தது கிடையாது. பெற்றோரில் பலர் காதலித்து திருமணம் செய்திருந்தாலும் கூட பிள்ளைகள் தமது வழியில் செல்லக்கூடாது என்றே எதிர்பார்க்கின்றார்கள். அவர்களின் அனுபவம் அவர்களை அப்படி எண்ணவைக்கின்றது போலும்.

உங்கள் தோழியின் காதலனது பெற்றோர் இந்தக் காதல் விவகாரத்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால் இருவரும் திருமணம் முடித்து வாழ்க்கைப் பயணத்தை தொடங்குவதில் பயம் எதும் இல்லை. இருப்பினும் காதலனின் பெற்றோர் பெண் வீட்டாரிடம் முறைப்படி பெண்கேட்பது சாலச்சிறந்தது.

பெற்றோரின் சம்மதமின்றி திருமணம் செய்து கொண்ட காதலர்களுடன் நீண்ட காலம் அவர்களின் பெற்றோர் ஒட்டி உறவாடாமல் இருப்பதில்லை. பிள்ளைப்பாசம் அவர்களை ஒன்று சேர்த்து விடுகிறது. எனவே தேவையற்ற குழப்பங்களுக்கு உள்ளாகாமல் தன்னம்பிக்கையுடன் தயங்காது சிறந்த முடிவை எடுக்கும்படி உங்கள் தோழிக்கு கூறுங்கள்.

- விஜேனி -



காரியாலயத்துக்கு இப்படித்தான் அசத்தலா போகவேண்டும்! கறுப்பு ப்ளேசர், உள்ளே அடர்த்தியான ரோஸ் நிற ஷேர்ட்.

# தமிழகத்தில் தொங்கு நாடாளுமன்றம் அமைந்ததே இல்லை!

தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் தொங்கு நாடாளுமன்றம் என்ற ஒன்று இருந்ததேயில்லை. காங்கிரஸோ, எம்.ஜி.ஆரோ, கருணாநிதியோ, ஜெயலலிதாவோ எப்போதுமே உறுதியான அரசுதான் அமைந்திருக்கிறது. நூலிழை பெரும்பான்மை என்ற கதைக்கு இடமில்லாமல் தமிழக மக்கள் ஒரு கட்சிக்கு உறுதியான ஆணை வழங்குவதைத்தான் பழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். இப்படி இருக்கும்போது, பிரதான கட்சிகளுடன் தொங்கிக் கொண்டுள்ள சிறு சிறு கட்சிகள் எங்கே பெரியகட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் தங்களது ஆதரவில் அரசு அமையாதா என அங்கலாய்க்கின்றன.



கருணாநிதி

பா.ம.க., ம.தி.மு.க., திருமாவளவன், காங்கிரஸ் ஆகியவையே இந்தக் கட்சிகள். குறிப்பாக தி.மு.க. இந்தமுறை மிகக் குறைந்த எண்ணிக்கையான தொகுதிகளில் போட்டியிடுவதால் தி.மு.கவுக்கு தனித்து பெரும்பான்மை கிடையாமல் போகலாமென பா.ம.க.நப்பாசை கொண்டுள்ளது. காங்கிரஸும் இதையே எதிர்பார்க்கின்றது.மறுபுறம் ஜெயலலிதாவுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடையாதுபோனால் ஆட்சியில் பங்குபெற தமக்கு ஒரு வாய்ப்பு கிட்டுமென வைகோவும் திருமாவளவனும் எதிர் பார்த்திருக்கின்றனர். ஆனால், தமிழகமக்கள் அதுவோ இதுவோ என மயங்கும் பழக்கம் உள்ளவர்கள் அல்லர். ஏதாவது ஓர் அணிக்கு ஓஹோவென்ற வெற்றி தருவதே இவர்களின் பழக்கம்.

கடந்த 2001 சட்டசபைத் தேர்தலில் கூட ஜெயலலிதாவுக்கு பெரும்பான்மையுடனான வெற்றி வருமென எவரும் எதிர்பார்க்கவில்லை. ஏதோ அவர் அங்குமிங்குமாக வென்று வந்தாலும் ஆட்சி அமைக்க எண்ணிக்கை போதாமல் போகுமென்றே கருதப்பட்டது. பா.ம.க. ,காங்கிரஸ் ஆகிய நேச சக்திகளின் ஆதரவு தேவைப்படலாம் என்றும் பலர் ஆருடம் கூறினர். ஆனால், தமிழக வாக்காளர் இவ்வாறு நினைக்கவில்லை. தனித்து ஆள தெளிவான ஆணையை ஜெயலலிதாவுக்கு வழங்கினர். ஆட்சியில் பங்குபெறும் பா.ம.க. வினதும்,காங்கிரஸினதும் கனவு பலிக்கவில்லை.

இந்தமுறையும் தி.மு.க. அணிக்கு வெற்றி கிட்டினாலும் தனித்து ஆள தி.மு.கவுக்கு எண்ணிக்கை போதாமல் போகுமென அதன் நேசக்கட்சிகள் எதிர்பார்க்கின்றன. குறிப்பாக வரலாறு காணாதவகையில் தி.மு.க.மிகக்குறைந்த எண்ணிக்கையான தொகுதிகளில் போட்டியிடுவதால் தமக்கு அந்த வாய்ப்பு கைகூடுமென இந்த தி.மு.கவின் நேசக்கட்சிகள் நம்புகின்றன.

ஆனால் வரலாற்றைப் புரட்டினால் தி.மு.க.தனித்து ஆள வெற்றி பெறும் என்றே கூறவேண்டும்.அதிலும் குறிப்பாக தமிழகமெங்கும் வேரூன்றி தழைத்து ஓங்கிவிட்ட தி.மு.க. போன்ற ஒரு கட்சிக்கு இது மிகவும் சுலபமான விடயம் என்றே தோன்றுகிறது. அப்படி நடவாமல் தி.மு.க. அதன் தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் அரசமைக்க நேரிட்டால் அது தமிழகத்தில் ஒரு புதிய வரலாறு ஆகிவிடும்.

இந்தத் தேர்தலில் சினிமா உலகின் பாதிப்பு எவ்வளவு என்பதும் மிகவும் ஆர்வமுடன் நோக்கப்படும் ஒன்றாகும்.விஜயகாந்தின் தனிக்கட்சி முயற்சி புஸ்வாணமாகினால் இனிமேல் சினிமாக்காரன் அரசியல் பேசினாலே 'போய்யா இதெல்லாம் புரியாது' என்று மக்கள் எள்ளிநகையாடும் நிலையே உண்டாகும்.ரஜனிகாந்த் ரசிகர்களோ ஜெயலலிதா ஆதரவுப் பிரசாரத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். பாட்டாளி மக்கள் கட்சியை எதிர்ப்பதற்காகவே ஜெயலலிதாவை ஆதரிக்கின்றனர் என்பது தெளிவு. ரஜனியின் வார்த்தை என்பது அரசியலில் செல்லாக்காசாகி வெகுகாலமாகிவிட்டது.எனினும் ஜெயலலிதா பல்வேறு மட்டங்களில் ஆதரவைத் தேடித்திரட்டி வருகிறார். இதனால் அந்தப்பல்வேறு மட்டங்களுடன் ரஜனி ஆதரவு வாக்குகளும் சேரும்போது ஒரு கணிசமான வாக்குப்பலத்தை அ.தி.மு.க. அணி கொண்டுள்ளது என்பதை மறுக்கவும் முடியாது. மொத்தத்தில் ஒரு பக்கம் மட்டும் ஓஹோவென்று வெல்லும் தேர்தலாக இல்லாமல் வழமைக்கு மாறாக இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொள்ளும் தேர்தலாக இது இருக்கின்றதென்றும் சொல்லலாம்.



ஜெயலலிதா

எஸ்.சுரேந்திரஜித்

# சாதனைக்கு ஏற்பட்ட சோதனை



டென்னிஸ் என்றதும் அனைவரது நினைவுக்கும் வருவது விம்பிள்டன் தான். இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நீண்ட நெடுங்காலமாக ஆண்டு தோறும் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டி, கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் முதன்மையானது மட்டுமல்ல பணத்தை அள்ளிக் கொடுக்கும் போட்டியும் ஆகும். இதில் வெற்றி பெறுவதை மட்டுமல்ல, இந்த போட்டியில் பங்கு கொண்டு ஆடுவதையே டென்னிஸ் வீரர்கள் பெருமையாகக் கருதுகிறார்கள். இதற்காக ஆண்டுக்கு ஒரு முறை உலகம் முழுவதும் இருந்து படையெடுக்கத் தவறுவதில்லை.

இத்தனை சிறப்பு மிக்க விம்பிள்டன் போட்டியில் சாதனை புரிந்த வீரர்கள் பலர் உண்டு என்றாலும் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஜான் போர்க் 5 நடவைகள் தொடர்ந்து வென்று புதிய வரலாறு படைத்தார்.

1976ஆம் ஆண்டு முதல் 1980 வரை விம்பிள்டன் பட்டத்தைத் தொடர்ந்து வென்ற போர்க் அத்துடன் தன் சாதனையை நிறுத்திக் கொள்ளவில்லை. 6பிரெஞ்ச் ஓபன் உள்பட 62 போட்டிகளில் வென்று கோடி கோடியாகக் குவித்தார். ரூ.3000 கோடி வரை சேர்த்துவிட்ட அவர் எவரும் எதிர்பாராத வகையில் 26 வயதிலேயே டென்னிஸ் போட்டியில் இருந்து விலகியும் சென்றார். ஆனால் ஆடிய கால்கள் ஓய்ந்திருக்குமா? 1991ஆம் ஆண்டு மீண்டும் களம் புகுந்ததுடன் 35 க்கு மேற்பட்ட போட்டிகளில் ஆடி மேலும் பணமும், புகழும் சேர்த்தார்.

ஆனால் விளையாட்டு மைதானத்தைவிட்டு முற்றிலும் விலகியபின் அவருக்கு சோதனை காலம் என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்போர்ட்ஸ் பைகள், ஆடைகள் மற்றும் பொருட்களை விற்கும் நிறுவனங்களை நடத்திய அவருக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. இது மட்டுமல்ல குடும்ப வாழ்விலும் நிம்மதி இல்லை. அடுத்தடுத்து 2மனைவிகளை விவாகரத்துச் செய்ததுடன் 3 ஆவது திருமணமும் செய்ய வேண்டி ஏற்பட்டது. இவருக்கு பிறந்த 2குழந்தைகளை மட்டுமின்றி மனைவிகளின் குழந்தைகள் 2 பேரையும் வளர்க்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதற்கும் பெரும் செலவு ஏற்பட்டது. சுவீடன் அரசும் வரி மேல் வரி விதிக்க கிட்டத் தட்ட திவாலாகி விட்டார். வீட்டை விற்றும் பலன் இல்லை. கடனில் மூழ்கிப் போய் விட்டார்.

கடந்த 15 ஆண்டுகளாக மான்டே கார்லோவில் வசித்து வரும் 49 வயதான போர்க் தனது வழக்கறிஞர்களுடன் தீவிர ஆலோசனை நடத்திய பின் கடன் தொல்லையில் இருந்து மீள்வதற்காக விம்பிள்டன் வெற்றிக் கோப்பைகள் மற்றும் 2 டென்னிஸ் ராக்கெட்டுகளை ஏலம் விடத் தீர்மானித்து உள்ளார்.

5 கோப்பைகள் மற்றும் 2 ராக்கெட்டுகளை ஏலம் விடுவதன் மூலம் போர்க்குக்கு ரூ.5 கோடியே 50 இலட்சம் வரை வருமானம் கிடைக்கும் என்று தெரிகிறது. இதன் மூலம் போர்க் கடன் தொல்லையில் இருந்து மீண்டு மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் திரும்புவாரா? என்பது விரைவில் தெரிந்துவிடும்.


## சுடர்ஒளி தினசரி / வாரமலர் விளம்பர கட்டணங்கள்

| பத்திரிகை | முழுப்பக்கம் | | அரைப்பக்கம் | | கால்பக்கம் | | Col Cm | | Special Rate | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை |
| சுடர்ஒளி தினசரி | ரூ. 47, 600/- | ரூ. 26, 000/- | ரூ. 27, 000/- | ரூ. 16, 200/- | ரூ. 13, 500/- | ரூ. 8, 100/- | ரூ. 100/- | ரூ. 60/- | ரூ. 85/- | ரூ. 45/- |
| சுடர்ஒளி வாரமலர் | ரூ. 45, 000/- | ரூ. 30, 000/- | ரூ. 23, 250/- | ரூ. 15, 680/- | ரூ. 11, 760/- | ரூ. 7, 840/- | ரூ. 147/- | ரூ. 98/- | ரூ. 122/- | ரூ. 75/- |

★ தொடர்ச்சியான 2500 Col Cm (Contract) ஒப்பந்த விளம்பரங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

★ முன்பக்க விளம்பரங்களுக்கு 50%மும், மற்றைய குறிப்பிட்ட பக்கங்களுக்கு 25%மும் மேலதிகமாக அறவிடப்படும்.

# அறிவியல்

செந்தூர்

# ஊனமுற்றவர்களுக்கு எலக்ட்ரோனிக் கை



விபத்தில் கை,கால்களை இழந்தவர்கள் எல்லாம் 'நம் வாழ்க்கையே இருண்டு விட்டது. இனி நம்முடைய எதிர்காலம் கேள்விக்குறிதான்,' என்று கவலைப்படுவது உண்டு. அப்படிப்பட்டவர்களை எல்லாம் நிமிர்ந்து உட்கார வைத்து விட்டது அறிவியலின் நவீன வளர்ச்சி.

முன்பெல்லாம் கை,கால்களை விபத்தில் இழந்துவிட்டால் சக்கர நாற்காலியோ அல்லது ஊனமுற்றோர் வாகன மோதான் அவர்களுக்கு உதவும். இல்லையென்றால் யாராவது ஒருவரின் உதவியைத்தான் எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கும். 'நீ இல்லாமல் கை முறிந்ததுபோல் இருக்கிறது' என்றும் சொல்லுவோம். அந்தளவிற்கு கை மற்ற உறுப்புகளை விட முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

கை முறிந்தால் ஒன்றுமே செய்ய முடியாதுதான். ஆனால் அதற்கெல்லாம் முடிவு கட்டிவிட்டார்கள் அசாத்திய திறமை கொண்ட விஞ்ஞானிகள்.

ஆம்! செயற்கை எலக்ட்ரோனிக் உறுப்புகளைப் பொருத்த ஆரம்பித்து விட்டனர். இயற்கையாக கை எப்படி பணி செய்கிறதோ அதைப் போலவே தத்ருபமாக இயங்கும் விதத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது 'ஹைடெக் எலக்ட்ரோனிக் செயற்கைக் கை'.

ஷார்ஜாவைச் சேர்ந்த 27 வயதான அப்துல் அல் காமிரி என்பவர் கார் விபத்தில் ஒரு கையை இழந்து விட்டார். இவருக்கு இப்பொழுது இயற்கைகையைப் போலவே நவீன தொழில் நுட்பத்துடன் இயங்கக்கூடிய எலக்ட்ரானிக் கை பொருத்தப் பட்டுள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸிலேயே முதன்முதலாக இப்போதுதான் செயற்கைக் கை பொருந்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது மனிதனுடைய நரம்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு இயங்குகிறது. மூளையின் தேவைக்கு ஏற்ப வரும் ஆணைகள் இந்த எலக்ட்ரானிக் ஹைடெக் கையில் செயல்களாக மாற்றப்பட்டு மோட்டாருக்குச் செல்கிறது. இதன் மூலம் இது இயக்கம் பெறுகிறது.

இவ்வாறு இயக்கப்படும் ஹைடெக் கை மூலம் இயற்கையான அசல் கையைப் போலவே அன்றாட பணிகளை மேற்கொள்ள முடியும்.

கூடிய விரைவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலுள்ள ஒரு சிறுமி உட்பட இன்னும் மூன்று பேருக்கு இந்த செயற்கைக்கை பொருத்தப்பட இருக்கிறது.



# அனுபவம் புதுமை

அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற ரோபோ கண்காட்சியில் இரண்டு வகையான ரோபோக்கள் பார்வையாளர்களின் மனதை பெரிதும் கவர்ந்தன.

ஒன்று கால்களை அசைத்து ஆணையை நிறைவேற்றும். இதன் தோற்றம் சற்று வித்தியாசமானது. பார்ப்பதற்கு நான்கு கால்களைக் கொண்ட ஒரு பூச்சியைப் போல இது தோற்றம் அளித்தாலும் இந்தக் கால்களின் உதவியுடன் எஜமானர்களின் ஆணையை இது நிறைவேற்றும். இதற்கு ரிமோட் கண்ட்ரோல் மூலம் கட்டளையிடலாம்.

மற்றைய ரோபோ ஒரு பொம்மையைப் போல் தோற்றம் கொண்டது. இதன் உடலில் உணரிகள் (சென்ஸர்கள்) பொருத்தப்பட்டுள்ளதால் அவற்றின் துணை கொண்டே ஆணைகள் வழங்கலாம். இந்த ரோபோக்களை வாங்க பார்வையாளர்கள் அதிக ஆர்வம் காட்டினர். இது ஒரு பொம்மையைப் போல தோற்றம் அளிப்பதால் குழந்தைகள் இதனுடன் ஆடலாம், பாடலாம்.

வீட்டைக் காவல் காக்கும் பணியிலும் இந்த ரோபோவை ஈடுபடுத்தலாம். காரணம் இதன் உடலில் பொருத்தப்பட்டுள்ள கமெரா மற்றும் வீடியோ போன் மூலம் வீட்டுக்கு வரும் நண்பர்களை கண்காணித்து தங்கள் எஜமானுக்கு தகவல் கொடுக்கிறது இது.

# சோயுஸ் விண்கலம்

விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ரஷ்ய சோயுஸ் விண்கலம் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துடன் தன்னை வெற்றிகரமாக இணைத்துக்கொண்டது.

நாசா அமைத்துள்ள சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் விண்வெளி வீரர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை மாற்றப்படுகின்றனர்.

விண்வெளி ஆய்வு நிலையத்துக்குத் தேவையான பொருட்கள் மற்றும் விண்வெளி வீரர்களை எடுத்துச் செல்லும் பொறுப்பை ரஷ்யா ஏற்றுக் கொண்டது.

இதற்கேற்ப கடந்த மார்ச் மாதம் 30



ஆம் திகதி கசகஸ்தானிலுள்ள பைகானூர் ஏவுதளத்தில் இருந்து சோயுஸ் விண்கலம் புறப்பட்டது.

இந்த விண்கலத்தில் பிரேசிலின் முதல் விண்வெளிவீரர் மார்கோஸ் மாண்டஸ், அமெரிக்காவின் ஜெப்ரி வில்லியம், ரஷ்யாவின் பாவெல் வினோகிரேடோல் ஆகியோர் சென்றுள்ளனர்.

## கடல் மட்டம் உயர்கின்றது

உலகின் பனிக்கட்டி ஆறுகளும், துருவப் படலங்களும் காலநிலை மாற்றம் காரணமாக அதிவேகமாக உருகி வருகின்றன. அதனால் கடல் மட்டங்கள் உயர்ந்து வருவதால் கரையோரங்கள், தீவுகள் மற்றும் கண்டங்கள் சுருங்கி வருகின்றன.

தற்போதைய வெப்பநிலை பற்றி ஆர்டிக் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வு ஒன்றின்படி பாங்கொக், லண்டன், மியாமி, நியூயோர்க் ஆகியன உட்பட உலகின் முக்கிய நகரங்கள் பல இந்த நூற்றாண்டு முடிவில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

# முத்திரை அளவுள்ள ஓடியோ பிளேயர்

ஜப்பான் நாட்டில் உள்ள எலக்ட்ரோனிக்ஸ் பொருட்களுக்கு உலகம் முழுவதும் கிராக்கி. அதனால் ஒவ்வொரு ஆண்டும் புதுமையான கண்டு பிடிப்புக்களை அறிமுகப்படுத்தி உலகம் முழுவதும் விற்பனை செய்கின்றனர். இதனால் எலக்ட்ரோனிக்ஸ் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் மிகப் பெரிய நாடுகளைக் கூட ஜப்பான் எளிதில் மிஞ்சிவிடும் போல் இருக்கிறது.

ஜப்பானின் வருமானம் ஒருபுறம் அதிகரித்துக் கொண்டிருக்க, அங்குள்ள விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பின் எல்லையை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மிகப் பெரிய இயந்திரங்களை கையடக்க



வடிவில் உற்பத்தி செய்யும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றுள்ளனர். தற்போது மிகச்சிறிய ஆடியோ பிளேயர் ஒன்றையும் உருவாக்கி உள்ளார்.

4 செ.மீ நீளமும் 5 செ.மீ அகலமும் 1 செ.மீ பருமனும் கொண்டது இந்தப் புதுமையான ஓடியோ பிளேயர். இது முத்திரை அளவுள்ள 'நினைவு கட்டை' (மெமரி காட்) மூலம் இயங்குகின்றது. மேலும் டிஜிட்டல் தொழில் நுட்பம் புகுத்தப்பட்டுள்ளது. இதை உங்கள் சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். இதில் இன்னொரு சிறப்பும் உள்ளது. அது என்ன தெரியுமா? எப்.எம்.வசதிதான்.

## அறிவியல் துணுக்குகள்

## முதல் முதலில்

✦ பரிசுக் கூப்பன்களை முதன் முதலில் வழங்கியவர் நியூயோர்க் நகரைச்சேர்ந்த பி.டி.பாபிட் என்ற சோப் நிறுவன அதிபர். 1865ஆம் ஆண்டு இத்திட்டத்தை தொடங்கிய இவர் ஒவ்வொரு சோப் வாங்குபவர்களுக்கும் 10 அழகிய வண்ணப் படங்கள் கிடைக்கக் கூடிய கூப்பன்களை வழங்கினார்.

✦ உலகில் முதல் வரைபடமாக டாலமி என்ற கிரேக்கர் கி.பி.158இல் வரைந்த படம்தான் கிட்டத்தட்ட என்று ஆயிரம் ஆண்டுகளாக போற்றப்பட்டது. அவர் உலகம் முழுவதையும் வரைபடத்தில் குறித்திருந்தார். ஆனால் இந்திய தீபகற்பம் இவரது வரைபடத்தில் இடம்பெறவில்லை.

✦ ரிச்சர்ட் மென் என்னும் லண்டன் மாநகர காவல்துறை ஆணையாளர்தான் முதன் முதலில் போக்குவரத்துக்கென சிக்னல் விளக்குகளை அமைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

✦ உலகின் முதல் சிக்னல் விளக்கு 1868ஆம் ஆண்டு லண்டன் நாடாளுமன்ற சதுக்கத்துக்கு அருகில் அமைக்கப்பட்டது.

# அணித்தலைவரை விட ஒருபடி மேலே போய்விட்டார் டிராவிட்

## -யுவராஜ்சிங்






**இ**ந்திய அணி மளமளவென விக்கெட்டை இழந்து தவிக்கும் நேரத்தில், 'வன் மேன் ஆமி'யாக நின்று அணியை மீட்கும் அசாத்திய திறமை படைத்தவர் யுவராஜ் சிங். 2000 ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்த முதல் ஆட்டத்திலேயே உலக சம்பியனான அவுஸ்திரேலியாவைக் கதிகலங்கச் செய்தார். குறிப்பாக இந்த ஆண்டு யுவராஜின் பொற்காலம் என்று கூடச் சொல்லலாம். அந்தளவுக்கு ஒவ்வொரு ஆட்டத்திலும் ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார். 2006இல் மட்டும் ஒருநாள் ஆட்டத்தில் 2 சதம், 2 அரைச்சதம் அடித்திருக்கிறார். இவரது வளர்ச்சிக்குக் காரணம் தான் என்ன... இக்கட்டான நேரங்களை எப்படிச் சமாளிக்கிறார்.. வாருங்கள் அவரிடமே கேட்டு விடுவோம்!

**★ 2006ஆம் ஆண்டு மாபெரும் முன்னேற்றம் காணப்படுகிறதே...?**

நிச்சயமாக. இதற்குக் காரணம், எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கைக்கு என் மனநிலையை மாற்றிக் கொண்டமை தான். நான், அதிக ஓட்டங்கள் குவித்துக் கொண்டிருக்கும் ரகசியமும் இது தான். முன்பெல்லாம், துடுப்பாட்டம் செய்யக் களமிறங்கும் போது மனதுக்குள் நிறைய விடயங்களை போட்டுக் குழப்பிக் கொண்டிருப்பேன். எப்படி ஓட்டங்கள் குவிக்க வேண்டும்... எந்த மாதிரியான பந்துகளை பவுண்டரிக்கு விரட்ட வேண்டும்... எனப் பல விடயங்கள் மனதுக்குள் ஓடிக் கொண்டிருக்கும். ஆனால் இப்போது, தெளிவான மனநிலையில் களமிறங்குகிறேன். 'டென்ஷன்' இல்லாமல் ஆடுவதால் நன்றாக ஓட்டங்கள் குவிக்கவும் முடிகிறது.

**★ இந்த 'திடீர்' மனமாற்றத்திற்குக் காரணம் யாரோ?**

பயிற்சியாளர் கிரேக் சப்பல். என்னுடைய மன ஓட்டத்தைச் சரியாகக் கண்டுபிடித்தவர் இவர் தான். இவரது அறிவுரைக்குப் பின்னர் தான் எனது மனநிலையை மாற்றிக் கொண்டேன்.

**★ அறிமுகமான 2000ஆம் ஆண்டில் இருந்து கொச்சி ஆட்டம் வரை உங்களிடம் ஏற்பட்டிருக்கும் முக்கியமான முன்னேற்றம் எது?**

களத்தடுப்பு, துடுப்பாட்டம் இரண்டிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இன்னும் முழுமையான வளர்ச்சியை எட்டவில்லை. கிரிக்கெட் வீரராகவும், சாதாரண மனிதராகவும் நிறைய அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன்.

**★ ரசிகர்களுக்கு உங்களிடம் பிடித்த விடயமே, நெருக்கடியான கட்டத்தில் சிறப்பாக ஆடுவது தான். எப்படி இதைக் கற்றுக் கொண்டீர்கள்?**

ரசிகர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, எனக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். நெருக்கடியான கட்டங்களை சவாலாக ஏற்றுக் கொள்ளுவேன். அப்போது களமிறங்கும் போது, இக்கட்டான நிலையைச் சந்திக்கவே கடவுள் என்னைப் படைத்தார் என நினைத்துக் கொள்வேன். அணியை மீட்க முழு திறமையையும் வெளிப்படுத்துவேன்.

**★ சர்வதேச கிரிக்கெட் அரங்கிற்கு வந்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதில் யாரிடமிருந்து நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டீர்கள்?**

நான் அறிமுகமாகும் போது அணியில் நிறைய அனுபவ வீரர்கள் இருந்தார்கள். இதனால் என்னால் விரைவாக நிறைய விடயங்களை கற்றுக் கொள்ள முடிந்தது. தவிர, பயிற்சியாளர்களான ஜோன் ரைட், கிரேக் சப்பலும் நல்ல ஒத்துழைப்பு அளித்தார்கள். தற்போது அணித்தலைவர் ராகுல் டிராவிட் உதவி செய்கிறார். ஒவ்வொரு விடயத்தையும் அவரிடம் கலந்தாலோசிப்பேன். சச்சினும் எனக்கு நிறைய 'டிப்ஸ்' வழங்கியுள்ளார்.

**★ யாரை சிறந்த அணித்தலைவராகக் கருதுகிறீர்கள்?**

இந்திய அணிக்கு சௌரவ் கங்குலி, ராகுல் டிராவிட் இருவருமே 'சூப்பர்' தலைவர்கள். கங்குலியை எனக்கு அதிகமாகப் பிடிக்கும். மீண்டும் இவர் அணிக்கு திரும்புவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. டிராவிட்டைப் பொறுத்த வரையில் தலைவரை விட ஒருபடி மேலே போய்விட்டார். இக்கட்டான நிலையில் முழு பொறுப்பையும் தானே எடுத்துக் கொள்கிறார். நடுத்தர வரிசைத் துடுப்பாட்ட வீரரான இவர் அணிக்காக இப்போதெல்லாம் ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்குகிறார். அக்தர், பிரட் லீ போன்ற வேகப்பந்து வீச்சாளர்களை முதல் 10 ஓவர்களில் சமாளிப்பது சாதாரண காரியமல்ல. ஆனால் டிராவிட் சவாலை சமாளித்து சபாஷ் வாங்கிவிட்டார். இவரை உலகக் கிண்ணத் தொடர் வரை அணித்தலைவராக்கியமை தேர்வுக்குழு எடுத்த மிகச்சிறந்த முடிவு.

**★ இனி டெஸ்ட் அணியில் உங்களுக்கு நிரந்தர இடம் கிடைக்கும் என நினைக்கிறீர்களா?**

கட்டாயமாக. ஒருநாள் ஆட்டங்கள் மிகவும் கடினமானவை. ஆனால் டெஸ்டில் தான் வீரரின் உண்மையான திறமை வெளிச்சத்திற்கு வருகிறது. டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடினால் போதும்... தன்னம்பிக்கை மலைபோல் உயர்ந்து விடும்.

---

**கு**த்துச்சண்டை விளையாட்டை நினைத்தாலே அனைவரினதும் ஞாபகத்துக்கு வருபவர் மைக் டைசன். இவரது விளையாட்டுப் பாணியே தனிதான். ஏராளமான போட்டிகளில் இவரை எதிர்த்தாடிய வீரரை 'நொக்-அவுட்' மூலம் வெற்றி கண்டுள்ளார். சுருக்கமாகச் சொன்னால் முதல் சுற்றிலேயே எதிர் வீரரை நிலைகுலையச் செய்து விடுவார். இதனால் உலக ஹெவி வெயிட் பட்டம் பெற்றார்.

சில ஆண்டுகளாகக் குத்துச்சண்டைப் போட்டிகளில் இருந்து விலகி இருந்த டைசன் மீண்டும் களம் புகுந்துள்ளார். ஆனால் வீரராக இல்லாமல், நடுவராக. அண்மையில் கூண்டுக்குள் வைத்து நடைபெறும் குத்துச் சண்டைப் போட்டி இங்கிலாந்தில் மான்செஸ்டர் நகரில் நடந்தது. இந்தப் போட்டிக்கு மைக் டைசன் நடுவராகப் பணியாற்றினார்.

இது பற்றி அவர் கூறிய போது, ''நடுவர் பணியின் மூலம் மீண்டும் களம் கண்டுள்ளமை ஒரு புதுமையான அனுபவமாக உள்ளது. இது பொறுப்புகள் நிறைந்த பதவி. குத்துச் சண்டை வீரர்கள் தங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.'' என்று தெரிவித்தார்.



டைசனின் புதிய அவதாரம்

---



# அந்த விஷயம் நல்லதா?

**உ**லகக் கிண்ணக் கால்பந்துத் தொடர் என்றால்... சும்மாவா! வீரர்களின் ஒழுக்கம் பற்றி அதிகமாகப் பேசுவார்கள். அது கூடாது... இது கூடாது என்பார்கள். அதிலும் பெண்கள் விடயத்தில் பயிற்சியாளர்கள் அதிக கண்டிப்பாக இருப்பார்கள். வீரர்கள் தங்களது மனைவிகளை பார்ப்பது கூட அரிதாக இருக்கும். இவர்கள் மத்தியில் பிரேசில் பயிற்சியாளர் கார்லஸ் ஆல்பர்ட்டோ பெரைரா வித்தியாசமானவராக இருக்கிறார். வீரர்கள் எப்போதும் ஜாலியாக இருக்க வேண்டும் என்கிறார். உலகக்கிண்ணப் போட்டிகளின் போது 'செக்ஸ்' தடை எதுவும் விதிக்கப் போவதில்லை என்று குண்டை தூக்கிப் போடுகிறார்.

உலகக் கிண்ணக் கால்பந்து போட்டி என்றாலே பிரேஸில் தான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது. ஐந்து முறை(1958, 1962, 1970, 1994, 2002) கிண்ணத்தை வென்று அசத்தியுள்ளது. அடுத்த உலகக் கிண்ணத் தொடர் வரும் ஜூனில் ஜேர்மனியில் நடக்க உள்ளது. இதற்காக பிரேசில் அணி பயிற்சியாளர் பெரைராவின் கீழ் பிரமாதமாக தயாராகி வருகிறது.

வீரர்களிடம் சகஜமாக பழகும் இவர், ஒவ்வொருவரும் சிரித்த முகத்துடன் இருப்பதை விரும்புகிறார். முக்கிய போட்டிக்கு ஒரு நாள் முன்பாக வீரர்கள் செக்ஸ் உறவு வைத்துக் கொள்ளலாம் என்கிறார். இதனால் திறமை எவ்விதத்திலும் பாதிக்காது என்று அடித்துச் சொல்கிறார்.

மனோதத்துவ நிபுணர்களின் கருத்துப்படி வீரர்கள் களத்திற்கு வரும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று விளக்கம் வேறு தருகிறார் பெரைரா. ''என்னைப் பொறுத்தவரை வீரர்கள் ஒவ்வொருவரும் அவரவருக்கு பிடித்த விஷயங்களை செய்யலாம். கவலையுடன் கைகளை பிசைந்தபடி இருப்பதில் அர்த்தமில்லை. எப்போதும் ஓய்வாக இருக்க வேண்டும். உதாரணமாக ரொனால்டினோ நல்ல 'டிரம்ஸ்' இசைக் கலைஞர். இவர் 'டிரம்ஸுடன்' ஜேர்மனி செல்லலாம். ஒழுக்கம் பற்றி அதிகம் பேசுகிறார்கள். சாப்பிடாமல், தூங்காமல் சிகரெட் மற்றும் மது குடித்துக் கொண்டிருந்தால் தவறு. அதே நேரத்தில் உலகக் கிண்ணம் போன்ற முக்கிய தொடர்களின் போது, போட்டிக்கு ஒரு நாள் முன்பாக வீரர்கள் செக்ஸ் உறவு வைத்துக் கொள்ளலாம். இதில் தவறு எதுவும் இல்லை,'' என்கிறார் பெரைரா.

கடந்த 2002ஆம் ஆண்டு நடந்த உலகக்கிண்ணப் போட்டியின் போது பிரேசில் அணிக்கு பயிற்சியாளராக லூயிஸ் பிலிப் ஸ்காலரி இருந்தார். இவர் மிகவும் கண்டிப்பானவர். போட்டி முடியும் வரை வீரர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்து இருந்தார். பிரேஸிலும் கோப்பை வென்றது. இம்முறை வீரர்களுக்கு அதிக சுதந்திரம் அளித்துள்ளார் பெரைரா. இதற்கு பலன் கிடைக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

# சமூகத்தை சீரழிவுக்கு உள்ளாக்கும் ஆபாசத் திரைப்படங்கள்



பாலா சங்குப்பிள்ளை

திரைப்படத்துறையென்பது மிகவும் சக்திவாய்ந்ததோர் ஊடகத்துறையாகும். இன்று இந்தியா திரைப்படத்துறையில் நிலையான தோர் இடத்திலிருக்கின்றது. இந்திப்படங்களுக்குப்பின் தென்னிந்திய தமிழ் படங்கள்தான் சர்வதேச சந்தையில் முன்னணி வகிக்கின்றது. காரணம் உலகம் முழுவதும் தமிழர்கள் நிறைந்திருக்கின்றார்கள். எனவே, அவர்களால் தமிழ்த்திரைப் படங்கள் விரும்பிப் பார்க்கப்படுகின்றது.

அன்றைய எம்.ஜி.ஆர்., சிவாஜி காலத்தில் நல்ல தரமான திரைப்படங்கள் வெளிவந்தன. எம்.ஜி.ஆர். கூட 'ரிக்ஷாக்காரன்', 'மாட்டுக்காரவேலன்', 'குடியிருந்த கோயில்', 'நம்நாடு' போன்ற பாமர மக்களின் 'அவலங்கள்', 'தாய்ப்பாசம்', சமூக சிந்தனை மற்றும் ஆபாசமில்லாத காதல் என்பனவற்றைக் கொண்டிருந்த கருத்துக்களுடனான திரைப்படங்களில் நடித்திருக்கின்றனர். சிவாஜி கணேஷனைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இவருடை படங்களை பயமில்லாமல் குடும்பத்துடன் சென்று பார்க்கலாம்.

ஆனால், தற்போது வரும் சில படங்கள் ஆபாசக் குப்பைகளாக இருக்கின்றன. அண்மையில் வெளிவந்த 'கள்வனின் காதலி', 'கலாபக்காதலன்' போன்றபடங்களில் ஆபாச அங்க அசைவுகள், முகம் சுழிக்க வைக்கும் வசனங்கள் போன்றவை படம் பார்த்தவர்களை நெளிய வைத்தன. தாய், தந்தையுடன் இப்படங்களை பார்க்கமுடியாது. அதிலும் 'கள்வனின் காதலி' படத்தில் இரட்டை அர்த்த வசனங்கள் மிக அதிகமாகவே இருந்தன.

இப்படியான திரைப்படங்களைத்தான் இன்றைய இளைஞர்கள் விரும்புகிறார்கள். நாங்கள் என்ன செய்வதென்று குறிப்பிட்ட சில தயாரிப்பாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது உண்மையான கருத்தல்ல. 'ஓட்டோகிராஃப்', 'அழகி', 'சொல்ல மறந்த கதை', 'தவமாய் தவமிருந்து' போன்ற நல்ல திரைப்படங்கள் நன்றாக ஓடியிருக்கின்றனவே.

இன்றைய இளைய தலைமுறை நடிகர்களான ஆர்யா, தனுஸ், பரத் போன்றவர்கள் முதலில் நடிப்பதற்கு முன் குறிப்பிட்ட படத்தினைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ஆபாசப் படங்களில் நடிப்பதை தவிர்க்க வேண்டும். முன்னர் 'போய்ஸ்' என்றொரு படம் வெளிவந்தது. சமுக சிந்தனையுடன் கூடிய பிரமாண்டமான திரைப்படங்களை எடுத்து வந்த 'சங்கர்' எதற்காக இப்படியானதொரு ஆபாச குப்பைப் படமொன்றை எடுத்தாரென்று தெரியவில்லை. இந்தப்படம் அவருக்கு ஒரு தோல்விப் படமாகி நல்ல பாடத்தை ஏற்படுத்தித் தந்தது.

தமிழ்த்திரைப்பட வரலாற்றினை எடுத்து நோக்கினால் நாம் ஒரு முக்கிய விடயத்தினை தெரிந்துகொள்ள முடியும். அதாவது கத்திமேல் நடப்பதைப் போன்ற கதையமைப்பைக் கொண்டுள்ள கதைகளை கையாளும் போது அதற்கு ஆபாசம் இடம் தராதளவுக்கு மிகவும் சிறப்பாக திரைக்கதையினை பெறுகின்றது. இதற்கு உதாரணங்களாக 'அவன் அவள் அது', 'அபூர்வ ராகங்கள்', 'அவள்', 'வாலி' போன்றவற்றை கூறலாம். இந்தப் படங்களின் திரைக்கதை மிக கவனமாக சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் திரைப்படங்களில் ஏற்படும் இத்தகைய ஆபாச மாற்றங்களானவை சமூகத்தில் பல சீர்கேடுகளை உண்டாக்கிவிடுகின்றன. இத்திரைப்படங்களின் விளம்பரங்களை பொது இடங்களில் காட்சிக்கு வைக்கப்படும்போது அவை பாடசாலை செல்லும் மாணவர்களின் உள்ளத்தில் சலனத்தை உண்டாக்குகின்றது. அவர்களின் கவனம் திசைதிருப்பப்படுகின்றது.

நல்ல திரைப்படங்களை தயாரிக்காவிட்டாலும் பரவாயில்லை. இத்தகைய ஆபாசக் குப்பைகளை வெளியிட்டு சமூக சீரழிவுகளை ஏற்படுத்தாமல் இருந்தால் அதுவே நாம் சமூகத்திற்கு செய்யும் பேருதவியாக இருக்கும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 207

சொற்சிலம்பம் 207 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஏப்ரல் 23ஆம் திகதி ஆகும். விடைகள் ஏப்ரல் 30ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 07ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.205க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 207

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | | 5 |
| 6 | | | ■ | 7 | | ■ | |
| 8 | | | 9 | | ■ | 10 | |
| | ■ | 11 | | | 12 | | ■ |
| ■ | 13 | ■ | 14 | | | ■ | 15 |
| 16 | | 17 | | ■ | 18 | 19 | |
| 20 | | | ■ | 21 | | | |
| | ■ | 22 | | | ■ | ■ | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 205

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பெ | ண் | 2 சா | 3 தி | ■ | 4 பா | ர | 5 தி |
| று | ■ | 6 ம | ட | ங் | கு | ■ | ற |
| 7 ம | 8 க | ர | ம் | ■ | 9 பா | 10 க | ம் |
| 11 தி | ன | ம் | ■ | 12 கெ | டு | தி | ■ |
| ■ | வா | ■ | 13 ஈ | டு | ■ | 14 யா | 15 சி |
| 16 அ | ன் | 17 ப | ர் | ■ | 18 அ | ல் | லா |
| ர | ■ | 19 தி | க் | 20 க | ம் | ■ | ப |
| 21 சி | லை | ■ | 22 கு | றை | மா | த | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.207

### இடமிருந்து வலம்

1. சிகை அலங்கரிப்பான்.
4. பகுதி
6. தேர்
7. வர்த்தக நிலையம்
8. நிகழ்ந்த ஒன்று
10. பூமி
11. இலட்சுமி
14. காசு
16. பாலியல் ரசம் நிறைந்தால் இப்படிச் சொல்வர்
18. இளைஞன்
20. வெடித்து சேதத்தை ஏற்படுத்துவது
21. விசாலமான
22. ஈகை/ஈகம்

### மேலிருந்து கீழ்

1. கர்ண கொடூர சத்தம்/ எரிச்சலூட்டும் ஒலி
2. ரகம்
3. கணவன் — மனைவி
4. சேனை
5. இதன் கூட்டைக் குலைத்தால் ஆபத்துத்தான்
7. கம்மல்
9. ஆண்டு
10. பறவை
12. தற்போதைய காலம்
13. வேறுபாடு நிலை
15. கழகம்/ சபை/ மன்று
16. பகுபத உறுப்பில் ஒன்று
17. திடீரென
19. மௌன அல்ல
21. உள்

## சொற்சிலம்பம் போட்டி இல. 204

1. இ.துஷாந்தி,
   மு/மல்லாவி மத்திய கல்லூரி,
   மல்லாவி, யோகபுரம்.
2. எஸ்.என். மணி,
   இல.106, மஹிந்த மாவத்தை,
   நுவரெலியா.
3. எஸ்.நீரஜா,
   இல.14/37, பாரதி லேன்,
   மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

1. அ. தவமணி,
   இல.09, வின்சென்ற் லேன்,
   கொழும்பு — 06.
2. செ. புகழினி,
   இல.21 கோவில் வீதி,
   கல்முனை — 3.
3. ஞா.மேரியூப் றேசியா,
   சண்டிலிப்பாய் — கிழக்கு,
   யாழ்ப்பாணம்.
4. எம்.பி. அகிலன்,
   கல்லூரி வீதி,
   திருகோணமலை.
5. இ.ஏரம்பமூர்த்தி,
   இராமநாதன் ஒழுங்கை,
   கோப்பாய்.
6. நா.சுந்தரலிங்கம்,
   6ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு,
   முல்லைத்தீவு.
7. எஸ்.ஏ.நாதர்,
   செல்வா நகர்,
   கிளிநொச்சி.
8. எஸ்.வினா,
   இல.95, கல்லூரி வீதி,
   திருகோணமலை.
9. மகேந்திரன் மைதிலி,
   கோகுல வீதி
   கோண்டாவில்.
10. ரா.கிருஷ்ணன்,
    பூவரசன் குளம்,
    வவுனியா.

# மாடல் அழகி கொலை மர்மங்கள் துலங்கவில்லை

'டமரிண்ட் கோர்ட்' (புளியமரத்து மைதானம்) இது அந்த இரவு விடுதியின் பெயர். தெற்கு டெல்லியில் இதைப்பற்றி அறியாதவர்கள் வெகும் இருக்க முடியாது. அந்த அளவிற்கு பிரபலமான விடுதி அது.

பெரிய பெரிய பணக்காரர்கள், அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அவர்களின் வீட்டுப் பிள்ளைகள்தான் இந்த விடுதியின் வாடிக்கையாளர்கள். இங்கு மதுவும் உண்டு. அதைப்பரிமாற அழகான மாதுக்களும் உண்டு. அதனால் தான் இந்த விடுதிக்கு தனி மவுசு.

மாலை மயங்கிய நேரம். அப்போதே வாடிக்கையாளர்கள் குவியத் தொடங்கினார்கள். கிட்டத்தட்ட 600 பேர் வரை அப்போது அங்கு இருந்தனர்.

வழக்கமான உற்சாகம். அழகுப் பதுமைகளாக வலம் வந்த மாதுக்கள், மது வகைகளை ஊற்றிக் கொடுத்தனர். பலர் அரைகுறை மது மயக்கத்தில் மிதந்து கொண்டிருந்தனர்.

நண்பர்களுடன் வந்திருந்தவர்கள் நேரம் போவதுகூடத் தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர்... பேசிக் கொண்டே இருந்தனர்.

நேரம் நள்ளிரவையும் கடந்தது. இரவு 1.30 மணி. விடுதி வாசல் முன் 'டாடா சபாரி' கார் ஒன்று 'சர்'...ரென வந்து நின்றது.

அதில் நாலைந்து ஆசாமிகள். அனைவரும் ஜீன்ஸ் போட்ட, டீ-சேர்ட் அணிந்த இளவட்டங்கள். அவர்கள் விறுவிறுவென விடுதிக்குள் நுழைந்னர். இருக்கைகளில் அமர்ந்தனர். அங்கு உலாவிக் கொண்டிருந்த ஒரு பணிப்பெண்ணை சொடக்குப் போட்டு அழைத்தனர்.

''எங்களுக்கு 2 போத்தல் விஸ்கி வேண்டும். உடனே கொண்டு வா''- அவர்களிடம் இருந்து கட்டளை பறந்தது.

''பார் மூடப்பட்டு விட்டது. இனி மது கிடையாது'' - இது பணிப்பெண்ணின் பதில்.

''நாங்கள் யார் தெரியுமா? நாங்கள் நினைத்தால் இந்த விடுதியையே விலைக்கு வாங்க முடியும். எத்தனை ஆயிரம் வேண்டுமானாலும் தருகிறோம். விஸ்கி கொண்டு வா'' - மீண்டும் அவர்கள் கர்ஜித்தனர்.

''நீங்கள் எத்தனை ஆயிரம் தந்தாலும் சரி. இப்போது மது இல்லை. அதுவும் நீங்கள் கேட்கும் விஸ்கி எங்களிடம் இல்லை'' - அந்தப் பெண் உறுதியாகக் கூறிவிட்டாள்.

அடுத்த வினாடி 'டுமீல்... டுமீல்'. முதல் குண்டு வானத்தை நோக்கிப் பாய்ந்து கூரையைப் பிய்த்தது. அடுத்த குண்டு, அந்தப் பெண்ணின் நெற்றியைத் துளைத்தது. அந்தப் பெண் இரத்த வெள்ளத்தில் சாய்ந்தாள். உயிர்பிரிந்தது.

இந்தச் சம்பவம் நடந்தது, 1999ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி இரவு 2 மணிக்கு அல்லது ஏப்ரல் 30ஆம் திகதி அதிகாலை என்றும் சொல்லலாம்.

சுடப்பட்டு பலியானவர் ஜெசிகா லால். பிரபல மாடல் அழகி. சுட்டவன் மனுசர்மா. முன்னாள் இந்திய மத்திய மந்திரியும், இந்நாள் ஹரியானா மின்சார மந்திரியுமான வினோத் சர்மாவின் மகன்.

சம்பவத்தன்று மனு சர்மாவும் அவனது நண்பர்களான அலோக் கண்ணா, அமர்தீப் சிங், விகாஸ் யாதவ், அமித் ஜிங்கான் ஆகியோரும் அந்த இரவு விடுதிக்கு வந்தனர்.

விஸ்கி கிடைக்காத விரக்தியில் மனு சர்மா, தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் ஜெசிகா லாலை சுட்டு விட்டான். பின்னர் அவனும், நண்பர்களும் காரில் தப்பி ஓடி விட்டனர். பொலிஸார் வேட்டையில் இறுகியதும் மனு சர்மா சரணடைந்தார். விகாஸ் யாதவ், மே 30ஆம் திகதி பொலிஸ் வலையில் சிக்கிக் கொண்டார். அவர்கள் பயன்படுத்திய டாடா சபாரி கார் டெல்லிக்கு அருகே நொய்டாவில் அனாதரவான நிலையில் கண்டுபிடிக்கப் பட்டது. இந்தக் கூட்டத்திலிருந்த மற்றவர்களையும் பொலிஸார் தேடினர். அவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்களும் பிடிபட்டார்கள்.

மனுசர்மா, விகாஸ் யாதவ், அலோக் கண்ணா, அமர்தீப் சிங், ஹர்வீந்தர் சோப்ரா, விகாஸ் கில், ராஜா சோப்ரா, ரவீந்திர கிருஷ்ண சூடன் மற்றும் தனராஜ் என 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது அவரவர் செய்த குற்றத்திற்கேற்ப கொலை, குற்றச்சதி செய்தது, குற்றவாளிகளுக்கு



அடைக்கலம் கொடுத்தது, தடயங்களை அழித்தது என பல பிரிவுகளின்கீழ் வழக்குகளும் பதியப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டை நேரில் பார்த்த சாட்சிகளான 100ற்கும் மேற்பட்டவர்களின் பெயர்களையும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்.

இதனால் குற்றவாளிகளுக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும் என்றும் நம்பப்பட்டது.

ஆனால் நடந்ததோ வேறு. அரசியல் அதிகாரத்திற்கும், பண பலத்திற்கும் முன்பு நீதி, நியாயத்திற்கு எந்த மரியாதையும் இல்லை என்பது நிருபிக்கப்பட்டுவிட்டது.

சாட்சியங்கள் ஒவ்வொன்றாகப் பல்டியடிக்கத் தொடங்கின. கொலை நடப்பதற்கு முன்னர் ஜெசிகா லாலுடன் நடிகர் ஷயான் முன்ஷி பேசிக் கொண்டிருந்தார். கொலை நடந்தபோதும் அவர் உடனிருந்தார்.

அவரும் அன்றைய தினம் மது பரிமாறினார். கடைசி நேரத்தில் அவரும் பல்டியடித்துவிட்டார்.

ஹோட்டல் பணியாளர்களான கரன் ராஜ்புத், சிவதாஸ் அகியோரும் முக்கிய சாட்சிகள். அவர்களும் சம்பவம் நடந்த அன்று, தாங்கள் டெல்லியிலேயே இலலையென சாதித்துவிட்டனர்.

இப்படி சாட்சிகள் ஒவ்வொன்றாக பலமிழந்து வர, குற்றம்சாட்டப் பட்டவர்களின் பலம் மேலும் மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. இங்கோ எல்லாமே குளறுபடி யாகத்தான் நடந்தன.

ஜெசிகா லால் வேலை செய்த 'டமரிண்ட் கோர்ட்' விடுதியில் மது பரிமாற லைசென்ஸ் இல்லை. அதையும் மீறி இங்கு மது பரிமாறப்பட்டு வந்துள்ளது.

இந்த விடுதியை நடத்தி வந்தவர் பீனாரமணி என்ற பிரபல சமூகசேவகி. அமெரிக்க இந்தியர். முதல் கணவர் ரமணியை விவாகரத்து செய்துவிட்டு, கனடா நாட்டுக்காரர் ஒருவரை 2ஆவது திருமணம் செய்து இந்தியாவுக்கு வந்தார். இவருக்கு மாலினி என்ற மகள் உண்டு. டெல்லியில் பேஷன் நிறுவனங்கள் நிறைந்த 'ஹவுஸ் காஸ்' பகுதி பீனா ரமணியால்தான் உருவானது. இவருக்கு பெரும்புள்ளிகளின் ஆதரவும் உண்டு. அதனால்தான் அனுமதியில்லாமலேயே 'மது பார்' நடத்தியுள்ளார்.

இது, அந்தப் பகுதி பொலிஸாருக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவர்கள் லஞ்சம் வாங்கிக் கொண்டு அதை அனுமதித்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதற்காக சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக அவரே விசாரணை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார்.

கொலை நடந்தபிறகு, மனு சர்மாவும், விகாஸ் யாதவும் காரில் தப்பிச் செல்லும்போது டெல்லியின் புறநகர்ப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டதாகவும், ஆனால் உயர் பொலிஸ் அதிகாரிகள் தலையிட்டு, அவ்விருவரையும் விட்டுவிட சொன்னதாகவும் ஒரு செய்தி முன்பே வெளியானது.

2001ஆம் ஆண்டில் டெல்லி இணைக் கமிஷனராக இருந்த கே.கே.போல் (தற்போதைய பொலிஸ் கமிஷனர்) ரகசிய விசாரணை ஒன்றை நடத்தினார். அதில், பொலிஸாருக்கும் குற்றவாளி களுக்கும் இடையே ரகசிய உறவு இருப்பதாகவும், சாட்சிகளை கலைக்க முயற்சி நடப்பதாகவும் அவர் கண்டறிந்தார்.



துப்பாக்கிச்சூடு நடந்த இடத்தில் 2 குண்டுகள் கண்டெடுக்கப் பட்டன. ஆனால் இரண்டுமே வெவ்வேறு ரகக் குண்டுகள். அப்படியானால் 2 துப்பாக்கி களில் இருந்து குண்டுகள் பாய்ந் துள்ளன. அதனால் 2 பேர் சுட்டிருக்க வேண்டும்.

ஆனால், ஒரு துப்பாக்கியால் சுட்டதாகவே பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். ஜெசிகா லாலின் தலையில் பாய்ந்த குண்டு '22போர்' ரக பிஸ்டலில் இருந்து புறப்பட்டதாகும். ஆனால் அந்தத் துப்பாக்கியையும் பொலிஸாரால் கைப்பற்ற முடியவில்லை.

குற்றம்சாட்டப்பட்ட 12 பேரில் ரவீந்திர கிருஷ்ண சூடன், தனராஜ் ஆகிய இருவரும் ஒருமுறை நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படும் போது தப்பி ஓடிவிட்டனர். அவர்கள் இன்றுவரை பிடிபடவேயில்லை.

அமித் ஜிங்கான் என்பவரை இடையில் நிரபராதி என அறிவித்து கோர்ட் விடுதலை செய்தது.

இப்போது, மனுசர்மா, விகாஸ் யாதவ் உள்பட மற்ற 9 பேரும் விடுதலை செய்யப்பட்டி ருக்கின்றனர்.

இவை எல்லாவற்றிற்கும் காரணம் பொலிஸின் கையாலாகாத்தனம் தான். அதனால் அவர்களை பற்றி விமர்சனங்களும் பலமாக ஏழத்தொடங்கின.

மீண்டும் விசாரணை நடத்தப் படவேண்டுமென குரல்கள் எழுந்தன.

பிரபல ஆங்கில டி.வி. நிறுவனம் அதன் வாசகர்களிடம் எஸ்.எம்.எஸ். மூலம் 1லட்சம் கையெழுத்து பெற்று மறு விசாரணை வேண்டி ஜனாதிபதியிடம் ஒப்படைத்தது.

இப்படி எதிர்ப்புக் குரல் எழுவதைக் கண்டு, டெல்லி ஹைகோர்ட் தானாக முன்வந்து, இந்த வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் ஒப்படைக்குமாறு டில்லி பொலிஸாருக்கு பணித்துள்ளது.

இவ்விவகாரம் இந்திய நாடாளு மன்றத்திலும் எதிரொலித்தது. பாரதீய ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சிகள் கடுமையாகக் குற்றம் சாட்டின. அதனால் மறு விசாரணை நடத்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஆகவே, காலம் தாழ்த்தியாவது நீதி நிலை நாட்டப்படுமா என்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர். ஜெசிகா லாலை மனுசர்மா சுட்டுக் கொன்றிருக் கலாம். ஆனால் நீதியை பொலிஸார் சுட்டுக் கொன்றுவிட்டனர் என்று எல்லோரும் கருதுகின்றனர்.

# சமாதானப் பேச்சு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வராது போனால் இரண்டாம் சுற்றுப் பேச்சில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவது சாத்தியமாக இருக்கப்போவதில்லை என்பதையே தமிழ்ச்செல்வன் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி ஒட்டுக் குழுக்களை கட்டுப்படுத்த அரசு தவறுமானால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளே எடுப்பார்கள் என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துப்பார்க்கும்போது அமைதிப் பேச்சுகள் இறுகிப் போயிருப்பதாகவே கருதவேண்டியுள்ளது. இவ்வாறான ஒரு திருப்பம் போரொன்று வெடிப்பதற்கே உந்துசக்தியாக அமையும்.

**நோர்வேக்கு எதிர்ப்பு வலுக்கின்றது**

இந்தப் பின்னணியில்தான் சமாதானப் பணியை முன்னெடுத்துவரும் நோர்வேக்கு எதிராக ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற கட்சிகள் கண்டனக் கருத்துக்களை பகிரங்கமாகக் கூறிவருவதுடன் ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் நடத்தி வருகின்றன. ''இலங்கையில் புதிய சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் சமாதான அனுசரணை ஊடாக சூடான் மற்றும் பாலஸ்தீன நாடுகளைப் பிரித்தவர். அதேபோல இலங்கையை யும் அவர் பிளவு படுத்துவார்'' - என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் தேசப்பற்றுள்ள இயக்கத்தின் செயலாளருமான விமல்வீரவன்ஸ கூறியுள்ளார். இதைவிட இலங்கையில் உள்ள எண்ணெய் வளத்தை சுரண்டுவதற்காகவே இங்கு நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் ஜே.வி.பி. குற்றம் சாட்டுகிறது.

**மஹிந்தர் என்ன செய்யப் போகிறார்?**

சமாதானத்துக்கு எதிரான இத்தகைய தீவிரவாதத்தை எதிர்த்து பேச்சுவார்த் தைகளை மஹிந்தர் முன்னெடுப்பாரா? நாட்டில் சமாதானத்தை மலரச் செய்வ தற்கு எவ்வளவு தூரமும் முன்நோக்கிச் செல்ல அரசாங்கம் தயாராக உள்ளதாக மஹிந்தர் கூறுகிறார். அண்மையில் முப்படை அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய அவர் ''சமாதானத்தை நிலைநாட்டவே நான் ஜனாதிபதியாக இருக்கிறேன். யுத்தத்தை நடத்துவதற்காக அல்ல'' - என்றும் தெரிவித்துள்ளார்.

அடுத்த சுற்று அமைதிப் பேச்சுகள் திட்டமிட்டபடி ஜெனிவாவில் நடைபெறுமா என்ற சந்தேகம் வலுத்து வரும் இவ்வேளையிலேயே மஹிந்தர் இவ்வாறான அறிவிப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டுவருகின்றார்.

இப்போது இறுதியாக யதார்த்தம் காரணமாக ஒட்டுப் படைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இருப்பதாக அவர் நோர்வே ஊடாக புலிகளுக்கு செய்தி அனுப்பியிருக்கிறார்.

19 ஆம் திகதி விடிவதற்கு இன்னும் ஒருவார காலமே உள்ளது. இந்த மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் மஹிந்தர் தனது இதயசுத்தியை வெளிப்படுத்துவாரா?

அல்லது பேச்சை தொய்யவிடாமல் பேச்சுவார்த்தை என்ற தனது கபட நாடகத்தை நடத்தி விடுதலைப் புலிகளை மடக்கிப் பிடிக்க இராணுவத்தை தயார்படுத்துவதற்கான கால அவகாசத்தை பெற்றுக் கொள்வாரா?

இது இவ்வாறு இருக்க இணைத் தலைமை நாடுகளின் தூதர்களும் அடுத்த கட்ட பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காக கிளிநொச்சி சென்றுள்ளனர்.

தமிழ்த் தலைமை மஹிந்தரின் வாக்குறுதிகளை நம்பியோ அல்லது இணைத் தலைமை தூதர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்தோ ஏமாந்து போய்விடாது தந்திரோபாயத்துடன் இவ்விவகாரத்தை கையாளும் என்றே நம்புகிறோம்.

'மனித மனங்களிலேயே யுத்தங்கள் உருவாகின்றன. சமாதானத்துக்கான பாதுகாப்பும் அதே மனங்களிலேயே உருவாக வேண்டும்' என்பதை மீண்டும் ஒரு முறை மஹிந்தருக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

# திருமலைப்படுகொலை....

(4ஆம் பக்கம் பார்க்க)

விக்கினேஸ்வரன் அவர்கள் .அவரது இழப்பு தமிழர் தேசத்துக்கு ஈடுசெய்யமுடியாதது.இவரது வாழ்வு திருமலை மண்ணோடும் மக்களோடும் ஒன்றியதாக இருந்தது.இவர் திருமலை மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். அங்கு தலைவிரித்தாடிய இராணுவ ஒடுக்குமுறையையும் நில ஆக்கிரமிப்பையும் முழு மூச்சாக எதிர்த்தார்.

எமது மண் எமது மக்களுக்கே சொந்தம் என்று உரிமைக்குரலை இராணுவத்துக்கு மத்தியில் நின்று கொண்டே உலகுக்கு உரத்துக்கூறினார்.இவரது இனப்பற்றுக்கு மதிப்பளித்து மாமனிதர் என்ற உயர் தேசிய விருதை வழங்குவதில் பெருமையடைகிறேன்'' என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுப்படைகளே விக்கி அவர்களின் படுகொலையுடன் தொடர்பு பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.விக்கி அவர்களின் கொலைக்கு முன்னதாகவே திருமலையில் பதற்றம் நிலவி வருகிறது.கடந்த வாரம் திருமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி நோக்கி இலங்கைக்கடற்படையினர் கடும் தாக்குதல் நடத்தினர்.பல பொதுமக்கள் காயங்களுக்கு இலக்காகினர்.இது தவிர படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் புலிப்போராளி ஒருவர் உயிரிழந்தார்.இவ்வாறு பதற்றம் நிலவி வருகையில்தான் விக்கி அவர்களின் படுகொலை நடந்துள்ளது. இந்தச்சம்பவத்துக்கு அடுத்த நாள் திருமலை மற்றும் யாழ்ப்பாணத்தில் படையினர் மீது தாக்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச்சம்பவங்கள் ஜெனிவா பேச்சுக்கு முன்னதாக வடக்கு கிழக்கில் நிலவிய பயங்கரச் சூழ்நிலை மீண்டும் ஏற்படும் அபாயத்தை பறைசாற்றியுள்ளது.

திருமலையின் தோப்பூரில் படைத்தரப்பினருக்கும் புலிகளுக்குமிடையில் சுமார் அரைமணிநேரம் வரை நேரடித் துப்பாக்கிச்சண்டைநடந்தது.இதில் இரு தரப்பிலும் தலா ஒருவர் உயிரிழந்தனர்.இவற்றுக்கு பிள்ளையர் சுழி போட்ட சம்பவம் விக்கி அவர்களின் படுகொலையேயாகும்.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் தொடருமானால் போர் என்பது வெகுவிரைவிலேயே ஏற்படும் என்பது தெளிவு.

எதிர்வரும் 19 ஆம் திகதி நடக்கவுள்ள பேச்சுகள் பலத்த சவால்களை எதிர் நோக்கிக்காத்திருக்கின்றன. குறிப்பாக கடந்த ஜெனிவாப்பேச்சுகளின் பின்னரான நிலைமைகள் குறித்து கண்காணிப்புக்குழு வெளியிடவுள்ள அறிக்கை முக்கிய பங்கை வகிக்கப்போகிறது.இந்தக்காலகட்டத்தில் ஏராளமான முக்கிய சம்பவங்கள் பல தமிழர்தரப்புகளுக்கெதிராகவே நடந்துள்ளன.இதனை கண்காணிப்புக்குழு வலியுறுத்தி தனது அறிக்கையை வெளியிடும் என்றும் அது பெரும்பாலும் அரச தரப்புக்குப் பாதகமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த சுற்றுப்பேச்சுகளில் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளுக்கும் படுகொலைகளுக்கும் முடிவு கிடைக்காவிடின் புலிகள் தரப்பு கடுமையான முடிவை எடுக்கக்கூடும் என்று புலிகளின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.அடுத்த கட்டப் பேச்சின் பின்னர் அடுத்தது என்ன நடக்கும் என்பது வெளிச்சமாகும்.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7.59 | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | 6.59 | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | 7.30 | சங்கே மேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | 8.00 | குட்டி சுட்டி | மாஸ்க் கார்டூன் |
| 9.55 | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | 8.30 | | சிறுவர் நிகழ்ச்சி |
| 10.00 | உங்கள் சொய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | 9.00 | ஹொலிவூட் மூவி–குட்டி சுட்டி | காவ்யாஞ்சலி |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | | 9.30 | குட்டி சுட்டி – கார்ட்டூன் | சன்டே சமையல் |
| 11.00 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | இசைத் தென்றல் | 10.00 | [illegible] | ஸ்ரார் ஸ்பெஷல் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | திரை விமர்சனம் | வார்த்தை உலகம் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சன்டே சமையல் | மங்கையர் செளய்ஸ் | மங்கை | 11.00 | இப்படிக்கு நீங்கள் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | 11.30 | சினி செளய்ஸ் | |
| 12.45 | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | | 12.00 | றிலாக்ஸ் டைம் | எம்.ரி.வி |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | 1.00 | சக்தி மேட்னி | சண்டே மூவி |
| 01.15 | பாடல்கள் | | | | | 4.00 | | சுப்பர் 10 |
| 01.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | 4.30 | விக்கிரமாதித்தன் | என்றும் கலாட்டா |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மை டியர் பூதம் | மை டியர் பூதம் | மலரும் மொட்டும் | 5.00 | நகச்சுவை விருந்து | டொப் 10 மூவிஸ் |
| 5.00 | கிய பியர்ஸ் | ஹி – மான் | கிட்ஸ் [illegible] | தமிழ் காட்டூன் | என்றும் கலாட்டா | 5.30 | | சப்தஸ் ஸ்வரங்கள் |
| 5.30 | கொண்டாட்டம் | சினி செளய்ஸ் | ஸ்ரார் ஸ்பெஷல் | சுப்பர் சீன் | | 6.00 | அறிவு | மின்னல் |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 6.30 | திமி தக்க தா | |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 7.00 | ஊரும் உலகம் | வேலன் |
| 6.58 | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | 7.30 | எஸ் எம் எஸ் ஷோ | தெனாலி ராமன் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 7.30 | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | 8.30 | ராஜ ராஜேஸ்வரி | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.59 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | | | |
| 8.59 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | | | |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25

# இவருக்கு 17 மனைவிகள் 146 குழந்தைகள்!



ஒவ்வொருவரையும் வாழ்த்தும்போது நூறாண்டுகாலம் வாழவேண்டும் என்பார்கள். ஆனால் அப்படி 100 ஆண்டுகள் வாழ்பவர்கள் ஒருசிலர்தான். இதில் குறிப்பிடத்தக்க வேண்டிய விடயம் என்னவென்றால், நவீன மருந்துவ வசதிகளைப்பெற்று நகரங்களில் வாழ்பவர்கள்கூட நூறு வயதை தொட முடிவதில்லை.

ஆனால், கேரளாவில் அட்டப்பாடிப் பகுதியில் வாழும் முதியவரான மூத்தா மூப்பன் என்பவர் தனக்கு 117 வயதாகிறது என்கிறார். அவருக்கு 17 மனைவிகள் இருக்கிறார்கள். அவர்களில் பலர் 30 வயதிற்கு கீழ் உள்ள இளம் பெண்கள் ஆவர். இவருக்கு 146 பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் ஏராளமான பேரக்குழந்தைகளும் இருக்கிறார்கள்.

''உங்கள் பிள்ளைகள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்?'' என்று ஆதிவாசியான மூத்தாவிடம் கேட்டால், ''சிறகு முளைத்ததும் பறவைகள் பறந்து போய்விடும். அவைகள் சுயமாக இரைதேடும். கூடுகட்டும். நண்பர்களைத் தேடிக்கொள்ளும். வயதுக்கு வந்துவிட்ட பிள்ளைகளும் பேரக்குழந்தைகளும் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நம்மால் அறியமுடிவதில்லை'' —என்று விளக்கம் சொல்கிறார் அவர்.

குறிம்பா என்ற இனத்தைச் சேர்ந்த மூத்தா, தனது மனைவிகளோடு டெல்லி சென்று, ஜனாதிபதி அப்துல்கலாமை சந்தித்து சில கோரிக்கைகளை வைத்தார். இயற்கையோடு இணைந்த முறையில் வீடு கட்டித்தருவது, காட்டில் விளையும் பொருட்களை சேகரிக்க உரிமைதருவது, கல்வி, ஆரோக்கியம், சுத்தமான குடிநீர் பெற வாய்ப்பினை ஏற்படுத்தித்தருதல் போன்றவை அதில் குறிப்பிடத்தக்கதாகும்.

குறும்பர்கள் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கலந்து பேசுகிறார்கள். அவர்கள் பேசுவதை தமிழர்களால் அதிகம் புரிந்து கொள்ளமுடிகிறது. மூத்தா பேசியதை ஜனாதிபதியால் நன்றாகப்புரிந்து கொள்ளமுடிந்தது. குறும்பர் இன மக்களின் வாழ்க்கையில் இருக்கும் பிரச்சினைகள் பற்றிய கருத்தரங்கமும் டெல்லியில் நடந்தது.

மதவேறுபாடு இல்லாமல் எல்லோரும் போட்டி போட்டு ஆதிவாசி மக்களை ஏமாற்றுகிறார்கள். அவர்களின் விவசாயப் பகுதியை அபகரிப்பது, மது, புகையிலை போன்றவைகளைக் கொடுத்து அவர்களை அடிமைப்படுத்துவது, அவர்களது விளைபொருட்களை அடிமாட்டு விலைக்கு வாங்குவது, அவர்களை அடிமைகளாக வைத்து கூலி கொடுக்காமல் வேலை வாங்குவது போன்ற செயல்களில்



வெளியே உள்ள மனிதர்கள் ஈடுபடுகிறார்கள். அங்கு ஏராளமான இளம் பெண்கள் திருமணம் செய்யாமலே கர்ப்பிணிகளாக இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்ற கருத்து, கருத்தரங்கில் எதிரொலித்தது.

பொதுவாகவே ஆதிவாசிகளிடம் ஆபூர்வசக்திகள் உண்டு என்பார்கள். அவர்கள் தங்கள் மந்திர சக்தி மூலம் மதம் பிடித்து ஓடிவரும் யானையைக் கூட விரட்டியடிப்பார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. அது உண்மைதானா? என்று மூத்தாவிடம் கேட்டபோது, ''இதெல்லாம் சிலர் கிளப்பி விடும் வதந்தி. ஆனால் காட்டில் ஒருவகை மூலிகை உள்ளது. அதை கையில் வைத்து கசக்கினால் அந்த பகுதி முழுவதுமே கெட்டவாடை வீசும். யானைகளுக்கு அந்த வாடை பிடிக்காது. அதனால் யானையை விரட்ட அந்த செடியைப் பயன்படுத்துவோம். நான் இப்போது எங்கள் பகுதிக்கு ராஜாபோல் இருக்கிறேன். எனக்கு அந்த செடிகளைப்பற்றித் தெரியும். நான் அந்த பொறுப்பில் இருந்து விலகியதும், அடுத்து அந்த பொறுப்புக்கு யார் வருவார்களோ அவரிடம் அந்த மூலிகை ரகசியத்தை சொல்வேன். அந்த மூலிகைகளைப்பற்றி எல்லோருக்கும் சொல்லிக்கொடுக்க மாட்டோம்''. — என்றார்.

17 மனைவிகளை வைத்து காப்பாற்றும் அளவுக்கு உங்களுக்கு பணவசதி இருக்கிறதா? அவர்களுக்கெல்லாம் எப்படி செலவுக்கு பணம் கொடுக்கிறீர்கள்?

''நான் அவர்களுக்கு பணம் எதுவும் கொடுப்பதில்லை. எனக்கு அப்படி வசதி எதுவும் கிடையாது. ஆனால் அவர்கள் வேலைபார்த்து எனக்கு பணம் தந்து கொண்டிருக்கிறார்கள்''.

17 மனைவிகளோடு எப்படி 'உறவு' வைத்துக் கொள்கிறீர்கள். அந்த ரகசியத்தை சொல்லுங்கள்—

''அதில் ரகசியம் ஒன்றும் இல்லை. 17 பேரும் 17 குடிசைகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நான் தேவைப்படும் போது என்னைத்தேடி வருவார்கள். எனக்கு அவர்கள் தேவைப்படும்போது நான் அவர்களை குடிசைக்குச் செல்வேன்''.

இத்தனைபேரை திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

''நான் யாரிடமும் போய் என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறவில்லை. அவர்கள்தான் தங்களை திருமணம் செய்துகொள்ளும்படி என்னிடம் சொன்னார்கள். நான் திருமணம் செய்துகொண்டேன்.

அவர்களில் யாரவது உங்களிடம் இருந்து பிரிந்து போக விரும்பினால்...?

''எப்போது வேண்டுமானாலும் யாரானாலும் பிரிந்து போய்க் கொள்ளலாம்''

மூத்தா தனக்கு 117 வயது என்று சொன்னாலும் அவர் தனது மனைவிகளோடு நடனம் ஆடும்போது 80 வயதுக்கு மேல் மதிக்கமுடியவில்லை. அதனால் அவரிடம் 'எந்த ஆண்டில் பிறந்தீர்கள்?'— என்று கேட்டபோது தனக்கு வருடக்கணக்கெல்லாம் தெரியாது என்கிறார். அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவருக்கு 107 வயதிருக்கும் என்று சொல்கிறார்கள்.

# சர்வதேச அரங்கம்

## ஆரம்பம்

# பாகிஸ்தானின் விருப்பம்


KASURI

பிரான்ஸ் நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த பிரான்ஸ் தூதுக் குழுவிடம் அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித் கிரி கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரான்ஸ் நாடாளுமன்றத்தின் வெளியுறவு, இராணுவம் மற்றும் ஆயுதக் குழுவுக்கான தூதுக் குழு பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளது. அந்நாட்டின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன் பிரான்காய்ஸ் பொன்செட் தலைமையில் சென்ற நான்கு பேர் அடங்கிய இக்குழுவினர் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித் கிரியை சந்தித்துப் பேசிய போதே அவர் இந்தக் கோரிக்கையை அவர்களிடம் விடுத்தார்.

''பாகிஸ்தான் நாட்டின் விரைவான பொருளாதார வளர்சியால் மின் சக்தியின் தேவை அதிகரித்துள்ளது. எனவே பாகிஸ்தானுக்கு அணுச்சக்தித் துறையில் ஒத்துழைப்பு தரும் விடையத்தில் அணுச்சக்தி விநியோக நாடுகள் பாகுபாகு காட்டக்கூடாது'' - இவ்வாறு குர்ஜஷித் கிரி தூதுக் குழுவினரைக் கேட்டுக் கொண்டார்.

# பொது இடங்களில் முத்தம் வேண்டாம்



பொது இடங்களில் கட்டி அணைப்பதும் முத்தமிடுவதும் நாகரிகமானதல்ல. அதிலும் குறிப்பாக மலேசியாவில் இதை அனுமதிக்க முடியாது -என்று அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊய் கீன்தான் (வயது.24) என்ற மாணவன் சியோய் அய்லெய் (வயது.24) என்ற மாணவியை, நகரின் மையப்பகுதி கட்டடத்துக்கு அருகில் (சிட்டிஹோல்) கட்டி அணைத்து முத்தமிட்டார். 2003 ஆகஸ்டில் இது நடந்தது. சிட்டிஹோலின் அதிகாரிகள் அதைப் பார்த்துவிட்டு ''நகரின் கண்ணியத்தையே குலைத்து விட்டீர்கள். எனவே உங்கள் மீது நடவடிக்கை எடுப்போம்'' என்று அச்சுறுத்தினர். அதை இளம் ஜோடிகள் கண்டு கொள்விலலை.

ஆனால் அந்த ஜோடிக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஜோடியின் சார்பில் வழக்கறிஞர் ஒருவர் ஆஜரானார். ''கட்டிஅணைப்பதும் முத்தமிடுவதும் அன்பின் வெளிப்பாடு. அதைத்தடுப்பது நாகரிகமான செயலாக இருக்காது'' என்று அவர் வாதிட்டார்.

''கட்டி அணைப்பதும், முத்தமிடுவதும் கூடாது என்பதல்ல புகார் கூறியவர்களின் வாதம். அதைபொது இடத்தில், வீதி ஓரத்தில், மக்கள் பார்க்கும் இடத்தில் செய்யலாமா, கூடாதா என்பதே கேள்வி. பிரிட்டனில் வேண்டுமானால் இதை ஏற்றுக்கொள்ளலாம். மலேசியாவில் ஏற்க முடியாது'' என்று நீதிபதி அகமது பைருஸ் அப்துல் காசிம் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

இந்த வழக்கை கோலாலம்பூர் சிட்டி ஹோல் நீதி மன்றம் அடுத்து விசாரிக்கும். முத்தமிட்டவர்களுக்கு 27ஆயிரம் ருபா அபராதமோ, ஓராண்டு சிறைத்தண்டனையோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

# ஈரான் கடற்படைக்கு இந்தியா பயிற்சியா?



ஈரான் கடற்படைக்கு இந்தியா பயிற்சியளிப்பதாக கூறப்படுவதை இந்தியா மறுத்துள்ளது.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண்சிங் அமெரிக்க செனட் சபை, சர்வதேசசபை உறுப்பினர்களுக்கான குழுவில் முக்கிய பொறுப்பு வகிக்கும் டாம் வேன்டோசை சந்தித்தார். அப்போது ஈரான் கடற்படைகுறித்து பத்திரிகைகளில் வெளியான செய்தி பற்றிய பிரச்சினை எழுந்தது.

உடனே ஷியாம் சரண்சிங் அதைத் திட்டவட்டமாக மறுத்தார்.

''ஈரான் கடற்படைக் கப்பல் ஒன்று தென்னிந்தியாவில் உள்ள துறைமுகத்துக்குச் சென்றது. இது நல்லெண்ணப் பயணம் மட்டுமே. தவிர, ஈரான் கடற்படையினருக்கு இந்தியா பயிற்சி அளிக்கிறது என்று வெளியான செய்தி ஆதாரமற்றது'' -இவ்வாறு அவர் கூறினார்.

# அ.தி.மு. கூட்டணிக்கு நடிகை சிம்ரன் ஆதரவு



தமிழகத்தில் விழுப்புரத்தில் தங்கியிருந்த அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முதல்வருமான ஜெயலலிதாவை நடிகை சிம்ரன் சந்தித்து பேசினார்.

சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு அவர் ஆதரவு தெரிவித்தார் எனவும் அவரது ஆதரவை முதல்வர் ஜெயலலிதா மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார் எனவும் அ.தி.மு.க அறிவித்துள்ளது.

# ஈராக் பிரதமர் பதவிவிலக மாட்டாராம்

பிரதமர் பதவியை விட்டு ஒதுங்க வேண்டும் எனக் கூறி தனக்கெதிராக எழுந்துள்ள விமர்சனங்களை அடியோடு நிராகரித்துள்ள ஈராக் இடைக்காலப் பிரதமர் அல்-ஜபாரி, ஈராக் மக்கள் ஜனநாயக முறைப்படி தங்களுக்கு விருப்பமான தலைவரைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஈராக்கில் தற்போது இடைக்காலப் பிரதமர் பதவிவகித்து வரும் அல்-ஜபாரியே அடுத்த பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட உள்ளார். ஆனால் இவருக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ள எதிர்க்கட்சியினரும் விமர்சகர்களும் அல்-ஜபாரி தனது பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும் என நிர்ப்பந்தித்து வருகின்றனர். இது தொடர்பாக பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள அல்-ஜபாரி தனக்கு எதிரான விமர்சனங்களை முற்றாக நிராகரித்துள்ளார்.

தவிர, ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீதான நீதிமன்ற விசாரணையின் போது நீதிபதியுடன் வாதத்தில் ஈடுபட்ட சதாம் ஹுசைன், தற்போதைய ஈராக் அரசுக்கு தனது வீட்டு நாய் கூட அஞ்சாது என்று கண்டித்தார்.

# கலக்கல்

பகீன்



**தீயின் கோரம்!**
சீனாவின் ஹாப்பின் நகரில் அமைந்துள்ள இரசாயன ஆலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தைஅடுத்து ஆலை தீப்பற்றி எரியும் காட்சி...!



**இப்படியும் ஆதரவாளர்களா?**
பெருநாட்டில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் கட்சிச் சின்னத்தை ஆதரவாளர்கள் தமது முகங்களில் வரைந்து ஆதரவை வெளிப்படுத்துகின்றனர்.



**தியாகம்!**
தாய்லாந்தில் அமைதியை வலியுறுத்தி தனது கையினைக் கூரிய ஆயுதம் ஒன்றினால்துளைக்கின்றார். இவர்


**தத்துவம்**

| | |
|---|---|
| **உளி!** | சிற்பி கல்லை உளியாலை அடிச்சா அது கலை; சிற்பியை நாம கல்லாலை அடிச்சா அது கொலை. |
| **பஸ்!** | பஸ்ல நீ ஏறினாலும் உன்மேல பஸ் ஏறினாலும் டிக்கட் வாங்கப்போறது நீதான். |
| **நாய்!** | என்னதான் கராத்தேயில பிளாக் பெல்ட் வாங்கினாலும் நாய் துரத்தினால் ஓடியே ஆகணும். |
| **தியேட்டர்!** | டிக்கெட் வாங்கிட்டு உள்ளே போறது சினிமாத் தியேட்டர். உள்ளே போயிற்று டிக்கெட் வாங்கிறது ஆப்பிரேசன் தியேட்டர். |

**கோர விபத்து!**
சீனாவில் டிரக் வண்டி ஒன்று பொலிஸ் வாகனம் மீது மோதியதில் வாகனம் சுக்கு நூறாகிக் கிடக்கும் காட்சி...!



## சிரியுங்கள்...! சிரியுங்கள்...!



**குறும்பு**



சௌகரியம் என்பது இதுதானோ...?

## கனவுச் சிரிப்பு

**கணவன்:** நீயும் நானும் சுவிஸ், அமெரிக்கா எல்லாம் சுத்திப்பாக்கிற மாதிரி நேற்றுக் கனவு கண்டேன்.

**மனைவி:** அப்படியா எந்தெந்த இடத்திற்கெல்லாம் போனோம்?

**கணவன்:** நீயும் தான் கூட வந்தாயே! பிறகு ஏன் என்கிட்டக் கேட்கின்றாய்.






# பயங்கரக் கொலை

**தூ**ங்கிக்கொண்டிருந்த தாயின் தலையில் அம்மிக்கல்லைப் போட்டும், தனது இரு தங்கைகளைத் தண்ணீர்த் தொட்டியில் அமுக்கியும் கொலை செய்தார் ஒரு கல்லூரிமாணவி.பொலீஸ் சார்ஜன்ட் ஒருவரது மகளின் இந்த கொடூரச் செயல் தமிழ்நாடு, கருரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கரூர் காந்தி கிராமம் வீட்டு குடியிருப்பில் வசித்து வருபவர் செல்வம்(45).அரவக்குறிச்சி டி.எஸ்.பி ஆபீசில் சர்ஜன்டாக இவர் பணிபுரிகிறார்.இவருக்கு ருத் மேரி (42) என்ற மனைவியும்,நவீனா (18),வினோதினி(16),ஸ்மைலி (8),அகிலாண்டேஸ்வரி (4) ஆகிய பெண் குழந்தைகளும் இருந்தனர்.

மூத்த மகள் நவீனா கருரில் உள்ள ஒரு கல் [illegible] முதலாம் ஆண்டு படித்து வருகிறார்.செல்வம் இரவு வேலைக்கு சென்று விட்டார்.மற்றவர்கள் வீட்டில் இருந்தனர்.

நவீனா ஒரு வாலிபரை காதலித்து வந்தார்.இது விவகாரம் தொடர்பாக நவீனாவுக்கும்,தாய் மேரிக்கும் நீண்ட நேரம் தகராறு நடந்துள்ளது. பின்னர் அனைவரும் தூங்கினர்.ஆனால் நவீனா மட்டும் தூங்கவில்லை.

காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறாரே என்ற ஆத்திரத்தில் அதிகாலை 2 மணி அளவில் தூங்கிக் கொண்டிருந்த தாய் மேரியின் தலையில் அம்மிக்கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்றார்.பின்னர் தாயின் உடலில் மண்ணெண்ணை ஊற்றிக் கொளுத்த முயன்றார்.அப்போது சத்தம் கேட்டு பக்கத்து அறையில் தூங்கிக் கொண்டிருந்த தங்கை வினோதினி எழுந்து வந்தார். தாய் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அவர் வெளியில் தப்பி ஓட முயற்சித்தார். ஆனால் வெளியில் விடாமல் நவீனா அவரையும் தாக்கினார்.

அவர் பின்புறக் கதவைத் திறந்து கொண்டு தப்பி ஓடி அருகே உள்ள பொலீசில் தஞ்சமடைந்து நடந்ததைக் கூறினார். உடனே பொலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.அதற்குள் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த மற்ற இரு தங்கைகளையும் தூக்கிச்சென்று தண்ணீர் தொட்டியில் அமுக்கிக் கொன்றார் நவீனா. பொலீசார் வந்து பார்த்த போது 3 பேர் கொல்லப் பட்டிருப்பது தெரியவந்தது. வினோதினியை கரூர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.நவீனாவை கைது செய்து விசாரித்து வருகிறார்கள்.



# செல்போன் தாக்குதல்

**த**ன்னுடைய பணியாளர் ஒருவரை கையடக்கத் தொலைபேசியினால் தாக்கியதாக சூப்பர் மாடல் நயோமி கம்பல் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் அவரை பிணையில் செல்ல அனுமதித்துள்ளது நீதிமன்றம்.

தன்னுடைய பணியாளர் 200 டாலர் பெறுமதியுள்ள தனது ஜீன்ஸை திருடினார் என்று ஆத்திரம் கொண்ட நயோமி அவரை தனது கையடக்க தொலைபேசியினால் தாக்கினார் என்று சொல்லப்படுகிறது.

35 வயதுடைய பிரிட்டிஷ் மாடலான நயோமி நியூயோர்க்கிலுள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.



# மும்பையில் பாஷன் ஷோ

**க**டந்த மாதம் 28ஆம் திகதி மும்பையில் ஆரம்பமான பாஷன் வாரத்தில் மேடையேறிய மாடல்களில் ஒருவரையே படத்தில் பார்க்கிறீர்கள். ஒரு வாரம் தொடர்ந்து நடைபெற்ற இந்த பாஷன் ஷோவை அடுத்து புது டில்லியிலும் இது இப்போது நடைபெற்று வருகிறது.

மும்பையில் நடைபெற்ற பாஷன் ஷோவில் 30க்கு மேற்பட்ட ஆடை வடிவமைப்பாளர்கள் (Designers) ஆடைகளை அறிமுகம் செய்து வைத்தனர். புது டில்லியில் நடை பெற்றுவரும் ஷோவில் 80 வடிவமைப்பாளர்கள் பங்கு கொள்கின்றனர்.



# பாஷன் ஷோவில் பிரைன் லாரா

**டி**ல்லியில் இடம் பெறும் பாஷன் ஷோவுக்கு ஆடை வடிவமைப்பாளரான தீபிகா ஜெஹாங்குடன் வருகைதந்து பார்வையாளர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் மேற்கு இந்திய முன்னாள் கிரிக்கெட் கப்டன் பிரைன் லாரா.

தீபிகாவும் நீங்களும் நண்பர்களா என்று கேட்ட போது "இல்லை நான் அவரைச் சந்தித்தேன். அவரது ஆடைகளை விரும்பினேன்." என்று கூறியபடி கூட்டத்திற்குள் சென்று மறைந்து விட்டார் லாரா.



# காரில் சாதனை

28,970 கிலோமீட்டர் தூரத்தை தமது VW GOLF FSI 1.6 AFP காரில் பயணம் செய்து கடந்ததன் மூலம் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டிய பிரிட்டிஷ் வாசிகளான ஜோனும் ஹெலன் ரெயிலரும் இவ்வாறு கட்டி அணைத்து முத்தம் பரிமாறி தமது வெற்றிக் களிப்பை பகிர்ந்து கொண்டனர். இவர்கள் இந்த தூரத்தைக் கடப்பதற்கு 1303 லீட்டர் எரிபொருளையே பாவித்துள்ளனர். இதுவும் இவர்களின் சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

# தனித்து விடப்பட்டார் சந்திரிக்கா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பதவியில் இருந்தபோது அவர் சொல்வதெற்கெல்லாம் ஆமாம் போட்டவர்கள் இன்று அவரது தொலைபேசி அழைப்புக்குக் கூட பதிலளிக்காது தட்டிக் கழிந்து வருகிறார்களாம்.

"அவர் இருந்திருக்காவிட்டால் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஜனாதிபதியும் இல்லை. மந்திரிசபையும் இல்லை"-இப்படியெல்லாம் கூறி மனம் வெம்பி இருப்பவர் வேறு யாருமல்லர், அக்காவின் தம்பி அனுரா பண்டாரநாயக்காதான்.

அத்தனகல பிரதேச சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் சந்திப்பொன்று அண்மையில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவின் உத்தியோக வாசஸ்தலமான விசும்பயாவில் நடைபெற்றதாம்.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவர்கள் முன் உரையாற்றிய பண்டாரநாயக்கா "அரச ஊடகங்கள் முந்நாள் ஜனாதிபதி மீது சேறு பூசுகின்றன. முன்னர் அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் தான் இதன் பின்னணியில் நின்று செயற்படுகின்றார்கள்" என்று கூறினாராம்.

இவர்களை தான் வன்மையாகக் கண்டிப்பதாக கூறிய அனுரா, தற்போதைய ஜனாதிபதிக்கும் எதிர்காலத்தில் இதே கதிதான் ஏற்படும் என்றும் ஆருடம் கூறினாராம்.

சுதந்திரக் கட்சியில் சந்திரிகாவுடன் கூட இருந்து சகல சுக போகங்களையும் அனுபவித்தவர்களே அதாவது தன்னுடன் இறுதிவரை கூட இருப்பார்கள் என்று அவர் நம்பியவர்களே அவரது காலை வாரிவிட்டிருக்கிறார்கள்என்று அனுரா புலம்பினாராம்.

# நோர்வேயை வெளியேற்று

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்த சூட்டோடு ஜே.வி.பி அங்கத்தவர்கள் பலர் தமது கட்சித் தலைமையகத்தில் சந்தித்து பல விடையங்கள் குறித்து காரசாரமாக விவாதித்ததுடன் பல முக்கிய முடிவுகளையும் எடுத்துள்ளார்களாம்.

அதில் முக்கியமான முடிவு எதிர்காலத்தில் தமது கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து விபச்சாரம் நடத்தாமல் தனித்து இயங்குவது என எடுத்த முடிவுதானாம்.

அடுத்து சமாதான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவதற்கு தீவிர பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

நோர்வேயை வெளியேற்றுவது தொடர்பான கட்சியின் செயற்பாடுகள் மூன்று கட்டங்களாக அமுல் நடத்தப்பட உள்ளனவாம்.

**முதலாவது கட்டமாக**

ஜே.வி.பியின் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதியைச் சந்தித்து சமாதான அனுசரணைப்பணியில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவதற்கான காலக்கெடுவை அவர் அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்வது எனவும் -

**இரண்டாவது கட்டமாக**

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யுமாறு ஜனாதிபதியை நிர்ப்பந்திப்பது எனவும்-

**மூன்றாவது கட்டமாக**

ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு அமுல் செய்யப்படும் என எழுத்து மூல வாக்குறுதியை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வது எனவும் முடிவு செய்யபட்டுள்ளதாம்.

இவற்றை ஏற்று அமுல் நடத்த ஜனாதிபதி தவறுமிடத்து ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவருக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வது என்றும் உ   ர்கள் தீர்மானித்துள்ளனராம்.

# புதுவருட ஷொப்பிங்

தனக்கு வெளிநாட்டில் அலுவல் இருப்பதாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் காலத்தில் டூப் அடித்துவிட்டு லண்டனுக்கு தம்பியோடினார் சந்திரிக்கா.

அண்மையில் அங்கு புதுவருட ஷொப்பிங்கில் மும்முரமாக ஈடுபட்டாராம். தனது மெய்ப்பாதுகாவலர்களுக்கு அதை வாங்கு இதை வாங்கு என்று சந்திரிக்கா கட்டளையிட அவர்கள் அங்கும் இங்கும் ஓடி ஓடி பொருட்களை வாங்கிக் குவித்தனராம்.

பொருட்கள் எல்லாம் வாங்கி முடித்ததும் பணம் செலுத்தும் கவுண்டருக்கு வந்தாராம் சந்திரிக்கா. அங்கு தன்னோடு கூட வந்தவரைப்பார்த்து இப்படிச் சொன்னாராம் அவர்.

"அதோ இரண்டு பேர் நிற்கிறார்களே. அவர்கள் என்னை கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டே நிற்கிறார்கள். யாராவது இந்தியர்களாக இருக்கலாம். ரீ.வியில் என்னை அடிக்கடி பார்த்திருப்பார்கள். அதுதான் தெரிந்த முகமாக இருக்கிறது என்று யோசிக்கிறார் போல் இருக்கிறது."

கொழும்பில் உள்ள பத்திரிகை ஒன்றிற்கு வேண்டியவர்களே அம்மையாரை கண்வெட்டாமல் பார்த்த அந்த இருவரும். அவர்கள் அங்கு நடந்தவற்றை அப்படியே எழுதி அந்தப் பத்திரிகைக்கு தகவல் அனுப்பினார்களாம்.

# மன்மோகன்சிங் - ரணில் சந்திப்பு

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது இந்தியத் தலைவர்கள் பலரை சந்தித்து உரையாடினாராம்.

இந்த சந்திப்புகளுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்த சந்திப்பு ரணிலுக்கும் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்குக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்புத்தனாம்.

ரணிலுடன் இந்தியப்பிரதமர் உரையாடியபோது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் ஜனாதிபதி மஹிந்தவோடு இணைந்து செயற்படுமாறு கேட்டுக் கொண்டாராம்.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகான இலங்கை முயற்சிக்குமானால் இந்தியா அதற்கான முழு ஆதரவை வழங்கும் என்றும் மன்மோகன்சிங் மேலும் தெரிவித்தாராம்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சமாதான அனுசரணைப்பணியில் நோர்வே ஈடுபட்டு இருப்பது இந்தியாவுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் நோர்வேக்கு இந்தியாவின் முழு ஆதரவு என்றும் உண்டு என்றும் சொன்னாராம்.

தவிர, முக்கிய செய்தி ஒன்றையும் ரணிலின் காதில் போட்டு வைத்தாராம் மன்மோகன்சிங். இலங்கையின் அமைதி மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சி நிரலுக்கு இந்தியாவின் உதவி தேவை என கருதும் பட்சத்தில் ரணில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியிலும் மஹிந்த ஜனாதிபதி என்ற ரீதியிலும் இணைந்து கோரிக்கை விடுக்கும் இடத்து இந்தியா அது பற்றி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும் என்பதே அந்த முக்கிய செய்தியாகும்.

# மங்களவுக்கு பிங்க் கம்பள வரவேற்பு

சமாதானப் பேச்சுவார்த்தையின் முக்கிய பங்காளரான நோர்வேயின் வெளியுறவு அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் புதிய அனுசரணையாளரான ஹன்சன் பவரும் அண்மையில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்தார்களாம். அப்போது நீங்கள் அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வந்திருக்கிறீர்கள். ஆனால் நோர்வேக்கு வரவில்லையே. ஏன்? என்று எரிக்சொல்ஹெய்ம் மங்களவிடம் கேட்டாராம்.

அதற்கு எனக்கு அழைப்பு வேண்டுமே- என பதிலளித்தாராம் மங்கள.

அப்போது உங்களுக்கு நான் நோர்வே பிரதமரிடம் இருந்து அழைப்பு ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லி அவருக்கு அழைப்பை கொடுத்தாராம் சொல்ஹெய்ம்.

அழைப்பைப் பெற்றுக் கொண்ட மங்கள நான் நோர்வேக்கு வரும் போது எனக்கு செங்கம்பள வரவேற்பு வேண்டாம். பிங்க் கம்பள வரவேற்பு போதும் என்று கூறி நோர்வே விடுதலைப் புலிகளுக்கு அளித்த செங்கம்பள வரவேற்ப்பை சொல்ஹெய்முக்கு குத்திக் காட்டினாராம்.

இங்கிலாந்து நாட்டில் கோடீஸ்வரர் களின் எண்ணிக்கை ஒரு ஆண்டில் 3 மடங்காக உயர்ந்துள்ளது.

50 லட்சம் பவுண்ட் ஸ்டெர்லிங் (இங்கிலாந்து நாணயம்) சொத்து மதிப்புள்ள பணக்காரர்களின் எண்ணிக்கை 15 ஆண்டுகளுக்கு முன்பு 2 ஆயிரம் தான்.

இப்போது அது 10 ஆயிரமாக உயர்ந்து உள்ளது. இந்த 10 ஆயிரம் பேரிலும் மிகப் பெரிய கோடீஸ்வரர் களான 5 ஆயிரம் பேரின் பட்டியலை சண்டே டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அதில் பெண்களின் எண்ணிக்கை மட்டும் 407 ஆகும். இங்கிலாந்தின் முதல் கோடீஸ்வரராக உருக்கு ஆலை அதிபர் லட்சுமி நிவாஸ் மிட்டல் என்ற இந்தியர் தான் இருந்து வருகிறார்.

அவரது சொத்து மதிப்பு ஆயிரத்து 480 கோடி பவுண்ட் ஸ்டெர்லிங் ஆகும்.

கிட்டத்தட்ட ஒருலட்சத்து 3 ஆயிரத்து 600 கோடி ரூபாய்.

* * *

தாய்லாந்து நாட்டில் வசிக்கும் நீண்ட கழுத்துள்ள இந்தகைய பெண்களை



'கரீன்' என்கிறார்கள். பல [illegible] ஒவ்வொரு பெண்ணும் ஐந்து வயதிலேயே இப்படிப்பட்ட கழுத்தணிகளை அணியத் தொடங்கிவிடுகிறார்கள். இது போன்ற பழமை விரும்பிகள் கூட இன்று மொபைல் போனையில் விழுந்துவிட்டார்கள் என்பதுதான் கூடுதல் தகவல்.

* * *

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



தேர்தல் நடத்துபவர்களுக்கு எந்த மாதிரி வலிகளெல்லாம் வருகிறது பாருங்கள். இந்த படத்தில் நீங்கள் காண்பது ஒரு பெண். ஆனால் நிஜத்தில் இவர் ஒரு ஆண். பெண்ணாக தன்னை மாற்றிக் கொண்டார். இப்போது இவரை ஆண் வாக்காளர் என்பதா? பெண் வாக்காளர் என்பதா?

* * *

இந்த கேக்கின் விலை 19.35 மட்டும் தான். அட இவ்வளவுதானா? என்று



அதற்குள் சந்தோஷப்படாதீர்கள். ரூ.19.35 கோடிகள்! பின்னே என்ன? இதற்குள் பதிக்கப்பட்டிருப்பவை 504 கரட் வைரங்கள் அல்லவா! இடம் டோக்கியோ நகரம்.

* * *

10 [illegible] சிறைத் தண்டனை உ[illegible]. ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற மாடல் மிஷேல் லேஸ்லி தனது பேர்ஸில் இரண்டு சின்ன மாத்திரைகளை வைத்திருந்தார். தன் தோழியின் பேச்சைக் கேட்டு அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினார். சிங்கப்பூரில் நடந்த ஒரு



நடன விருந்தின் போது அவரது பேர்ஸ் சோதனை செய்யப்பட்டது. அதில் அந்த இரு மாத்திரைகளும் போதைமாத்திரைகள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே கைது செய்யப்பட்ட அவருக்கு, மூன்று மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. விடுதலையாகி வந்திருக்கும் மிஷேல் இப்போது சின்ன தலைவலி மாத்திரையைக் கூட தனது பேர்ஸில் வைத்துக் கொள்வதில்லையாம்.

* * *

யோகா, ஸ்கேட்டிங் மூலம் தமிழ்நாடு தென்மாவட்ட பள்ளி மாணவர்களை அடிக்கடி சாதனை உச்சத்துக்கு அழைத்துச் செல்பவர் கோவில்பட்டி சுவாமி விவேகானந்தா யோகா செயலாளர் சுரேஷ்குமார். இவர் சமீபத்தில் சங்கரன் கோவில் கோமதி அம்பாள் பள்ளியில் மாணவர்களின் யோகா திறமையை அரங்கேற்றினார்.

இதில் முட்டைகளை அடுக்கி வைத்து அதன் மேல் அமர்வது,

நொறுங்கிய கண்ணாடி துகள்கள் மீது அமர்ந்து யோகாசனம் செய்வது என மாணவர்களின் சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே இருந்தது.

அனைத்தையும் அடுத்து [illegible] ஒன்றாக அடுக்கி வைத்து அதில் பள்ளி மாணவன் குருலிங்கசெல்வம் செய்த யோகாசனம் அனைவரையும் வியப்பிலாழ்த்த வைத்தது.

* * *

ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த ஒரு முஸ்லிம் பெண் மிஸ் பிரிட்டனாக ஆக முடியுமா? முடியும் என நிருபித்திருக்கிறார், ஹமாசா. தலிபானின் கட்டுப்பாடுகள் தாங்காமல் பிரிட்டனில் தஞ்சம் புகுந்த இவர் இப்போது மிஸ் பிரிட்டனாக தேர்ந்தெடுக்கப்பட்டு அசத்தி இருக்கிறார்.


கல்லும் உளியும் காதல் கொள்ள கருவுற்றது சிற்பக் குழந்தை
சொல்லும் செயலும் ஒன்றிணைந்து பெற்றதன் பெயர் வெற்றிக் குழந்தை
விதையும் விழும் விரும்பியபோது உயிர் பெற்றது நாடக் குழந்தை
நானும் அவளும் நேசிப்பதைப் பார்த்து யோசிக்கிறது உலகம்
சந்தேகமில்லை உருவாகிக் கொண்டிருப்பது புயல்தானாம்.

காமம் கலக்காத காதல் உண்டா?
லஞ்சம் கலக்காத அரசியல் உண்டா!.

* * *

நம்பிக்கை இல்லா மனிதன்
தும்பிக்கையில்லா யானை போன்றவன்.

* * *



"பில்லுக்கு பணம் இல்லை இந்தாங்க ட்ரவுசர், சேட்!"
"கைக் குட்டை எதுக்கு?"
"டிப்ஸ்....!"

# கவிதைப் புனல்

## தேசத்தின் ஆத்மா

தேசத்தின் ஆத்மா
உரத்து
குரலெழுப்புகிறது
உதிர்ந்து போன
உரிமைகளுக்கு
உயிரூட்டி......!

கோடி
உயிர்கள்
ஒடுங்கி
உருவெடுத்திருக்கும்
ஆத்மா
இன்னுமாய்
பல[illegible]
ம[illegible]
மகத்துவமா[illegible]
மரணங்களை
தழுவிகொண்டிருக்க.....!

ஓங்கி
ஒலிக்கும்
அதன் ஓசையால்
உணர்வுகளில்
முடிச்சு
நல்ல நிலத்தில்
விழுந்த
நல்ல விதைகளாய்....!

இடைவிடாத
பிரயத்தனங்களோடு
வேட்கை
கொள்கிறது
சுதந்திரம் மீது
இந்த
மகத்துவமான
தேசிய
தேசத்து ஆத்மா....!

*கு.பா.திபச்செல்வன்*
*யாழ் பல்கலைக்கழகம்*

## நினைவில்...

நீ சாப்பிடுகையில்
புரையேறினால்
நீயா நினைத்தாய்
என்பாய்
நான்
நினைக்கும் போதெல்லாம்
புரை ஏறும் என்றால்
நீ சாப்பிடவே
முடியாதம்மா?

*திவான்,*
*கொழும்பு.*

## மறக்க முடியுமா?

பத்து மாசம் என்னைச் சுமந்து
பாரினிலே பெற்றெடுத்து....
பாசமதை பாலாக்கி
பசி தீர்த்த தாயே.......
என்னுயிர் உள்ளவரை
உனை - என்றும் நான் மறவேன்

பள்ளி வயதினிலே
துள்ளி விளையாடி........
பாடசாலை செல்லும் போது
அள்ளி - என்னை அணைத்து......
அன்பு ஆசான்களை- என்றும்
நான் மறவேன்.......

துன்பங்கள் வரும் போது
துணையாக உடனிருந்து......
அன்பாலே அடிமையாக்கி
அரவணைத்த உடன்பிறப்புக்களே...
என் ஜீவன் உள்ளவரை - உங்கள்
அனைவரையும் நான் மறவேன்

*அமிர்தலிங்கம் - வசந்தன் .*
*அளம்பில்*

## வெற்றி காண்போம்

சண்டை தவிர்ப்போம்
சமாதானம் படைப்போம்
இனத்துவம் கலைப்போம்
சமத்துவம் காண்போம்
நிர்க்கதி நீக்குவோம்
நிம்மதி நிலைநாட்டுவோம்
வன்முறை போக்குவோம்
'வசந்தத்தை' ஆக்குவோம்
வேதனை விலக்குவோம்
விடிவினைக் காண்போம்
இருளை மாற்றுவோம்
ஒளியை ஏற்றுவோம்
கலவரம் மறப்போம்
கை குலுக்குவோம்
விடிவையே தேடுவோம்
வெற்றியைக் காண்போம்

*கன்னிமுத்து,*
*வெல்லப்பதியான்*

## ஆசை

நிலவே தினமும்
உன்னைக் காட்டி
ஆசை காட்டி
சோறு ஊட்டி
வளர்த்த மனிதர்கள்
எத்தனை எத்தனை
கோடி....
உனக்கு மட்டும்
தான் தெரியுமா?
நிலவே !
அத்தனை கோடி
மனிதர்களின்
கண்ணீரைத் துடைத்த
உன்னால்
மீண்டும் ஒரு முறை
என் கண்ணீரை
துடைக்க
முடியுமா?

*கே. தமிழமுதன் அஜித்*
*களுத்துறை-சிறைச்சாலை*

## அறுவடை நாள்

போரினால் விதைத்த கண்ணீரின் அறுவடையின் பின்
என் வயலில் நாளை நெல்லறுவடை
ஈரைந்து ஆண்டின் பின்
என் தாக அறுவடை

ஊருக்கு வந்து கனகாலமானாலும்
பண்டையோட்டுக் குறியிட்டால் மனமுடைந்து போய்
கடனுக்குவேண்டின அரிசியால்
கேடு கெட்ட வாழ்க்கை [illegible]

நிவாரணமும் உதவிகளும் சோமபேறி ஆக்க
விதானையின் தயவால் இழப்பட்ட சீவியம்
பிள்ளைகளின் படிப்புகளில் விழுந்தது அடி
என் பரம்பரைக்கு இதனால் வலி

முகட்டோட்டையால் நிலவின் முகம் பார்த்து
காற்றின் ஸ்பரிச தாலாட்டில்
சாக்குக் கட்டிலில் முகம்புதைத்து
தூங்கும் இன்பமே தனி

எலி வளையென்றாலும் தனி வளையாய்
என் குடிசை எனக்கு பக்கிங்காம் அரண்மனை
பனையோலை விசிறி இதமாய் சுகம்தர
பன்னிர்கனவுடன் இருள் விடியும்

அடுத்த வீட்டுச் சேவல் என்வீட்டில் கூவ
பைக்கண்டு செல்லமாய் தாயை அழைக்கும்
விடிகாலை நேரம் சுயம்பாகிப் போக
அறுவடை ஞாபகம் தேனை வார்க்கும்

கொண்டோடி ராசன் தவத்தின் பெடியன்
குமாரின் தம்பியென மூவர் வருவதால்
இன்றே சூட்டுக்கு வைக்கலாம்
இனியென் வாழ்வு சிறக்கும்

வாயில் விழுந்த நீர்த்துளி
என் கனவை கலைக்க
நான் கண்ட கனவா? மனது கேட்டது
கருமேக கூட்டம் பயத்தை கூட்டியது

முழங்கிப் பெய்த மழையால்
வயல்காடு வெள்ள[illegible]டு
கலைந்தோடியது நெல்மணி மட்டுமல்ல
என் கனவும் எதிர்காலமும்

*புதுவைச் சேந்தனார்.*

## கன்னித் தமிழ்

செந்தழ் மொழியின்
பெருமை அறிந்தேன் அதனால்
சொந்தமாய் எனக்கென
வைத்துக் கொண்டேன் அதை.

முத்துக்கள் பூத்தன மனதில்
கொடுத்து வைத்தவன்
நீயென்று- எனவே
வித்துக்கள் பல
விதைத்தேன்
விருட்சமாகும் நாளையென

காத்திருப்பேன் இன்றிலிருந்து
க[illegible]லைகளை மறந்து - இன்னம்
சேர்ந்திருப்பேன் புன்னகையை
உறுதியுடன் கன்னித்தமிழ்
நாற்று
உருவாக.

*மா.விக்னேஸ்வரன்,*
*பெரியமடு.*

## எப்படி மறந்தாய்

உயிரோடு உயிராகி
என் உள்ளத்தில்
உண்மையான அன்பை
வளர்த்து
காதல் என்ற கன்னிக்குள்
என் கண்களை சிக்க
வைத்தபின்
என் மனதையும் மாற்றி
என்னை உன்னில்
உறையவைத்த பின்
என்னை பிரிந்திருக்கும்
போது
உன்னை பார்க்க துடித்த
என் கண்களை கண்டு
உன் முகத்தினை
மறைத்தாயே!
அதுதான் கேட்கிறேன் ஓர்
கேள்வி உன்னிடம்
என்னை எப்படி மறந்தாய்?

*ஜான்சி,*
*கனகபுரம்*

## மௌன மொழி

நீ என்ன மொழியில்
சொன்னாலும்
எனக்குப் புரியும்
உன்
மௌன மொழியை
இன்னும்
என்[illegible]ல்
புரிந்து கொள்ள
முடியவில்லை

*றியாஸ்*
*ஒலுவில் - 02*

## ஏனன்பே?...

என் கேள்விகள்
உன்னிடம்
மண்டியிடும் போது
உன் பதில் மட்டும்,
ஊமையாகவே என்றும்
நீ என்னிடமே
மௌனத்தை விலை
பேசுகின்றாய்,
என் வார்த்தைகள்
உன்னிடம்
வாதாடியதை மறந்து...

*[illegible]*

## தாய்மை ஒரு தெய்வம்

நிலவினைத் தாங்கும் வானம் போலவும்
இயற்கையைத் தாங்கும் பூமி போலவும்
பாவங்களைத் தாங்கும் இறைவன் போலவும்
கருவிலே உயிரைத் தாங்குகின்ற தெய்வம்

எ.அஜென்தா
யாழ்ப்பாணம்

## இதயம்

மருத்துவத் துறையின் வளர்சி
இதயமாற்று அறுவைச் சிகிச்சை
இதயமே இல்லாத உனக்கு
இந்த சிகிச்சை செய்ய முடியாதா?

ஆ.சுதர்சனா,
நெல்லியடி.

## விடிவு

நாங்களும் நடக்கிறோம்
கானல் நீர் போலவே
எட்டி எட்டி செல்கிறது!

சி. இன்பராஜ்
மீசாலை

## நீங்காத நினைவுகள்

உன் நினைவுகளை இரைமீட்டுவதால்
கரைந்து போவது காலங்கள் மட்டுமல்ல
என் உறக்கங்களும் கூட
கண்ணீரால்
கவி எழுதி கரைந்து போகிறது என்
வாழ்க்கை .

செ. கவிக்குயில்.
முகமாலை.

## நட்சத்திரம்!

ஆகாயப் பந்தலில்
அந்திப் பொழுதினில்
அழகழகாய் பூத்து
கண் சிமிட்டும் வெள்ளிப் பூக்கள்

அ.யாழினி
மட்டக்களப்பு

## மரணம்

துக்கம் ஒரு தற்காலிகமான சாவுதான்
அதிலிருந்து விழித்துக்கொள்ள முடிகிறது
மரணம் ஒரு நிரந்தரமான துக்கம்- ஆனால்
அதிலிருந்து விழித்து கொள்ள முடிவதில்லை

எஸ். வனிதா
புங்குடுதீவு

## வான்மதி

இருளில் ஒளிரும்
தெரு விளக்காய்
இரவில் மட்டுமே உன்னழகு
பிரகாசமாக தெரிகிறது.

எஸ்.பி.லக்குனா
வட்டக்கச்சி

## குறுங் கவிதைகள்

எமது அன்புக்குரிய வாசகர்களே! நீங்கள் வழக்கமாக அனுப்பிவைக்கும் கவிதைகளுடன் குறுங்கவிதைகளும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. நான்கு வரிகளுக்கு மேற்படாத உங்கள் குறுங்கவிதைகளை ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்பி வையுங்கள். தரமான கவிதைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க காத்திருக்கின்றது உங்கள் அபிமான சுடர் ஒளி. பிரதி வாரமும் உங்கள் குறுங்கவிதைகள் எங்கள் கவிதைப் புனல் பகுதிக்கு அழகு சேர்க்கும். உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி

குறுங் கவிதைகள்
கவிதைப் புனல்
சுடர் ஒளி,
86, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14



# இலட்சியம்

## ஒரு தாயின் ஆசை

தெலுங்கில் சூப்பர் ஹிட்டான ஸ்டைல் தமிழில் லட்சியம் ஒரு தாயின் ஆசை என்று வரவிருக்கின்றது. கதை, திரைக்கதை எழுதி, இயக்கி, நடித்துள்ளார் ராகவா லாரன்ஸ். இதில் ஷார்மி, வேட்டையாடு விளையாடு கமலினி முகர்ஜி, கோவைசரளா, ஜெயசுதா ஆகியோருடன் சிரஞ்சீவி, நாகர்ஜுன் கவுரவ வேடத்தில் நடித்துள்ளனர். பிரபுதேவா, லாரன்ஸ் சேர்ந்து ஆடும் பாடல் காட்சி படத்தின் ஹைலைட்டாக இருக்கின்றதாம்.

# தீண்ட... தீண்ட...




கவனக் குறைவு பெரும் விபரீதத்தை ஏற்படுத்தி விடும் கதையே இது.தந்தை சொல்லை கேட்காது கிராமத்தை சுற்றிவரும் வாலிபன் அந்த ஊர் கனவானின் மகளை காதலிக்கின்றான்.
அவளது முறைமாமன் இராணுவத்தில் தொழில் புரிந்துவிட்டு வருகின்றான். அவள் வேறொரு வாலிபனை காதலிப்பதை அறிகிறான். முறை மாமன் கொண்டுவந்த தாலியை அவள் காதலிக்கும் ஆணிடமே கொடுத்துவிட்டு செல்கிறான். ஊர்த் திருவிழா தொடங்குகிறது
திருவிழாவில்யாரும் சாராயம் அருந்தக் கூடாதுஎன்று கிராமத்தலைவர் கட்டளை யிடுகிறார். அந்த நேரத்தில் அந்த இளைஞனும் பெண்ணும் கதைத்துக் கொண்டு நிற்கின்றனர். அதனை அவளது அப்பா கண்டுவிடுகிறார். பிறகென்ன... மிகுதி என்ன நடந்தது ... என்பதே கதை.
கிராமத்து இளைஞனாக புதுமுக ஹிவ்ஹாசன் இவரின் ஜோடியாக பீர்த்திமா, ஹராவ்யா ஆகியோர் நடித்திருக்கின்றார்கள். இன்னும் கொஞ்சம் கதையை மெருகூட்டிக் காட்டியிருந்தால் இன்னும் அற்புதமாக அமைந்திருக்கும்.
கதை, திரைக்கதை வசனம், இயக்கம், ஏ.பி.முகன், இசை (சங்கர்) கணேஷ், ஒளிப்பதிவு ஸ்ரீகணேஷ் (அறிமுகம்) அனைவரினது பங்கும் அற்புதமாகவே உள்ளது.
இன்னும் கொஞசம் கதையை உணர்ச்சி பூர்வமாக சொல்லியிருந்தால் பிரமாதமாகவே அமைந்திருக்கும். மொத்தத்தில் தீண்ட... தீண்ட... அற்புதம்.

**திரை விமர்சனம்**

# திருப்பதி வந்தால் ஹிட்டு



# என்னடிச் செல்லம்



முன்னணி நடிகர்கள் சிலர் அறிமுகம் இல்லாதவர்களை கூட உறவு முறைகளைச் செல்லி அழைப்பார்கள். அவற்றில் சிலர் இவ்வாறு அழைப்பர்

விஜய் - அண்ணா
விக்ரம்- ஹாய்
அஜித்-டார்லிங்
சரத்குமார், சூர்யா, எஸ்.ஜே.சூர்யா-பாஸ்
சத்தியராஜ், மணிவண்ணன்- தலைவா
தங்கர்பச்சான், இயக்குனர் சீமான்- தோழர்
வடிவேலு-என்னடி செல்லம்
விவேக்-ஹாய்... ஹாய்... ஹாய்....
பிரகாஷ்ராஜ்-ஹாய் செல்லம்

# ஓகே சொல்லியிருப்பேன்



'ஆயுத எழுத்து'க்குப் பிறகு மணி ரத்தினம் இயக்கும் படம் 'குரு' அபிஷேக் பச்சன், ஐஸ்வரியாராய் நடிக்கும் இப்படம் இந்தியில் மட்டுமே வெளிவரவுள்ளது. இதில் நடிக்க மாதவனை, மணிரத்தினம் கேட்டதாகவும் அவர் மறுத்ததாகவும் செய்தி வெளிவந்தது. ஆனால் இதை மறுக்கிறார். - மாதவன்.
மணிரத்தினம் மூலம் தான் பிரபலமானேன் 'குரு' படத்தில் நடிக்க அவர் கேட்கவே இல்லை. அப்படி கேட்டிருந்தால் கண்ணை மூடிக் கொண்டு ஓகே சொல்லியிருப்பேன் என்றார் மாதவன்.

# சின்னத் திரை



* 'மெட்டி ஒலி' தொடரின் மூலம் தமிழ் தாய் குலங்களை கொள்ளை கொண்ட சினிடைம்ஸ் நிறுவனம் அடுத்து 'மலர்கள்' என்ற மெஹா தொடர் மூலம் மறுபடியும் பெண்களை கவர ஆரம்பித்துள்ளது.

* 'கல்கி' தொடரை தயாரித்து நடித்துவந்த குஷ்பு, இத்தொடர் முடிவடைந்ததும் மீண்டுமொரு கதைத்தொடரை தயாரிக்க உள்ளாராம்.

* சித்தி, அண்ணாமலை, மனைவி ஆகிய மூன்று மெகா தொடர்களை அடுத்து இயக்குனர் சி.ஜே.பாஸ்கர் மற்றுமொரு குடும்ப அலுவலக பின்னணி கொண்ட கதையுடன் பெண் என்ற மெகா தொடரை இயக்குகிறார். இதில் ரங்கநாயகியாக நடிகை சீதா தோன்றுகிறார்.

* வெள்ளித்திரையில் நடித்து புகழ் பெற்ற கௌதமி மற்றும் ஹீரா இருவரும் சின்னத்திரைக்கு வருவதற்கு தயாராகி உள்ளனராம். நதியாவையும் சின்னத்திரைக்குக் கொண்டுவர ஒரு நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்துகிறதாம்.





தெலுங்கில் நயன்தாரா - வெங்கடேஸ் நடித்த 'லட்சுமி' செம ஹிட்.
பத்திராச்சியா நகரில் படத்தின் ரிக்கெட் வாங்க ரசிகர்கள் கூட்டம் திரண்டு வந்ததாம். இந்த அள்ளல் காரணமாக நயனுக்கு மார்க்கெட் எகிறி இருக்கிறது. 'லட்சுமி' படத்தின் தயாரிப்பாளர் பூஜி தொடர்ந்தும் மூன்று படங்களை தயாரிக்க இருக்கிறார். இம் மூன்று படங்களிலும் நயன் தாராவை நடிக்கும் படி கூறியிருக்கிறாராம்.
இப்படியே போனால் ஐதராபாத்தில் செட்டிலாகி விடுவார் போல் இருக்கிறது.

# அடைக்கலமாகும் நயன்



# சினி மினி

◆ 'வந்தேமாதரம்' என்ற 13 நிமிட குறுந்திரைப்படம் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் பாராட்டை பெற்றுள்ளது. 5வயது சிறுமியின் நாட்டுப் பற்றையும் தேசிய கொடியை மதிக்கும் தன்மையையும் உணர்த்தும் கதையாக இது அமைந்துள்ளது.

◆ பார்த்திபன் தனது வீட்டை விற்று 'பச்சைக்குதிரை' படத்தை எடுக்கிறாராம். இதில் கமல், விஜய், விஜயகாந்த், விக்ரம், சூர்யா, ஜாக்கிஜான் ஆகியோர்சிறப்புத் தோற்றமாக வந்து போகிறார்களாம். புதுவருடத்தில் படத்தை எதிர்பார்க்கலாம்.

◆ வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம் என்ற பாடல் பிரபல்யமடைவதற்கு, பாடகரா? நடனமாடிய கவர்ச்சி நடிகையா? என்று இருவருக்கும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாம்.

◆ இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பான 'காதல் கடிதம்' படு வேகமாக முடிவடைந்து வருகிறதாம். அற்புதமான கதையுடன் அழகான இயற்கை காட்சிகளையும் சேர்த்து மெருகூட்டப் பட்டுள்ளதால். காதல் கதைகளிலே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் படமாக இது அமையும் என்று கூறப்பட்டுள்ளது.

◆ ஷாலினியின் தங்கை ஷாமினி விரைவில் வெள்ளித்திரையில் கதாநாயகியாக அறிமுகமாகிறார். இவரை அறிமுகப்படுத்துபவர் பாசில். இவர்தான் ஷாலினியையும் அறிமுகப்படுத்தியவர்.

◆ 'தசாவதாரம்' படத்திற்காக கமல் மொட்டை அடிக்க போகிறாராம் மொட்டைத்தலையை கேலி செய்ய வேண்டாம் என்றாராம் கமல்.

கொடுத்துவிட்டு
வர் கட்டளை
டுவிடுகிறார்.
பிரித்திமா,
தையை
கும்.
கணேஷ்,
புதமாகவே
ால்
அற்புதம்.



# காதலுக்கு மரியாதை ஸ்ரீதேவி

தமிழில் விஜய் நடித்து வெற்றி பெற்ற 'காதலுக்கு மரியாதை' கன்னடத்தில் ரீமெக் செய்யப் படுகிறது. 'தேவதையை கண்டேன்' படத்திற்கு பின்னர் படங்கள் கிடைக்காத விரக்தியில் இருந்த ஸ்ரீதேவியே கன்னடத்தில் ஷாலினி கேரக்டரில் நடிக்கிறார்.



# சோதனையில் அரவிந்சாமி

'ரோஜா', 'மும்பாய்' உட்படபட பல படங்களில் நடித்து கொடிகட்டிப் பறந்த அரவிந்தசாமியின் மனைவி விவாகரத்துக் கோரி குடும்ப நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இவ் வழக்கிற்காக இருவரும் நீதிமன்றத்துக்கு சென்றிருக்கின்றார்கள். 45 நிமிடங்கள் அவர்கள் இருவரும் பேசினார்கள் இதையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பட்டாசு பத்திக்கிச்சு

காலை, கையைப் பிடித்தாவது காதலை வளர்ப்போம் என்று சத்தியாவும் கீர்த்தி சாவ்லாவும் இப்படி நெருக்கமாக இருக்கிறார்கள். 'பட்டாசு' பத்திகாது இருந்தால் சரி.



அமைதிக்கு பாபாஜி... அடிதடிக்கு சிவாஜி ஹ... ஹ...
பாம்பைப் பார்த்தா படையே நடுங்கும் இந்த சிவாஜியைப் பார்த்தா பாம்பே நடுங்கும்.
போன் அடிச்சா ரிங்கு... இந்த சிவாஜி அடிச்சா சங்கு...
கண்ணா சிங்கத்தை கொஞ்ச முடியாது. சிவாஜியை மிஞ்ச முடியாது.
சொல்லி அடிக்கிறவன் வீரன் சொல்லாம அடிக்கிறவன் கோழை நான் சொல்லவும் மாட்டேன் அடிக்கவும் மாட்டேன்.
ஆனா கொன்னுடுவன்...

# சிவாஜி பட கற்பனை வசனம்

# தமிழர்களை அழிக்க வேண்டும் என்பதே சிங்களத் தலைவர்கள் மனதில் இருந்தது




அத்தியாயம் 41

ஜனநாயக ரீதியிலான, அறிவுபூர்வமான ஒரு நாகரிக மக்கள் சமுதாயத்துக்கு எதிராகவே தாங்கள் போராடுவதாக 1961 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழரசுக்கட்சியினரும்,தமிழ் மக்களும் நினைத்திருந்தனர். அறிவுள்ள ஒரு மக்கள் சமுதாயமானது பொய்யுரைகளாலும், ஒடுக்கு முறைகளினாலும் தொடர்ந்தும் காலத்தை ஓட்டமுடியாது என்ற ஓர் உணர்வு பூர்வமான நிலையை அடையும் கட்டம் ஒன்று வரவே செய்யும். அப்படியான ஒரு நிலையை சிங்களவர்கள் விரைவாகவோ, காலம் தாழ்த்தியோ அடைந்தே தீருவார்கள் என்ற



நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)

தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந் நூலின் தொகுப்பு , தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

நம்பிக்கையுடனேயே தமிழரசுக்கட்சி தொடர்ந்தும் தனது போராட்டங்களை நடத்தி வந்தது. ஆனால் இந்தப் போராட்டங்களுக்கு சிங்களவர்களின் பிரதிபலிப்பு இந்த நம்பிக்கைகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கிவிட்டன. 'சமஷ்டியானது சிரிப்புக்கிடமான ஒன்று.சமாதான சகவாழ்வுக்கான ஒரு நம்பிக்கை' எனக்கருதுவது முட்டாள்தனமானது என்று சிங்களவர்கள் கருதுவதாகத் தெரிந்தது. சமஷ்டி முறையானது சகிப்புத்தன்மையும் வேறுபட்ட தன்மைகளுக்கு மதிப்பும் உள்ள நாடுகளிலேயே சாத்தியமாக முடியும். ஒரு பிரஜைகூட இரண்டாம் தரமானவர், அவர் தேவையற்றவர் அல்லது அவரது சொந்த நாட்டிலேயே அந்நியராகக் கருதப்படுகிறார் என்ற உணர்வுக்குள்ளாக்கப்படலாகாது. ஆனால், இலங்கை அப்படியான ஒரு நாடு அல்ல என்பதை சத்தியாக்கிரகமும், அதற்கு பிறகு நடந்த சம்பவங்களும் எடுத்துக்காட்டிவிட்டன.

**இன அழிப்பின் எஜமான்கள்**

இந்த நாட்டின் ஏஜமானர்களாக சிங்கள பௌத்தர்கள் தங்களை நினைக்கிறார்கள் என்பதையும் இதற்கு எதிராக தமிழர்கள் குரல் எழுப்புவார்களானால் சிங்களவர்கள் இன அழிப்பில் இறங்கிவிடுவார்கள் என்பதையும் சந்தேகத்துக்கிடமின்றி தமிழர்கள் புரிந்துகொண்டு விட்டார்கள்.

இன அழிப்பு (Genocide) என்ற சொல்லானது இன்றைய சர்வதேச அரங்கில் மிக மெலிதாகப் பயன்படுத்தப்படும் ஒன்றல்ல. 1983 ஆம் ஆண்டின் இரத்தக்களரியை வர்ணிப்பதற்குக்கூட பல எழுத்தாளர்கள் இச்சொல்லை மிகத் தயக்கத்துடன்தான் பயன்படுத்தி இருந்தார்கள். ஆனால், அந்தப் படுகொலைகளை மட்டுமல்ல எதிர்காலத்தில் தமிழர்கள் எதிர் கொள்ளநேரும் என்று எச்சரிக்கப்பட்டிருப்பவைகளையும் கூட வர்ணிப்பதற்கு வேறுசொல் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்தப்படுகொலைகளையடுத்து அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது [illegible]களைப் பார்த்து பின்வருமாறு [illegible]னார் என்று ஒரு தகவல் உண்டு.

"நான் ஒரு துரோகியாகவல்ல வீரனாக இருக்கவே விரும்புகிறேன். உண்மையில் தமிழர்கள் அனைவரையுமே இராணுவத்தைக்கொண்டு கொன்றொழித்து விட என்னால் முடியும். ஆனால், அதை நான் செய்யமாட்டேன்'' என்று.

அவருடைய அமைச்சர்களில் ஒருவரான காமினி திஸாநாயக்க இதே கருத்தை வெளியிடுவதற்கு நுணுக்கமான சொற்பிரயோகங்களை பயன்படுத்தாமல் பகிரங்கமாகவே அறிவித்தாராம், ''தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக இந்தியப்படையினர் இங்கே வருவதற்கு 14மணி நேரம் பிடிக்கும். ஆனால்,14 நிமிடங்களில் நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழனது இரத்தத்தையும் இந்த நாட்டுக்காக பலியிடுவதற்கு எம்மால் முடியும்'' என்று.

இவர்கள் என்னதான் சாமர்த்தியமாக இந்தச்சொற்களைப் பயன்படுத்தியிருந்தாலும், அதிகாரத்தில் இருந்த பொறுப்புள்ள சிங்களத் தலைவர்களின் மனங்களில் இலங்கையிலுள்ள தமிழர்களை அழித்தொழிக்கவேண்டும் என்பதே முளைவிட்டிருந்தது என்பது மட்டும் நிச்சயம்.

இரண்டாம் உலகமகாயுத்தம் ஆரம்பமாகவிருந்த தறுவாயில் அடோல்ப் ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியாவின் சுடெனட்லாந்து பிரச்சினை தொடர்பாக கருத்து வெளியிடுகையில் ஐரோப்பாவில் தனக்கு பிரதேச ஆக்கிரமிப்பு ஆசை ஏதும் கிடையாது என்று அறிவித்தார். இதனால் தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்து பிரிட்டன்,பிரான்ஸ் முதலிய நாடுகள் அமைதியாக இருந்துவிடவில்லை. இன அழிப்புபோன்ற சிந்தனைகளை வளர்த்துக் கொண்டுவரும் ஒரு மக்களுடன் இணைந்து வாழ்வதென்பது தற்கொலை புரிந்து கொள்வதன்றி

மூன்றாவது பங்கத்தில் வாழ்கின்ற தமிழர்களையும் ஆண்டு வருகின்றார்கள். அவர்கள் ஒரு ஏகாதிபத்திய மாதிரியிலான ஆக்கிரமிப்பு ஒன்றை தமிழர்கள் மீது பிரயோகித்துவருவதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதைத்தான் தமிழரசுக்கட்சி எதிர்க்கத்தொடங்கி இருந்தது.

பிரிட்டிஷார் போன்ற கனவான்கள் விடயத்தில் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் அடோல்ப்ஹிட்லர் போன்ற சர்வாதிகாரிகளிடம் அது பலித்திருக்குமா, என்று சிலர் கருதுகிறார்கள். ஹிட்லர்கள் இனிமேல் தோன்றமாட்டார்கள் என்று எவராலும் சொல்ல முடியுமா?

சத்தியாக்கிரகத்துடன் எனக்கு ஏற்பட்டிருந்த அனுபவம் காரணமாக இந்த சர்ச்சையில் தனிப்பட்ட முறையில் ஆர்வமும் ஏற்பட்டது.

மகாத்மா காந்தியின் வாழ்க்கையை சேர் றிச்சார்ட் அட்டன்பரோ என்பவர் திரைப்படமாக தயாரித்திருந்தார். அப்படம் இங்கிலாந்திலும், கனடாவிலும் திரையிடப்பட்டபோது அதனைப் பாராட்டி அநேகவாசகர்கள் பத்திரிகைகளில் எழுதினார்கள். அவர்களில் பலரும் காந்தியின் சாத்வீகபோர்முறை (அகிம்சை) யானது ஆயுதங்களுடன் நடத்தப்படும் போர்களின்போது மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி கேள்வி எழுப்பி இருந்தார்கள். முன்னாள் இலங்கை கவர்னர் ஒருவரின் கொள்ளுப் பேரனானஅலெக்சாண்டர் கொக்போன் எழுதியிருந்த ஒருகருத்து கவனத்துக்குரியதாயிருந்தது. காந்திய முறையின் பயன்பாட்டில் அவர் திருப்தி கொண்டிருந்ததோடு அமெரிக்க அரசியல் வாதிகளுக்கு ஆலோசனையும் கூறியிருந்தார். ஜனநாயக வாதிகளாக இருக்கும் அதேசமயம் போர் ஆயுதங்கள் குறித்த குடியரசு ஜனாதிபதி டொனால்ட்

அதனால்,ஜெனரல்டயர் திருப்பி அழைக்கப்பட்டதையும் அவருக்காக இங்கிலாந்தில் ஒரு நிதி சேகரிக்கப்பட்டதையும் நான் கூறாமல் விட்டுவிட்டேன்.

எனக்கு பின் இருந்த வரிசையில் ஒருவர் தனது சகாவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிப்பது கேட்டது. ''ஓ! கடவுளே! நான் ஆங்கிலேயன் அல்ல. நான் ஒரு ஐரிஷ்காரன்'' என்று.

இவையெல்லாம் என்னத்தைக் காட்டுகின்றனவென்றால், மேற்குலகில் ஒரு புதிய சக்தி உருவாகிவருகின்றது. அது தமது மூதாதையர் தமது சாம்ராஜ்யத்தைக் கட்டி எழுப்புவதில் ஈடுபட்டிருந்த காலத்தில் செய்துவிட்ட அட்டூழியங்களை நினைத்து வெட்கப்படுகின்றனர் என்பதே. நிச்சயமாக இலங்கையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு நேர்மாறான

## இந்தியப் படையினர் வருவதற்கு 14 மணித்தியாலம் செல்லும் ஆனால் 14 நிமிடத்தில் தமிழரை அழிப்போம் என்றார் காமினி

வேறொன்றுமில்லை.

சத்தியாக்கிரகத்தை அமைதியான முறையிலும் ,சாத்வீகமாகவும் நடத்துவதற்கு தமிழரசுக்கட்சி தீர்மானித்தபோது மகாத்மாகாந்தியின் சிந்தனைகளே அதற்கு வழிகாட்டியாக இருந்தன.

**இலங்கை - இந்திய நிலைமைகளின் வித்தியாசம்**

இந்திய நிலைமைகள் இலங்கையின் நிலைமைகளுக்கு மாறுபட்டவை என்பது தமிழரசுக் கட்சிக்குத் தெரியாமல் இருக்கவில்லை. அங்கே, பிரிட்டன் சுமார் 6,000 மைல்களுக்கு அப்பாலிருந்து ஆட்சி புரிந்தது. 40 கோடிமக்களை ஒரு சில ஆயிரம் பிரிட்டிஷ் துருப்புகளை வைத்துக்கொண்டு ஆளவேண்டியிருந்தது. அந்த கோடிக்கணக்கான மக்களை எழுச்சி கொள்ளச்செய்யவும் ஆட்சியாளரை தூக்கி எறியவும் காந்தி சத்தியாக்கிரகத்தைப் பயன்படுத்தினார்.

காந்தி எதிர்கொண்ட பிரிட்டிஷ் அரசானது, சாம்ராஜ்யத்தைக் கட்டி எழுப்பும் பழைய சிந்தனையிலிருந்து விடுபட்டிருந்தது. தொழில் கட்சியின் தோற்றததையடுத்து தாராளத்தன்மை கொண்டதோர் கலாசாரத்தை பிரிட்டன்பேணத் தொடங்கியிருந்தது.

ஆனால், இலங்கையில் நாட்டின் மூன்றில் இரண்டுபாகத்தில் குறிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் சுமார் 80 இலட்சம் சிங்களவர்கள் முழு நாட்டையும் ஆளுவதற்கான முழு அரசியல் அதிகாரங்களையும் சமீபகாலத்தில் கைப்பற்றிக் கொண்டதோடு, நாட்டின்

றீகனின் கருத்துக்களை மேற்கொள்ளும் இரட்டை நிலைப்பாட்டை கொண்டவர்களாய் ஜனநாயகவாதிகள் இருக்கிறார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். ஜனநாயகக் கட்சியினரை போய் காந்தி படத்தைப் பார்க்கும்படி யோசனை கூறியிருந்த அவர் அமைதியில் உண்மையாக நம்பிக்கை வைப்பத்திலும் அதற்காகப் போராடுவதிலும் உள்ள மேன்மையைக் கவனிக்கும்படியும் கேட்டிருந்தார்.

கனடாவில் மொன்ட்ரியல் நகரில் ஒரு தியேட்டரில் அந்தப்படத்தை நான் பார்த்தேன். ஜாலியன்வாலாபார்க் படுகொலைக் காட்சியில் உயரமான நான்கு சுவர்களுக்கிடையில் சிக்கிவிட்ட நூற்றுக்கணக்கான அப்பாவி ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எவ்வாறு துப்பாக்கியால் சுடப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள் என்பதைக்காட்டும் காட்சி உண்மையில் தத்ரூபமாக சித்திரிக்கப்பட்டிருந்தது. அக்காட்சியின் கோரத்தைச் சொல்ல முடியாது. எனக்கு பக்கத்து ஆசனத்தில் அமர்ந்திருந்த கனேடிய கனவான் என் பக்கம் திரும்பி ''இது எல்லாம் உண்மைதானா ''என்று கேட்டார். ''உண்மைதான்'' என்று நான் கூறினேன். ''அப்படியானால் அந்த இராணுவ அதிகாரிக்கு என்ன நேர்ந்தது'' என்று அவர் திருப்பிக்கேட்டார்.

''ஜெனரல் ஹரிடயர் இங்கிலாந்துக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். அந்த மாகாணத்தின் கவர்னர் ஓடியருக்கும் அது தான் நடந்தது'' என்று நான் கூற அவர் மகிழ்ச்சியடைந்ததுபோல் தெரிந்தது. அந்த மகிழ்ச்சியை நான் கெடுக்கவிரும்பவில்லை.

நிலைமையாகும் இது.

**மிருகங்களும் மனிதர்களும்**

இன்னொரு காட்சி தென்னாபிரிக்காவில் நடந்த சம்பவம் ஒன்றை சித்திரிப்பதாய் இருந்தது. ஒருவாயிலை சத்தியாக்கிரகிகள் அடைத்து நிற்கிறார்கள். தென்னாபிரிக்க குதிரை பொலிஸ் படையொன்று அவர்களை நோக்கிப்பாய்ந்து வருகின்றது. சத்தியாக்கிரகிகள் நிலத்தில் விழுந்து படுத்துவிடுகிறார்கள். மிக வேகமாக ஓடிவரும் குதிரைகள் நிலத்தில் கிடக்கும் சத்தியாக்கிரகிகளை அண்மித்ததும் சடுதியாக நின்று பின் நகர்ந்து விடுகின்றன. குதிரைகளின் மீது இருப்பவர்கள் வற்புறுத்தியும் குதிரைகள் சத்தியாக்கிரகிகள்மீது கால்வைத்து நடப்பதற்கு மறுத்துவிடுகின்றன.

இது உண்மையில் படத்துக்காக உருவாக்கப்பட்ட செயற்கைக் காட்சிதான் என்றாலும் அலெக்சாண்டர் கொக்போன் இக்காட்சி பற்றி வால் ஸ்ரீட் ஜேர்னலில் குறிப்பிட்டு எழுதுகையில், குதிரைகள் இவ்வாறு நடந்துகொள்வது இயற்கைதான் என்றும் தாமும் கலந்துகொண்ட ஈட்டன் ஸ்குயார் பெல்ஜியம் தூதரகம் முன் நடந்த ஒரு ஆர்ப்பாட்டத்தில் இவ்வாறான ஒரு சம்பவம் ஏற்பட்டது அனுபவபூர்வமாக தமக்குத்தெரியும் என்றும் தெரிவித்துள்ளார்.

குதிரைகள்போன்று சில மிருகங்களுக்கும் இப்படியான இயற்கைக் குணம் உண்டு என்றும் குறிப்பிடுகின்றார் அவர். ★

(தொடரும்)

# காதலின் முன்னே

கல்லூரிவிட்டு வீடுவந்த மலரினி தனது உள்ளத்திலே ஆழமான அந்த துயரத்தை மறைக்க முனைந்தாலும் அவளின் காய்ந்து வாடிப் போய் மங்கியிருந்த முகம் இதயத்தின் சுமைகளை அப்படியே காட்டிக்கொடுத்தது.

சிறுவயதிலேயே தந்தையின் இழப்பு அடிமனதில் ஆறாத்துயராக கறைபடிந்து இருந்தபோதும், நிறைவான தனது தாயாரின் அன்பிலும் அரவணைப்பிலும் அனைத்தையும் மறந்து வாடாமலராய் பிரகாசித்த அவளின் முகம் வாடிப் போனதை அவளின் தாயார் கமலத்தால் தாங்கிக்கொள்ள முடியாமலே போனது.

விரும்பியதையெல்லாம் தனது பிள்ளைக்கு வாங்கிக் கொடுத்த தன்னால் அவள் விரும்பிய வாழ்க்கையை மட்டும் கொடுக்க முடியாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் தாய் கமலத்துக்கு. எனினும் தாய் கமலத்தின் ஆறுதல் வார்த்தைகள் வெளிமனதினைச் சமாதானப் படுத்தினாலும் உள்மனதில் உறைந்திருந்த துன்பத்தை ஆற்றமுடியவில்லை. இரவுச் சாப்பாட்டில் விருப்பமின்றி எட்டுமணிக்கெல்லாம் கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டாள். கடந்த காலங்கள் மீண்டும் நினைவில் வந்தன.

* * *

எட்டு வருடங்களுக்கு முன் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிந்தாள் மலரினி. வகுப்பிலே எல்லாப் பாடங்களிலும் அக்கறை இருந்தாலும் அதற்கும் மேலாக சங்கீதம் என்றால் அவளுக்கு உயிர். எந்தப் போட்டிக்குப் போனாலும் முதல் இடம்தான். அந்த வருடம் நடந்த மாவட்ட தமிழ்த்தினப் போட்டிக்குச் சென்ற மலரினிக்கு கடும் போட்டியாக வந்த மாணவன் நிக்சன். இதுவரை முடிவடைந்த போட்டிகளில் மலரினி முதற்பரிசை தட்டாமல் விட்டதில்லை. ஏனோ அன்றைய போட்டியில் அவனுக்காக விட்டுக்கொடுத்தாளோ என்னவோ இரண்டாம் பரிசுதான் அவளுக்குக் கிடைத்தது.

போட்டி முடிந்ததும் நிக்சனிடம் தன்னை அறிமுகப்படுத்துவதற்காகவும் அவனை அறிந்துகொள்வதற்காகவும் சென்று "கென்கிறாயுலேசன்" என்றவாறு கையை நீட்டினாள்.

இதனை எதிர்பார்க்காத நிக்சன் சற்றுத் தயங்கினாலும் பின்பு தன் கையையும் கொடுத்தான், சிறு புன்னகையுடன். கைகள் இணைந்து கொண்டவேளை இவர்கள் மனங் களும் இணைந்தமை இருவருக்குமே தெரியாமல் போனது.

"இதுவரைக்கும் எந்த மியூசிக் கொம்பற்றிசனிலும் தோற்க வில்லை. முதல் முறையாய் உம்மிடம் தோற்றிருக்கிறேன்" என சிரிப்போடு மலரினி சொல்ல "பிளீஸ் இதை நினைத்து வொறிபண்ண வேண்டாம். இன்று விட்டால் என்றோ ஒருநாள் என்னை ஜெயிக்கலாம்." என்றான் நிக்சன் அர்த்தமின்றி வெறுமனே அன்று கூறிய வார்த்தையிலும் பெரும் அர்த்தம் புதைந்திருந்தது அப்போது புரியாமல் போனது.

ஏ.எல். படித்துக் கொண்டிருந்த காலத்திலும் இடையிடையே சந்தித்தாலும் சும்மா ஒரு "ஹாய்" சொல்வதுடன் முடிந்துவிடும். ஏ.எல். பரீட்சையும் நெருங்கியது. மலரினியின் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தர மாணவர்களுக்கான இறுதி ஆண்டு பிரிவுபசார வைபவத்தில் ஒரு மேசையில் அமர்ந்தவள் நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு எதிரே அயல்பாடசாலை மாணவனாக-அங்கே நிக்சன் வருகை தந்திருந்தான்.

சாதாரணமான தோற்றமும் மென்மையான அவனின் பேச்சும் கண்ட முதல்நாளே அவள் மனதில் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒரே நேரத்திலே இருவரும் "ஹலோ" என்றனர்.

"மலரினி நீங்கள் என்ன பாடம்" என்று கேட்க "ஆட்ஸ் செய்யிறேன். மியூசிக்கும் ஒரு பாடம். அது சரி இரண்டு வருடம் தமிழ்த்தினப்போட்டிக்கு காணவேயில்லை..." என்று இழுத்தாள்.

"ஓ... நீங்க முதல் இடம்தானா?" என்றான் ஜோக்காக? "ஆமாம் ஆனால் நீங்கள் வராதது போட்டியே டல்தான்..." என்று தயங்கியவளின் உள்ளத்தை நிக்சனாலும் புரிந்துகொள்ளமுடிந்தது.

"நிக்சன், நீங்கள் மற்ஸ் தானே செய்யிறீங்க. எஞ்சினியரிங் என்ரபண்ணுவீங்களோ" என்று சட்டெனக் கேட்க "நிச்சயமாக எனக்கு நம்பிக்கையிருக்கு" என்ற பதில் மலரினியின் உள்ளத்தில் நிக்சனைப் பற்றிய எண்ணத்தை ஒருபடி மேலே உயர்த்தியது.

சில நாட்கள் மலரினியோடு பழகியிருந்தாலும் அவளின் துடுதுடுப்பான பேச்சும் கள்ளமில்லாமல் பழகிய அவளின் உள்ளமும் நிக்சனின் மனதில் காதலை ஏற்படுத்தியது. இருவர் உள்ளத்திலும் தோன்றிய ஒத்த காதலின் ஆரம்பமாகவே அன்றைய வைபவமும் இருந்தது. இருவரும் பாடக்கூடியவர்கள். அயல் பாடசாலை மாணவர் என்ற வகையில் பாடுவதற்காக நிக்சன் அழைக்கப்பட்டான். மலரினியின் மேலான காதலின் வெளிப்பாடாகவே "எனக்கென எனக்கென பிறந்தவள் இவளா. இதயத்தை கூடுகட்டி இழுத்த வளிவளா..." என்று பாடிய நிக்சனின் நினைவுகள் மலரினியை நோக்கியிருந் தாலும் மலரினியின் உள்ளத்தில் அவன்மீது ஏற்பட்ட காதலால் அவன் பாடியது தனக்காகத்தான் என்றெண்ணி கனவுகளில் மூழ்கியிருந்தபோது திடீரென்று 'மலரினி' என்று பாடுவதற்காக அவள் அழைக்கப்பட்டாள்.

"நெஞ்சினிலே நெஞ்சினிலே வந்தது யாரோ நீதானே. உன்னுடலில் உன்உயிராய் வந்தது யாரோ நான் தானே..." என்ற பாடலை மலரினி பாடினாள். அவர்களின் நட்பு காதலாய் மாறியது.

காதல் வாழ்வு ஐந்து வருடங்கள் இனிமையாக நகர்ந்தது. மலரினி நுண்கலைத்




துறையில் பட்டம் பெற்றாள். நிக்சனும் ஐந்து வருட பொறியியல் துறைப் படிப்பை முடித்துக்கொண்டான்.

நிக்சனின் காதல் விடயம் பற்றி அவனது பெற்றோருக்கு தெரிந்தது. ஆனாலும் நிக்சனின் இளமையான இரு தங்கைகளுக்கும் திருமணம் செய்து கொடுப்பதற்கு நிக்சனை நல்ல சீதனத்தோடு திருமணம் செய்து கொடுக்கவே [illegible] ஆனால் நிக்சனோ [illegible] மலரினியின் திறமையை எடுத்து சொன்னதற்கு "அப்படியென்றால் உனக்கு வேற பொம்பிளை இல்லையோ. அப்படியென்ன பெரிய காதல்... அவளை மறந்திடு" என்று ஒரே நொடியில் சொல்லிமுடித்தாள் தாய். சட்டென நிக்சனுக்கு இதயத்தை ஒரு தடவை உலுப்பியது. ஐந்து வருடம் அணு அணுவாய் வளர்த்த தூய்மையான அந்தக் காதலை ஒரே நொடியில் பிடுங்கி எறிய அதுவென்ன மரமா என்று நினைத் தவனுக்கு கோபம் தலைக்குமேல் ஏறியது.

கணவர் இருக்கும் போது மகளுக்காக ருபா ஒரு லட்சம் வங்கியில் போட்டு வைத்திருந்தார். ஆனாலும் இவர்களுடைய எதிர்பார்ப்புக்கு தன்னிடம் இல்லை என்று தெரிந்தும் "அப்படியென்றால் எவ்வளவு எதிர்பார்க்கிறியள்?" என்றாள் கமலம்.

"மகன் இஞ்சினியர் என்ன ஒரு நாற்பது லட்சம் என்றாலும்..." என இழுத்தாள் நிக்சனின் தாய்.

கமலம் மலைத்துப்போனாள். "எங்கட வீட்டு நிலைமை தெரியும் தானே. யோசித்து சொல்றம்...." என்றாள்.

தந்தைக்கு தந்தையாய், தாய்க்கு தாயாய் நின்று ஒரே மகளின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்ற ஆவதுக்கு தன் பிள்ளையின் சுடுமை வாழ்க்கையை; விரும்பிய வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க முடியாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் அவளுக்கு நெஞ்சை [illegible] தனது வாழ் [illegible] இழந்து விடு [illegible] மலரினிக்கு.

* *

[illegible] அவ [illegible] இல்லை. ஆனால் அவ [illegible] அன்பு வைத்திருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியும். "மலர் உன்னைப்பிரிந்து என்னால் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது" என அடிக்கடி நிக்சன் சொல்லுவானே. "உன்னை மட்டும்தான். உன் அன்பை மட்டும்தான் எதிர்பார்க்கிறேன் என்று கடைசியாக சந்தித்தபோதும் கூறினானே! சிலவேளை நிக்சன் இருவாரம் செமினருக்கு முல்லைத்தீவுக்கு போன இடைவெளிக்குள் அவனுக்குத் தெரியாமல்தான் அவனது

நிக்சனுக்கு தெரியாமல் அவனது பெற்றோர் மலரினியின் வீட்டுக்குச் சென்றனர். "உங்கட மகள் எங்கட மகனை லவ் பண்ணுறதாக சொன்னான். எனக்கும் இரண்டு பெண்பிள்ளைகள் அதுகளையும் கரைசேர்க்கவேண்டும். அதனால சீதனத்தோட திருமணம் செய்வம் என்று யோசிக்கிறம்" என வந்ததும் வராததுமாய் சொல்லி முடித்தனர்.

பெற்றோர் வந்து இப்படிக் கதைத்தார்களோ? அல்லது அவனும் சேர்ந்து தெரியாதமாதிரி நடிக்கிறானோ? தாய் தகப்பனுக்காக மனம் மாறிவிட்டானோ? அப்படியென்றால் நான்... இல்லை இல்லை. என் உண்மையான காதல் அழிந்துபோகாது. இப்படி அவள் மனதை சமாதானப்படுத்தினாலும் பெருமனப் போராட்டத்திற்குள் சிக்கி முடிவின்றி விடிய இரண்டுமணிவரை நித்திரைகொள்ளாமல் புரண்டுகொண்டிருந்தாள். எதுக்கும் நாளைக்கு நிக்சன் வரட்டும் என்றவாறு தாயாருக்கு அருகில் சென்று படுத்தவளுக்கு தாயாரின் வருடல் ஆறுதலையும், ஆழ்ந்த உறக்கத்தையும் கொடுத்தது.

காலை ஐந்துமணி. கோணேஸ்வர நாதன் ஆலய மணியோசையினைக் கேட்டு காலை பூசைக்காக கோணேஸ்வரம் சென்றாள். விடையின்றி கிடந்த கேள்விகளுக்கு விடைகேட்டு அழுதாள். மனப்போராட்டத்திற்கு முடிவு வேண்டினாள். இதயச்சுமைகளை இறைவனின் பாதங்களில் கொட்டித் தீர்த்தாள். மன அமைதி, ஆறுதல் அவளுக்கு வாழ்க்கையை வென்றுவிடலாமென்ற ஒரு புதுத்தெம்பு.

வேலை முடிந்து வீடுவந்த நிக்சனுக்கு இரண்டு கிழமை மலரினியை காணாமல், பேசாமல் இருந்தது பல வருடங்கள் பிரிந்திருந்த உணர்வு. ஆனால் தாயின் வார்த்தைகளைக் கேட்ட அவனால் அதைப் பொறுத்துக் கொள்ளமுடியாதிருந் தது. அந்தவேளை தன் உண்மையான காதலை தாய் அன்பின் முன்நிறுத்திப் பார்த்த அவனுக்கு காதலே பெரிதாய் மனதில் உயர்ந்து நின்றது. பெற்ற மகனையே விலைபேச நினைத்த தாயன்பை விட தூய்மையான காதலியின் அன்பு கனமாகவே இருந்தது.

வரதட்சணையாக பெண்களின் வாழ்வுக்கு கொடுப்பதெல்லாம் வலுக் கட்டாயமாக்கப்பட்டு பெண்களின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி நின்றது உண்மையான காதலன் நிக்சனுக்கு வருத்தமாயிருந்தது. தவமிருந்து பெற்ற ஒரு ஆண்மகனை வெறும் நாற்பது லட்ச பெறுமதிக்கு விலை பேசியபோது [illegible] எங்கே போனது? கண்ணின் இரு [illegible] அந்தப் பெண் தன் பிள்ளையின் [illegible] கேள்விக்குறியாகி நின்றபோது, அ[illegible] எண்ணிக் கலங்கியபோது, அந்தப்பெண்ணின் நிலையில் நின் [illegible] வேண்டிய தன்தாய் யாரோ ஒருவ[illegible] இரத்தத்தை உருக்கி உழைத்த பண[illegible] நம்பித்தான் தன் இரு பெண்பிள்ளைகளையும் பெற்றா[illegible] குடும்பத்தை உழைத்துப் பார்க்க[illegible] ஒரு கோழை மகனாக என்னை நினைத்தார்களா? பிள்ளையின் சந்தோஷத்தை விட பணத்தைத்தா[ன்] அதிகமாக மதித்தாளா? தாய்மை [illegible] உறவை விலைபேசி அதை அழிச் நினைக்கிறார்களா? பணமில்லையே வாழ்வில்லை என்று எங்கும் மலரினிபோன்ற எத்தனையோ பெ[illegible] கன்னிருக்குறிப் வே இல்லையா? [illegible] கொடுமைகளுக்கும் மத்தியில் பெ[illegible] திதானே உன்னை நிறுத்துகிறாய்.

இவ்வாறு நிக்சனின் சிந்தனையி[illegible] கேள்விகளுக்கெல்லாம் விடையாய் மலரினிதான் நின்றாள்.

வலுவிழந்த தாயன்பைவிட தூய்மையான காதலினை வாழவை[க்க] நினைத்தான் நிக்சன். தாயை மீறிச் சென்று மலரினியை அழைத்துக்கொண்டு பதிவுத் திருமணம் செய்துகொண்டான்.

நிக்சனின் வாழ்வு மலரினியோடு இனிமையாகவே நகர்ந்தது. அவர்கள் எதையும் இழக்கவில்லை. ஆனால் [illegible] தொலைந்து அர்த்தமின்றிப் போனது. தாயின் அற்ப சொற்ப கனவுகள் உடைந்து சிதறி மகிழ்வின்றிப் போனது. தாய் பெற்றதை விட இழந்தது தானே அதிகம்.

பெண்ணே நீ கொடுப்பதால் வாங்கிப் பழகிவிட்டான். கொடுப்பதை நிறுத்து, உலகமே சன்னியாசம் போய் விடுமா, என்ன? அன்பு, காதல் என்ற மதிப்பிட முடியாத உறவுகளை சரியாக இனங்கண்டு கொள்! காதல் என்ற உறவை மதித்து கொள்.

# சிறுவர் பக்கம்

# அமைதி... அமைதி...



விச்வேச்வரா என்ற காட்டில் காகங்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுப்பதும் ஒன்றின் குஞ்சுகளை மற்றவை பராமரிப்பதுமாக ஒன்றின் பாரத்தை மற்றவை சுமந்தன. இதைக் கண்ட நரி ஆத்திரம் அடைந்தது. இவைகளை எப்படிப் பிடிப்பது? என்று திட்ட மிட்டது.

நரி எங்கோ இருந்து சோளப் பொரி மூட்டை ஒன்றைத் தூக்கி வந்து ஒரு பகுதியில் கொட்டி விட்டுச் சென்றது.

கொஞ்சம் சோளப் பொரி மட்டும் கொட்டியிருந்ததால் அங்கே போட்டி உருவாகியது. நான்... நீ! என்று காகங்கள் போட்டி போட்டுக் கொண்டு கொத்த ஆரம்பித்தன.

திடீரென்று காக்கைள், சிறகுகளை விரித்தபடியே ... எழுந்தும் பறந்தும் பாய்ந்தும் மோதிக் கொண்டன.

காடே போர்க்களமானது. அந்தப் பக்கம் ஒரு மைனா வந்தது. அது ஒற்றுமையாக இருக்கும் காக்கா கூட்டத்தை எப்பவும் மதிக்கும். ரசிக்கும். இன்று இவர்களின் சண்டை மைனாவை வருத்தமடையச் செய்தது. இதை இப்படியே விட்டால் இவைகளுக்குள் ஒரு பெரிய சண்டையே வந்துவிடும் என்று பயந்தது. இதை முளையிலேயே கிள்ளி எறிய நினைத்தது. ''காகங்களே ...'' என்ற மைனாவின் அழைப்பை கேட்டு காகங்கள் சண்டையை நிறுத்தின!

" உங்களது ஒற்றுமையை கண்டு காடே ஆச்சரியப்படுகிறது.. உங்களுக்கு உணவு கிடைத்தால் மற்றவைகளையும் நீங்கள் அழைத்து உண்ணும் உங்கள் குணத்தை மனிதர்களே பாராட்டுகின்றனர். அப்படி இருக்க உங்களுக்குள் அடித்துக் கொள்ளலாமா?'' என்றது மைனா. உண்மையை உணர்ந்த காகங்கள் உடனே சண்டையை நிறுத்தி விட்டு அமைதியாயின.

தம்பி, தங்கைகளே இந்த உலகில் நரியைப் போன்று உங்களை பிரிக்க நினைக்கும் மனிதர்களும் உண்டு. உங்கள் மீது அக்கறை கொண்ட மைனா போன்ற மக்களும் உண்டு. நீங்கள் தான் இவர்களை அடையாளம் கண்டு நல்லவர்களோடு மட்டும் பழக வேண்டும்.

## வட்டத்திற்குள் சிக்கும் வார்த்தைப் புதிர்கள்

இங்கு கலைந்த நிலையில் சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி நேர் எதிரே உள்ள கட்டங்களில் நிரப்பவேண்டும். பின்னர் வட்டத்திற்குள் சிக்கியிருக்கும் எழுத்துக்களை மட்டும் எடுத்து ஒழுங்குபடுத்தினால் படிப்பினை தரக்கூடிய ஒரு பழமொழி கிடைக்கும். அது என்ன பழமொழி என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பெ | ம் | மை | து |
| 2. | ப | ம் | ட | ட் |
| 3. | அ | பி | தா | னு |
| 4. | க | க் | து | ம் |
| 5 | மை | றி | அ | யா |
| 6. | அ | ர் | கா | லி |
| 7. | ச | ரி | க | ல் |
| 8. | பொ | ப் | பு | று |

[illegible]



ந.லோ[illegible]ல்டன்
அளம்பில் R.C பாடசாலை
அளம்பில்,
முல்லைத்தீவு.



இராசநாயகம் இதயா
தரம்-09
யா-புங்குடுதீவு
மகாவித்தியாலயம்





[illegible]
செம்மலை
முல்லைத்தீவு.

## விஞ்ஞான விளக்கம்

1. தாமரை இலையின் மேல் நீர் பட்டால் அதில் நீர் ஒட்டிக் கொள்வதில்லை.
- தாமரை இலையில் ஒருவகை மெழுகு காணப்படுகிறது. இதில் நீர் பட்டால் ஒட்டிக்கொள்வதில்லை.

2. விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள கீரைகளின் மீது அடிக்கடி நீர் தெளிக்கப் படுவதுண்டு.
- ஆவியுயிர்ப்பினால் கீரை வாடுவதையும் வாடுவதால் அதிலுள்ள சில விற்றமின்கள் அழிவதையும் தடுக்க.

3. நீரில் வாழும் மீன்களில் அதன் வால் எதற்காக உதவுகிறது.
- நீரினுள்ளே செல்லும் போது வேறு திசையில் திரும்புவதற்காக பயன்படுகிறது.

கணேசலிங்கம் ரசிதா
உருத்திரபுரம், கிளிநொச்சி

## பொது அறிவு

- உப்பு நீரை விரும்பிப் பருகும் உயிரினம் ஒட்டகம்.
- ''பாவேந்தர்'' என அழைக்கப்படுபவர் பாரதிதாசன்.
- * உலக வளி மண்டலவியல் தினம் மார்ச் 23.
- உலக உயிரினங்களின் தினம் ஒக்டோபர் 06.
- பரசூட்டைக் கண்டுபிடித்தவர் ஏ.ஜே.கனேரின்.
- உலகிலேயே மிகவும் பரந்த கடல் தென்சீனக் கடல் (29,74,600ச.கி.மீ) ஆகும்.

ச.சத்தியவாணி
கொ/கணபதி இந்து மகளிர்
வித்தியாலயம்,
நவகம்புர-2





## அன்புக்குரிய தம்பி தங்கைகளே!

உங்களுக்குரிய சிறுவர் பக்கத்தில் பேனா நண்பர் பகுதி ஒன்றை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடவுச்சீட்டு (Passport Size) அளவிலான உங்கள் வர்ணப் புகைப்படத்துடன், உங்கள்

- பெயர் -
- முகவரி -
- பொழுதுபோக்கு -
- கல்வி கற்கும் ஆண்டு -
- பாடசாலை -
- தொடர்பு மொழி -

**இவற்றையும் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

வாரா வாரம் இவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும். அத்துடன் சிறுவர் பகுதியை அணி செய்ய உங்கள் ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
சிறுவர் பக்கம்
சுடர் ஒளி வாரஇதழ்
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை
கொழும்பு- 14.

குறுங்கதை

# நேற்று இன்று நாளை..!

2006 தை மாதம் , யாழ்.நகரே வெறிச் சோடி அமைதியாக காட்சி அளித்தது. விடிந்தால் தமிழர் திரு நாளாம் தைப்பொங்கல். வீட்டை விட்டு வெளியே பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர் பயப்படும்காலப்பகுதி அது.

இப்படியிருக்க எப்படித்தான் சந்தோஷமாக பொங்கல் தினத்தை கொண்டாட முடியும்! இனியும் இங்கே இருந்தால், ஒவ்வொரு நொடியும் செத்துப்பிழைக்க வேண்டும் என எண்ணிய தாமரை தனது மகள் தர்சினியையும் அழைத்துக் கொண்டு யாழ். நகரை விட்டு வன்னிக்கு இடம் பெயரும் மக்களோடு மக்களாக கிளிநொச்சி வந்து சேர்ந்தாள். தற்காலிக வீடு ஒன்றில் அவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

தாமரை கல்யாணம் முடித்து ஒரு வருடத்திலேயே கணவனை இழந்தவள். அதுவும் 1996ஆம் ஆண்டு யாழ் நகரில் நிலை கொண்டிருந்த சிங்கள இராணுவக் காடையர்களின் வெறியாட்டத்துக்கு இலக்காகி கணவன் உயிரிழந்தான்.

தாமரைக்கு இரண்டு அண்ணன்மார்கள். ஆனால் அவர்கள் இருவரும் இங்கில்லை. லண்டன் வதிவிட வாசியாகி விட்டார்கள். அவர்களின் உதவியோடு தான் மகள் தர்சினியை ஓ.எல் அளவுக்காவது படிக்க வைத்தாள் அவள்.

தாமரை மதிய உணவு தயார் செய்து கொண்டிருக்கும் நேரம் பார்த்து அங்கு வந்தாள் தர்சினி.

"அம்மா நான் ஒண்ணு சொன்னால் கோபிக்கக் கூடாது."

"ம்.... சொல்லு என்ன புள்ள விசயம்?"

"அம்மா நான் தற்பாதுகாப்பு பயிற்சி எடுக்கப் போறன்."

தாமரைக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை.

"என்ன புள்ள பேசிற உனக்கென்ன விசர் கிசர் பிடித்து விட்டதா? படிக்க வேண்டியது இன்னும் நிறைய இருக்க அதையெல்லாம் விட்டு விட்டு ,வெட்டித் தனமாக என்னோடு வந்து பேசாதே பிறகு எனக்கு ஆத்திரம் வந்து விடும் சொல்லிப் போட்டன் ஓ...."

"அம்மா தமிழர்கள் உயிருக்கு பயந்து ஓடி.. ஓடி.. ஒளிஞ்சகாலம் போய் எமக்கு தீங்கு விளைவிக்கும் எதிரியை எதிர் கொள்ள எப்பவும் எங்களை நாங்களே தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய சூழ்நிலைக்கு வந்து விட்டோமம்மா."

"இப்படித்தான் புள்ள புலிகள் முதல்ல தற்பாதுகாப்பு பயிற்சி எடுங்கள் என்பார்கள். பிறகு பயிற்சி எடுத்தனி தானே கையில துப்பாக்கியை எடு என்று கூறி போராட அழைப்பார்கள் இந்த வீண் வம்பு உனக்கு ஏன் புள்ள?"

"அம்மா நீ நினைக்கிற மாதிரி புலிகள் இல்லை. அவர்கள் இயக்கத்தில் சேர வேண்டும் என்று நேரடியாக கேட்பார்களே தவிர, இந்த தில்லு முல்லு வேலை எல்லாம் அவர்களுக்குத் தெரியாது! அதெல்லாம் இலங்கை அரசுக்குத் தான் தெரியும். தற்பாதுகாப்பு பயிற்சி என்பது தங்களது உயிரை தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்காகவே தவிர, வேறு எதற்கும் இல்லை இதை முதல்ல நீ புரிஞ்சுக்கோம்மா."

"நேற்றுத் தானே புள்ள இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவிச்சு சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரைத் தேர்ந்தெடுத்தார்கள். இனி எதற்காக நாம் பயப்படணும். இன்னும் ஒரு மாதமோ இரு மாதமோ இங்கு இருந்து விட்டு யாழ்ப்பாணம் போக வேண்டியது தானே"

"அம்மா நீ பேப்பர் பார்க்கவில்லையா? உடன்பாடில்லாத ஒன்றினுள் நீ ஏன் அம்மா மூக்கை நுழைக்கிறாய். இரு தரப்பும் பேச்சு வார்த்தைக்கு வந்தபோதும் இன்னும் யாழ் மக்களின் இயல்புநிலை திரும்பவில்லை அம்மா. வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் போக ஹயருக்கு வானை விடச் சொன்னா வான்காரர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

கொழும்பு போக வேணும் என்றால் வருவினமாம் யாழ்ப்பாணம் என்றால் வரமாட்டினமாம். இதிலிருந்து என்ன புரிகிறது.கொஞ்சம் சிந்தித்துப்பாரம்மா".

சொல்லி விட்டு தாயிடமிருந்து நழுவ பார்த்தவளை எட்டிப் பிடித்தாள் தாமரை.

"இந்த தற்பாதுகாப்பு பயிற்சி உனக்கு வேண்டாம் புள்ள தயவு செய்து உன் அம்மா பேச்சை கேள் புள்ள"

"அம்மா இனியும் என்னை அடுப் படியில் அகப்பை பிடிக்க வைக்காதே! உன்னை போன்ற தாய்மாரின் பாசத்துக்கு கட்டுப் பட்டு அவர்கள் பேச்சை கேட்டுத் தான் நேற்று கிருஷாந்தி, சாரதாம்பாள் இன்று தர்சினி நாளை...! இவர்கள் போல இன்னும் பல பெண்கள் சிங்கள இராணுவத்தினால் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படலாம். நேற்று நடந்தவை, இன்று நடப்பவை, நாளை நடக்கப்போபவை இவற்றை தடுக்க வேண்டாமா? இதற்கொரு முடிவு கட்ட வேண்டாமா? சொல் அம்மா சொல்"

ஆவேசம் பொங்க வார்த்தையில் அனல் பறக்க தாயிடம் கேட்டாள் அவள்.

மகள் சொன்னதில் நியாயம் தெரிந்ததால் மகளின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் மௌனம் காத்தாள் தாமரை.

இதுதான் தருணம் என்று நினைத்த தர்சினி "நான் பயிற்சி எடுக்கப் போட்டு வாறனம்மா" என்று சொல்லி விட்டு நகர மகளின் பேச்சுக்கு மதிப்பளிச்சு,மகளை வழி மறிக்காது, மறுப்பேதும் தெரிவிக்காது, சிலையாய் நின்றாள் தாமரை.

**எஸ்.பி.லக்குணா**
**வட்டக்கச்சி**

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' 17–04–2006 முதல் 23–04–2006வரை**
**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேடம். இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது பலன் குறையலாம். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும், முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். குறுந்தூரப் பிரயாணம் அமையும்.(2,7) உரிய சுக்கிரன் 11இல் நல்ல பலன் தருவார். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. (3,6) உரிய புதன் 12 இல் நன்மை செய்யார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். 4 இல் சனி இருந்தாலும் சுக்கிர பார்வை இருப்பதால் தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். 5 இற்கு உரிய சூரியன் ராசியில் இருப்பது மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகளின் செயல்பாடு திருப்தி தராது. (9,12) உரிய குரு, 7இல் நன்மை செய்வார். பிதா நலம். சயன சுகம் உண்டு. (10,11) உரிய குரு, 7இல் நன்மை செய்யார். தொழில்துறையில் பாதிப்பு இருக்கலாம். பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம். நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலன் தரமாட்டார். இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (2,5) உரிய புதன் 11இல் நன்மை செய்வார். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். 4இற்குரிய சூரியன் 12 இல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. (7,12) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோஷமானது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. எதிரிகளால் தொல்லை உண்டு. (8,11) உரிய குரு, 6இல் இருப்பது பாதகமானது. முதலீடுகளால் இலாபம் இருக்காது. நண்பர்களுக்கு நல்லபலன் இல்லை. (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது விசேடம். பிதா நலம். அதிஷ்டம் இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். பொது வாழ்வில் அமைதி இருக்கும். புதிய பொறுப்புக்கள் வரும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 10இல் நல்ல பலன் செய்வார். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தாய் நலம். நல்ல குடியிருப்பு அமையும். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். இரண்டில் சனி இருந்தாலும் சுக்கிரபார்வை இருப்பதால் வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். மூன்றுக்குரிய சூரியன் 11இல் இருப்பது விசேஷம். தகவல் தொடர்பு சீராக இருக்கும். உறவினர் மற்றும் அயலவர் விசுவாசமாக இருப்பர். (5,12) உரிய சுக்கிரன் 9 இல் நல்ல பலன் தருவார். சயன சுகம் உண்டு. பிள்ளைகளின் செயல்பாடு திருப்தி தரும். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும் (6,11) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (7,10) உரிய குரு 5இல் இருப்பது விசேஷம். தொழில்துறை முன்னேறும். திருமண வாய்ப்பு உண்டு. பொதுவாழ்வில் மதிப்பு உயரும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் விருச்சிகம் முதல் கும்பம் வரை சஞ்சரிப்பதால் வாரத்தின் மத்திய பகுதியில் பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 10 இல் இருப்பது விஷேசம். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்கும். (3,12) உரிய புதன் 9இல் நல்ல பலன் தரமாட்டார். சயன சுகம் இருக்காது. தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் அயலவர் உதவி செய்யார். (4,11) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது கூடாது. தாய்க்கு நலமில்லை.தனிப்பட்ட வாழ்வில் அமைதி குன்றும். நண்பர்களுக்கு கூடாது. (5,10) உரிய செவ்வாய் 12இல் இருப்பது பாதகமானது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் பாதிப்பு இருக்கும். பிள்ளைகளின் செயல்பாடு திருப்தி தராது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,9) உரிய குரு 4 இல் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கார். பிதாவுக்கு நலமில்லை (7,8) உரிய சனி ராசியில்இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

இராசிநாதன் சூரியன் 9இல் நல்ல பலன் தரமாட்டார். தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். பிரயாணவாய்ப்புக்கள் தாமதமாகலாம். (2,11) உரிய புதன் 8 இல் நல்லபலன் தருவார். வாகனசுகம் உண்டு. . கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்ல காலம். (3,10) உரிய சுக்கிரன் 7இல் நல்ல பலன் தரமாட்டார். தொழில்துறையில் பாதிப்பு இருக்கும். பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம். தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். (4,9) உரிய செவ்வாய் 11 இல் இருப்பது விசேஷம். பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,8) உரிய குரு 3 இல் இருப்பது பாதகமானது. முதலீடுகளால் லாபம் குறையலாம். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தராது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,7) உரிய சனி 12இல் இருப்பது பாதகமானது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். எதிரி களால் தொல்லை உண்டு. வேலையாட்கள் தொல்லை தருவர்.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 7இல் நன்மை செய்யார். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழவில் மதிப்பு குறையலாம். (2,9) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது பாதகமானது. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நலமில்லை. (3,8) உரிய செவ்வாய் 10 இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் குறையலாம். உறவினர் மற்றும் அயலவர் விலகி இருக்க விரும்புவர். தகவல்தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது சிறப்பானது. தாய் நலம், நல்ல இருப்பிடம் அமையும். திருமண வாய்ப்பு உண்டு. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். பகை விலகும். (5,6) உரிய சனி 11இல் இருப்பது சிறப்பானது.உடல் ஆரோக்கியம் உண்டு. தொழிலாளர் விசுவாசமாக இருப்பர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 12க்குரிய சூரியன் 8 இல் நல்ல பலன் தரமாட்டார். சயன சுகம் குறையலாம்.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பதும் சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். முதலீடுகளால் லாபம் உண்டு. (2,7) உரிய செவ்வாய் 9இல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. (3,6) உரிய குரு, ராசியில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்புபாதிக்கலாம். (4,5) உரிய சனி 10இல் நல்ல பலன்தரமாட்டார். தாய்க்குக் கூடாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை இருக்கும்.(9,12) உரிய புதன் 6 இல்நல்ல பலன் தருவார். பிதா நலம். சயன சுகம் உண்டு. 10இல் சனி இருந்தாலும் சுக்கிர பார்வை கிடைப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 8 இல் நல்லபலன் தரமாட்டார். இருப்பினும் தனது நட்சத்திரத்தால் பலன் குறைவு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (2,5) உரிய குரு 12இல் பலன் குறைவு. கையில் பணம் இருக்காது.பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (3,4) உரிய சனி, 9இல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (7,12) உரிய சுக்கிரன் 4 இல் இருப்பது விஷேசம். திருமணவாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. பகை விலகும். (8,11) உரிய புதன் நல்ல பலன் தரமாட்டார். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. முதலீடுகளால் லாபம் இருக்காது. தொழிலுக்குரிய சூரியன் 6இல் நல்ல பலன் தருவார். தொழில் துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11 இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். நல்ல இருப்பிடம் அமையும். (2,3) உரிய சனி 8 இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (5,12) உரிய செவ்வாய் 7இல் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,11) உரிய சுக்கிரன் 3 இல் நல்லபலன் தருவார். உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (7,10) உரிய புதன் 4 இல் நல்லபலன் தருவார். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு உயரும். திருமண வாய்ப்பு உண்டு. பகைவிலகும். 9 இற்குரிய சூரியன் 5 இல் இருப்பது பிதாவுக்கு நலம் இல்லை.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு, 10இல் இருப்பது நல்லபலன் செய்யாது. சயனசுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,11) உரிய செவ்வாய் 6 இல் இருப்பது விசேஷம். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். நல்ல இருப்பிடம் அமையும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது விசேஷம். தொழில்துறை முன்னேறும். பொது வாழ்வில் புகழ் நிலைக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். (6,9) உரிய புதன் 3இல் நல்ல பலன் தரமாட்டார். பிதாவுக்கு நலம் இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டார். 7 இல் சனி இருப்பினும் சுக்கிரப் பார்வை இருப்பதால் திருமணப் பலன் உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி,6 இல்இருப்பது விஷேசம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத்தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். சயன சுகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலன் தரமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் மதிப்புக் குறையலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,9) உரிய சுக்கிரன் இராசியில் இருப்பது நல்லது. பெற்றோர் நலம். தனிப்பட்டவாழ்வில் அமைதி இருக்கும். நல்ல இருப்பிடம் அமையும். (5,8) உரிய புதன் 2இல் நல்லபலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் குறையலாம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. முதலீடுகளால் இலாபம் குறையலாம். 7 இற்குரிய சூரியன் 3 இல் நல்ல பலன்தரமாட்டார். திருமண பலன் உண்டு

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| புதன் ராகு | சூரியன் | | செவ். |
| சுக்கிரன் | செவ்வாய் திருவாதிரை ராகு<br>சுக்கிரன் பூரட்டாதி குரு<br>புதன் ரேவதி புதன்<br>சூரியன் அச்சுவினி கேது<br>குரு விசாகம் குரு<br>சனி பூசம் சனி | | சனி |
| | | | |
| | | குரு | கேது |

சித்திரை 4 முதல் சித்திரை 10 வரை

சந்திரன் விருட்சகம் முதல் கும்பம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8இல்நல்லபலன் தரமாட்டார். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பதால் ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் மதிப்புக் குறையலாம். (2,9) உரியசெவ்வாய் 4இல் இருப்பது தீங்கானது. கையில் பணம் இருக்காது. வாகனசுகம் இல்லை. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை (3,8) உரிய சுக்கிரன் 12 இல் நல்லது. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்வர். தகவல் தொடர்பு தொடர்ச்சியாக இருக்கும். (4,7) உரிய புதன் ராசியில் நல்லபலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்டவாழ்வில் அமைதி இருக்காது. தாய்க்குக் கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது 6 இற்குரிய உரிய சூரியன் 2இல் இருப்பது நல்ல பலனைத் தராது உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டார். (11,12) உரிய சனி 5இல் இருப்பது நல்ல பலனைத் தரமாட்டார். சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை.

# மிருதங்க அரங்கேற்றம்



மிருதங்க வித்துவான் கலாபூஷணம் ஏ.விக்கிரமன் அவர்களின் மாணவனும், திரு.திருமதி. சிவஞானரஞ்சன் தம்பதிகளின் புதல்வனுமான செல்வன்.சிவஞானரஞ்சன் அமலனின் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவன்) மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்புப் பல்கலைக்கழக கல்விப்பீட பேராசிரியர் சோ.சந்திரசேகரம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் த.முத்துக்குமாரசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கிறார்கள்.


STYLO

EXPERT IN GENTS TAILORING SHIRTING, SUITING, BELTS, DENIIN TROUSERS, PRADYMADE SHIRTS, COSMETICS ETC.

No. 83,85. First Floor, Medern Market, Vavuniya. Tel: 024-2223665

Specialist In Wedding Suits

SUBASH HOTEL

Catering Service for all type of Occasions

சுபாஷ் உணவகம்

குருமன்காட்டுச் சந்தி, மன்னார் வீதி, குருமன்காடு வவுனியா.

அழைப்புக்களுக்கு: 0773 129 822

Dealers in: Citizen, Seiko, Casio, Q&Q, Omax Watches & T.V.Radio, VCR, VCD, DVD, Home Needs Washing Machine etc.

SHUMS PALACE T.P: 024-2222985, 024-2222408

SHUMRINS T.P: 024-2222408

CITIZEN T.P: 024-2221351

Ganesha JEWEL HOUSE

For Modern Distinctive and Genuine Quality Jewels

123, Bazaar Street, Vavuniya. Tel. 024-2222464

Yarl Ganesha JEWEL HOUSE 124, Sea Street, Colombo-11 Tel. 011-2336252

Ganesha JEWEL HOUSE 194, Kasthuriyar Road, Jaffna. Tel. 021-2225987

Mahaluxme GOLD HOUSE

Modern Fashionable and Honest Service

No. 132A. Bazaar Street. Vavuniya.

Tel.024-2224621. Mobile: 077-6059735

FG Fancy Garden

Fancy Good's Baby Care, Icing, Facial Imitation, Flowers, Bags, Gift and Electronic Items etc..

No. 182, Bazaar Street, Vavuniya, T.P.: 0773278030, 060 2240607

HERO HONDA

Authorised Dealer

N.S.RATNAM & BROS

# 6. FIRST CROSS STREET. VAVUNIYA.

T.P. 024-2221237. FAX. 024-2222116

STUDY IN கோலாலம்பூர் SAITO COLLEGE MALAYSIA

MULTIMEDIA | INTERIOR design | INFORMATION technology | GRAPHIC design

இன்று முதல் (சித்திரை 16 முதல் 19 வரை) மலேசிய அதிபர் திரு. Raj அவர்களை கொழும்பில் நேரடியாகச் சந்தித்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம்

- MINIMUM QUALIFICATION G.C.E (O/L)
- NO VISA INTERVIEW
- Credit transfer to EU countries

மலேசியாவில்: Raj (Chief Excecutive Officer) SAITO COLLEGE Malaysia. ☎ 0060122256494, ☎ 0060379547200

கொழும்பில்: Nicholas (B.Sc) - Director IT SOLUTION COLOMBO - 06. ☎ 2551148, 2551548

IT SOLUTION SRI LANKA

HOTLINE 071-7763564

EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...

யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772349999/88838

கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



இப்பத்திரிக்கை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, ஏப்ரல் 16 ஆம் திகதி வெளியிடப்பட்டது.